
76

# நவவித சம்பந்தம்



பேராசிரியர்
டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode


**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱


This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.




வேங்கடம் வெளியீடுகள்


AD-13 (PLOT. 3354)

அண்ணா நகர் – சென்னை-600 040



**VENKATAM PUBLICATIONS**
AD-13 (PLOT. 3354)
ANNA NAGAR - MADRAS-600 040.

# நவவித சம்பந்தம்




பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

## அடியேன் இதயத்தில்

மாறன் பராங்கதி தந்தடி
    யேனை மருட்பிறவி
மாறன் பரானகுழாத்துள் வைப்பான்
    தொல்லைவல் வினைக்கோர்
மாறன் பராமுகம் செய்யாமல் என்கண்
    மலர்க்கண் வைத்த
மாறன் பராங்குசன் வாழ்க என்
    நெஞ்சினும் வாக்கினுமே.

—பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்

---

1. திருவரங்கத்தந்தாதி-காப்பு (நம்மாழ்வார்-துதி)

# நவவித சம்பந்தம்

(ஆசிரியரின் 78-ஆம் அகவை நினைவாக)

விளக்கம் :


'அருங்கலைக் கோன்', 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
'தமிழ்ச் செம்மல்'

பேராசிரியர் **டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்**

முன்னாள் : பேராசிரியர்-தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்,
திருப்பதி-2.

இந்நாள் : தகுநிலைப் பேராசிரியர், தமிழ் இலக்கியத் துறை, மெரினா வளாகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.



விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**

184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.

முதற்பதிப்பு   பிப்ரவரி, 1994

© டாக்டர் எஸ். இராமலிங்கம்
(ஆசிரியரின் முதல் மகன்)
AD-13 (மனை எண்-3364)
அண்ணாநகர், சென்னை-600 040
தொ. பே : 62 11 583
பக்கம் : (XXXII + 144 = 176)

**விலை : ரூ. 20-00**

# NAVAVITHA SAMPANTHAM

---

அச்சிட்டது : சுந்தரம் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
133, பிடாரியார் கோவில் தெரு,
சென்னை-600 001.
தொ. பே : 514 357

நான்உன்னை அன்றி இலேன் கண்டாய்; நாரணனே !
நீஎன்னை அன்றி இலை.

— நான்முகன் திருவந்தாதி-7




ஏந்தூர்

**திரு. எ. சடகோபராமாநுஜ சுவாமிகள்**

*பிறப்பு : பிப்பிரவரி 19, 1913*

# அன்புப் படையல்

தளர்விலாத் தூயன்; எம்பிரான் பாத
    தாமரை மலர்ந்தநல் இதயன்;
அளவிலாப் புகழ்சால் வைணவ நூல்கள்
    அனைத்தையும் திறமுறக் கற்றோன்;
துவளம்நேர் ஏந்தூர் சாமிஎன் றறிஞர்
    தொழுதிடப் புதுவைவாழ் செம்மல்;
வளர்சட கோபரா மானுசன் என்னும்
    வள்ளலுக் குரியதிந் நூலே.



அருள்மிகு

ராதா-ருக்மிணி-கிருஷ்ணன்

# சிறப்புப் பாயிரப் பாமாலை

## (உயர்திரு அருட்கவி அரங்க சீநிவாசன்)

அகாரந்தான் எழுத்துமுதல் ஆதல் போல
 அச்சுதனே அனைத்துயிர்க்கும் 'அப்பன்' ஆவான்;
அகாரந்தான் எழுத்தொலிக்க உதவல் போல
 அவன்தானே உயிர்வாழக் 'காப்போன்' ஆவான்;
அகாரந்தான் இறுதியிலே மறைந்த நான்கன்
 உருபால்கைங் கரியம்அறி வித்த லாலே
அகாரந்தான் பெயரானோன் உயிர்கட் கெல்லாம்
 ஆண்டைஎனும் 'சேஷி' என அறிகின் றோமே. (1)

ஓங்காரத்து இடையில்எழுத்து உகாரம் ஆகும்;
 ஒருவாத அநந்யம்எனும் தேற்றே காரம்;
பாங்கான உயிர்அனைத்தும் மகளிர் ஆவார்;
 பகவன்அவன் பிரிக்கவொண்ணாக் 'கணவன்' என்னும்;
நீங்காத உயிர்ப்பெயராம் மகாரந் தானே
 'நினைந்தறியத் தகும்பிரமம்' அவனே என்னும்;
ஆங்காரம் அழிக்கின்ற நமஸ்ஸி னாலே
 அவன் 'உடையான்'; தாம் 'உடைமை' என்று
 தேர்வோம். (2)

நாராய ணாயஎனில் சொற்கள் மூன்றாம் ;
நாரந்தான் அசித்துச்சித்து அனைத்தி னுக்கும்
பேராகும் ; அவற்றினையே உடலாய்க் கொண்டு
பிரியாமல் இயக்குதலால் அவன்'ச ரீரி';
வேராகும் அயனம்எனல் இருக்கும் தானம் ;
விருப்பிடமாம் இருப்பிடத்துக்கு அவன்'ஆ தாரம்'
ஆராயின் எட்டெழுத்தே அதில்அ டங்கும் ;
ஆழ்பொருளோ அளவிலவாம் வியப்புஈ தன்றோ ? (3)

ஆயஎனல் நான்கன்உரு பாகும் ; இங்கே
அவ்வுருபை 'பொருட்டு'என்றும் சொல்லு வார்கள்;
தூயன்அவன் அநுபவிக்கும் பொருட்டே, சித்து
தோன்றியுளது எனப்பொருளை விரித்து நோக்கின்
மாயவனே அநுபவிக்க உரியன் ; அந்த
மாண்உரிமை வாய்த்தவன்பேர் 'போக்தா' ஆகும்;
நேயமொடுஒன் பதுவகையில் உயிர்கட் கெல்லாம்
நீங்காத உறவாகி நின்றான் ஈசன். (4)

இவ்வுறவை அவன்அறுக்க முனைந்திட் டாலும்
    இயலாது; நாம்அறுக்க இயல்வ துண்டோ?
எவ்வுறவும் அவன்ஆன தாலே அன்றோ
    எம்முடனே ஒருவனாய்த் தோன்று கின்றான்?
தவ்வுறவே சேய்குழியில் வீழ்ந்த தென்றால்,
    தாய் உடனே அக்குழியில் தாவி மீட்பாள்;
ஒவ்வுறவே பரன்அந்த வண்ணம் நம்முன்
    உறவுநினைந்து அர்ச்சைவடி வாயி னானே! (5)

ஐந்நிலைகள் தனக்குரிமை யாகக் கொண்ட
    அமலனுக்குப் பணிபுரியக் கடன்பட் டுள்ளோம்;
மெய்நிலைய மாம்அவன்அக் கடனைக் கொள்ள
    விழிஎதிரே நிற்கின்றான்; நாம்ஒப் போமேல்
தம்நிலையத் தூடுஅவனே அமர்ந்து கேட்பான்;
    நாம்அதற்கும் இசையோமேல் நமைவி டாமல்,
பைந்நிலைஸ்யப் பாயலிலே படுத்துக் கொண்டு
    பார்என்பான் என்கடனைந் தீர்என் பானே! (6)

வணிகன் கடல்கடந்து பொருளைத் தேடி

ஓர்இருப தாண்டின்பின் திரும்பி வந்தான் ;

பொருள்களைத்தன் இடத்தினிலே இறக்க லுற்றான் ;

போந்தொருவன் இடைமறித்து 'என்இடம்ஈது' என்றான்;

இருவருமே பூசலிட்டார் ; ஆங்கோர் ஆன்றோர்,

'ஏன்பூசல்'? 'நீர்தந்தை - மகனே' என்றார் ;

பொருதுபெரும் பூசலிட்ட கைத ளர்ந்து

பூசல்மறந்து உடல்தழுவிப் புளகுற் றாரே. (7)

இப்படித்தான் பவக்கடலில் மூழ்கி மாழ்கி

இறைஉறவை மறந்துகயிங் கரியம் விட்டுத்

தப்படி நாம் இருக்கின்றோம் ; ஒருநல் லாசான்,

தனியுறவு நுமக்குண்டு என்று உபதே சிக்க

மைப்படியும் பேனியன்நம் தலைவன் என்று

வாஞ்சையினால் அறிந்துகொண்டு சரண்அ டைந்தே,

"எப்படியும் பயன்படுத்து கென்போம்" ஆயின்

இப்படியில் பவக்கடல்தான் வற்றிடாதோ? (8)

நவவிதசம் பந்தத்தை நாம்அ றிந்தால்

ஞாலத்தார் சகோதரத்வம் சமத்வம், கொண்டே

அவ்விதம்ஒன் றில்லாமல் ஒருமைப் பாட்டை

அடைந்திடுவோம் ; உயிர்த்தொண்டே அரிதொண்
டாகும் ;

பவவிதனம் பறந்துவிடும் ; வீடு பேறுஇப்

பாரினிலே இக்கணமே பலிக்க லாகும் ;

தவஇதம்மிக் கெளிதாகும் ; சமயம் சாதி

சச்சரவாம் நச்சரவம் சாம்பிச் சாகும். (9)

ஆழ்வார்கள் தாம்அருளிச் செயல்என் கின்ற

அமுதொழுக விட்டனர், நாம் அமரர் ஆக ;

ஏழ்பாரும் புகழ்தரும்நம் பிள்ளை ஆதி

எண்ணிலர்நல் உரைஎழுதி உபக ரித்தார் ;

தாழ்வாதும் இலாதமணிப் பவள மாய், அத்

தனைஉரையும் இருப்பதனால், அதனைத் தேர்ந்தே

வாழ்வார விரும்புவர் பலகால் கற்றும்

மலைமுட்டும் குருவிளன மருண்டார் அம்மா ! (10)

ஆசார்ய இருதயமாம் மாறன் நெஞ்சை
    அருளான ராம்இளவல் அருளிச் செய்யத்,
தேசார் ஸ்ரீ வசனபூ டணத்தி னோடு
    தெய்விகநல் இரகசியம் ஈரொன் பானும்
தேசாறு கூடமுடன் உலகா சார்யர்
    நிலத்துளமர்க்குக் கொடையாக நேர்ந்து தந்தார்;
வாசமை கோசரமாய் அதனுள் நுட்பம்
    மன்னுலகில் முடவனுக்குக் கொம்புத் தேனே! (11)

விரியாத அரும்புகள்போல் உலகா சார்யார்
    விண்டபொருள் நுட்பத்தை நன்கு தேறிச்
சரியாக மலர்த்துதற்கே வியாக்யா தாக்கள்
    தாம்முயன்றும், தமிழ்மட்டும் அறிந்தோர் சற்றும்
தெரியாமல் தடுமாறும் நிலைக்கு இரங்கித்
    தேசிகராம் சுப்புரெட்டி யார்மு யன்றே,
எரியாத விளக்கதனை ஏற்றல் போல
    எளியதமிழ் நடையினிலே விளக்கி னாரே! (12)

பல்குரவர் பேருரைகள் அனைத்தும் கற்றுப்
பாரின் இயல் பொடுகலந்து தொகுத்துத் தந்தார் ;
நல்குரவு மொழியில்இலா முன்னை ஆழ்வார்
நவில்வேத நுணுக்கமெலாம் திரட்டித் தந்தார் ;
மல்குறவே சொல்வளரார்; சொல்சு ருக்கி,
வான் கதிரின் ஒளிதரல்போல் நுட்பம் ஈந்தார் ;
வெல்குவர்யார் தெளிவுஎளிமை நுண்மை பெய்து
விரைந்துபல நூல்எழுதும் திறனை அம்மா! (13)

வண்திருவண் பரிசாரத்து உடைய நங்கை
மகன்அருளும் வாய்மொழியைத் தேர்ந்து தேர்ந்தே
எண்தகுசீர் டாக்டர்என்ற ஏற்றம் பெற்றார் ;
இனியசட கோபன்செந் தமிழாம் நூலைக்
கண்டறிஞர் பாராட்டக் கண்டோம் ; நூற்றுக்
கணக்கான நூல் அருளிக் கருணை செய்தார் ;
மண்டலமேல் வைணவநூல் மட்டோ ! சைவ
மாசமய நூல்களும்தந்து உயர்வு பெற்றார். (14)

வேங்கடவன் பல்கலையின் கழகந் தன்னில்
மேலான தமிழ்த்துறைக்குத் தலைவர் ஆனார்;
பாங்குடைய அறிவியலே ஆதி நூல்கள்
படைத்தமையால் பரிசுபல பலவே பெற்றார்;
ஈங்குலகில் இவர்தொடாத் துறைகள் உண்டோ!
இளைப்புச்சோர் வுகள்இவரை எட்டிப் பாரா!
தேங்கலில்ஆ யிரம்பிறைகாண் பருவத் துள்ளும்
செயற்கரிய செய்து பெருஞ் சீர்மை கொள்வார். (15)

சுறுசுறுப்பில் எறும்பு! உரையில்செங் கரும்பு!
துரிசில்லா உறுதிஇரும்பு! உளம்அ ரும்பு!
விறுவிறுப்புஇங் கிவர்எழுத்தில் நடன மாடும்;
வெலவெலத்துச் சோர்வுகளோ அப்பால் ஓடும்;
குறுகுறுப்பாய் விளையாடும் குமரர் கூடக்
குதூகலத்தி லேஇவர்க்குத் தோற்றுப் போவார்;
கிறுகிறுப்பும் வியப்பும்நமக்கு உண்டாம் - இன்னார்,
கீர்த்தியும்சொல் நேர்த்தியும்கொள் பூர்த்தி கண்டே (16)

அட்டப்பிர பந்தம்போல் ஷட்ப்ர பந்தம்
    அருள்ஆள வந்தார்ஓர் இரட்டி யாரே !
கட்டப்ப படாதுஎளிமை தமிழ்க்குத் தந்த
    காவடிச்சிந்து அண்ணாமலைஓர் இரட்டி யாரே !
இட்டப்பட்டு எளியவர்க்கு ஈந்து, வெங்கை
    எழிற்கோவில் அமைத்தவர்ஓர் இரட்டி யாரே !
மட்டுப்ப டாதநவ விதசம் பந்தம்
    வழங்கியவர் நம்சுப்பு இரட்டி யாரே ! (17)

சம்பந்தம் இறைவனுக்கும் நமக்கும் காட்டும்
    தகவினால் உலகுக்கோர் ஆசான் ஆனார் ;
'வெம்பந்தம் நீக்குதற்குப் பகவன் அன்றி
    வேறில்லை' என்றுவழி காட்டி ஆனார் ;
கம்பம்தன் அன்னைஎன உதித்த ஈசன்
    கருணைஒளி பரப்பிஅருள் இரவி யானார் ;
அம்புஅந்த வாலியின்மேல் எய்த இராமன்
    அருட்குஇலக்கா கியசுப்பு இரட்டி யாரே ! (18)

சொல்லுக்கு நல்லமுதச் சுவையை ஏற்றிச்
    சுவைப்பார்க்கு விருந்தூட்டும் வேளாண் செல்வர் ;
நெல்லுக்குப் புதர்போல்வார் தாமும், ஈசன்
    நீர்மைக்குஇங் குரியர்என உறுதி சொல்வோர் ;
அல்லுக்குள் இரவிவர வழைப்ப தைப்போல்,
    அகத்துக்குள் அன்புவிளக் கேற்றும் நல்லார்;
மல்லுக்கு நிற்காமல் சொற்கள் எல்லாம்
    வசத்துக்குக் கொண்டுவரும் மாயச் சித்தர். (19)

ஆசாரி யரில்ஒருவர் இவரோ? அன்றி
    ஆழ்வாரைப் பதினொருவர் செயவந் தாரோ ?
பூசாரி யாய்த்தமிழை அருச்சித்து இங்கே
    புதுக்கோவில் வந்தமரச் செயவந் தாரோ ?
தேசாரத் திருநீறு பூசிச் சைவ
    தேசிகரை நால்வர்எனச் செய்வந் தாரோ ?
ஏசாமல் இருசமயத்து ஒருமைப் பாட்டை
    ஏற்படுத்தும் நம்சுப்பு இரட்டி யாரே ! (20)

திருத்துவதோ அழிப்பதுவோ அடித்த டித்துச்

சிந்தித்துச் சிந்தித்தே எழுது கோலை

இருத்துவதோ எழுதுவதை நிறுத்திக் கொஞ்சம்

எழுந்தோய்வு கொள்வதுவோ? கருத்துஇன் னொன்றைப்

பொருத்துவதோ செய்வதில்லை ; ஏடு தன்னில்

புதுமுத்தம் கோப்பதுபோல், எழுதிச் செல்லும்

கருத்துவளம் மிக்கவர்;நற் கலையில் வல்லார் ;

கனிந்தமனத் தினர்கூப்பு இரட்டி யாரே ! (21)

5, இராமபிரசாத் இல்லம்,
சின்னய்யாபுரம்,
செட்டிநாய்க்கன்பட்டி, P.O.,
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்,
பின். 624 305
பிப்பரவரி 2, 1994.

அரங்க. சீநிவாசன்



அருள்மிகு ஸ்ரீ வேணுகோபாலன்

# அணிந்துரை

பேராசிரியர் N. S. ராமநுஜ தாத்தாசாரிய சுவாமிகள்
முன்னாள் துணைவேந்தர்
இராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடம்,
திருப்பதி - 517 502.

வேதத்தையும் வேதாந்தமாகிய உபநிடதங்களையும் ஆதாரமாகக் கொண்டு தோன்றிய மதங்களுள் ஸ்ரீ வைஷ்ணவ மதம் ஒன்றில்தான் உலகத்தைப் படைத்துக் காக்கும் எம்பெருமானுக்கும், ஜீவாத்மாக்களுக்கும் சம்பந்தத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையில் 'உன்றன்னைப் பிறவிபெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்' 'உன்றன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது' என்று அருளிச் செய்தது கல் நெஞ்சையும் கரைக்க வல்லது. 'உன்றன்னோடுறவு நமக்கொழிக்க ஒழியாது' என்னாதே 'உறவேல்' என்றவிது மிகவழகியது. எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள உறவு ஒன்றன்று. பல என்பதைக் காட்டி நிற்கும் அச்சொல்லாற்றல். அவ்வுறவுகளில் சேஷ-சேஷி பாவம் ஸ்வஸ்வாமி பாவம் இவை மிகவும் முக்கியமானவை. சீவாத்மாக்கள் எல்லோரும் எம்பெருமானுடைய சொத்து; அவனுக்குச் சேஷபூதம். இதைக் கருத்தில் கொண்டே 'பாரார்த்தயம் ஸ்வம்ச்ருதி சதசிரஸ் ஸித்தமத்யாபயந்தீ' என்று திருப்பாவைக்குத் தனியன் அருளிச் செய்யா நின்ற பட்டர் அருளிச் செய்தார். பக்தி, ப்ரபத்தி இவைகள் பெரும் பேற்றுக்குக் காரணங்கள். எம்பெருமான் நமக்கு ஸ்வாமி, நம்மைக் காட்டிலும் உயர்ந்தவன் என்கிற எண்ணமிருந்தால்தான் அவனிடம் பக்தியைச் செய்ய முடியும். அவ்வாறே எம்பெருமானுக்குச் சேஷ பூதமாயும் ஸொத்தாயுமுள்ள நம் ஆத்மஸ்வரூபத்தை நமது என்று நினைத்துக் கொண்டு ஸம்ஸாரக் கடலில் ஆழ்ந்துள்ளோம். அக்கடலைத் தாண்டி மோக்ஷம் பெற விரும்பினால் அவனைச் சரணமாகப் பற்ற வேண்டும்.

அவனுக்குச் சொத்தாகிய ஆத்ம ஸ்வரூபத்தை உடையவனிடமே ஸமர்ப்பித்தலாகிய சரணாகதி என்கிற பிரபத்தியையும் ஸ்வஸ்வாமி பாவம் என்கின்ற; உறவை அறிந்தால்தான் செய்ய முடியும். ஆகையால் எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள உறவு முறையை அறிய வேண்டியது மிகவும் அவசியம். மற்றுள்ளாருடன் நமக்குள்ள உறவு வந்தேறியது; அழியக் கூடியது. எம்பெருமானுடன் உள்ள உறவோவென்றால் எம்பெருமான் நினைத்தாலும் அழிக்க முடியாது. இதைத்தான் ஆண்டாள் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றாள்.

திருவஷ்டாக்ஷர மஹா மந்திரத்திலிருந்து ஒன்பது வகையான உறவுகள் தேறுகின்றனவென்று பூர்வாசார்யர்கள் அருளிச் செய்கிறார்கள். திருமந்திரம் திருமாங்கல்யம் போன்றதென்று கூறுகிறார்கள். உலகில் ஒரு கன்னிகையின் கழுத்தில் தாலியேறினவாறே தம்பதிகளுக்குப் பதி-பத்னீ பாவமென்கிற ஓர் உறவு ஏற்பட்டதாகும். திருமந்திரமாகிற தாலி நமது கழுத்தில் ஏறினவாறே ஓர் உறவு அல்ல; ஒன்பது உறவுகள் ஏற்பட்டனவாகும். அந்த உறவுகளை நாம் சிந்தனையில் பதிய வைத்துக் கொள்வதற்காக நம் முன்னோர்கள்.

"பிதா ச ரக்ஷக: சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:

ஸ்வாமீ யாதாரோ மமாத்மா ச போக்தா ச ஆத்யமநூதித:"

என்றொரு ச்லோகமியற்றி உபகரித்துள்ளார்கள். ஆத்ய மநுவாவது மூலமந்திரம். அதில் ப்ரதிபாதிக்கப்பட்ட ரமாபதி:- ச்ரிய: பதியானவன் பிதாவாயும் ரக்ஷகனாயும் சேஷியாயும் பர்த்தாவாயும் ஜ்ஞேயனாயும் ஸ்வாமியாயும் ஆதாரனாயும் ஆத்மாவாயும் போக்தாவாயுமுள்ளான்—என்பது ச்லோகத்தின் பொருள். அவன் பிதாவானால் நாம் புத்திரனாகிறோம். அவன் இரக்ஷகனானால் நாம் இரக்ஷ்யனாகிறோம். அவன் போக்தாவானால் நாம் போக்யனாகிறோம். ஆக, இவை ஒன்பது வகையான உறவுகள். இவற்றைத் திருமந்திரத்திலிருந்து உய்த்துணரும் வழி:

முந்துற முன்னம் மூன்று உறவுகள். திருமந்திரத்தில் முதல் பதம் ப்ரணவம். அது அ உ ம என்று மூன்று பதங் கொண்டது. முதற்பதமான அகாரத்தில் பிதா-புத்ரபாவம், ரக்ஷ்ய-ரக்ஷகபாவம், சேஷ-சேஷி பாவம் என மூன்று உறவுகள் தோன்றும். ''அகாரோவை ஸர்வா வாக்'' என்றும் ''அகர முதலவெழுத்தெல்லாம்'' என்றும் சொல்லுகிறபடியே அகார மானது எல்லா எழுத்துகளுக்கும் முதன்மையாயிருந்து கொண்டு, தனக்குப் பொருளான எம்பெருமான் உலகுக் கெல்லாம் முதல்வன் என்று காட்டுதலால் அகாரத்தில் ஏற்பட்டவுறவு ஜன்ய-ஜனக பாவம் அல்லது பிதா-புத்ரபாவம் என்பது. அந்த அகாரமானது ''அவ ரக்ஷணே'' என்கிற தாதுவிலிருந்து தேறினதாகையாலே எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்றதாகும். இதனால் ரக்ஷ்ய-ரக்ஷக பாவமாகிற உறவு தோன்றுகிறது. அகாரத்தின் மேலுள்ள நான்காவது வேற்றுமை லோபித்ததாகக் கொள்ளப் படுகிறது. அந்த வேற்றுமையானது ''அவனுக்குச் சேஷப்படுகை'' என்கிற பொருளைக் காட்டுதலால் சேஷ- சேஷி பாவம் என்கிற உறவு தேறிற்று. ஆக, அகாரத்தில் மூன்று உறவுகள்.

இனி அடுத்துள்ள உகாரமானது அவதாரணப் பொருள தாய் எம்பெருமானுக்கே சேஷப்பட்டது என்று காட்டுதலால் '' கொண்டானையல்லா லறியாக்குலமகள்போல் '' என்கிற படியே பதி-பத்னீ பாவமாகிய உறவு தேறுகின்றது. உகாரத் தற்கு அடுத்துள்ள மகாரமானது '' மந ஜ்ஞானே '' என்கிற தாதுவிலிருந்து தேறினதாகையாலே ஜ்ஞாதாவான ஆத் மாவைச் சொல்லுதலால் ஜ்ஞாத்ரு-ஜ்ஞேயபாவம் என்கிற உறவு தேறிற்று. எம்பெருமான் அறியப்படுபவன்; ஆத்மா அறிகிறவன் என்றவாறு '' ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு '' என்கிற பொய்கையாழ்வார் பாசுரம் இங்கு காணத்தக்கது.

மகாரத்திற்குப் பிறகு உள்ள நம: பதத்தினால் தன்னை இரக்ஷித்துக் கொள்வதில் தனக்கு எவ்விதமான உரிமையு மில்லை என்று காட்டுவதால் ஆன்மாக்களெல்லாம்

எம்பெருமானுடைய சொத்து என்று ஏற்படுகிறது. இதனால் ஸ்வஸ்வாமி பாவம் என்கிற உறவு தேறுகிறது. எம்பெருமான் ஸ்வாமி; நாம் அவன் சொத்து.

இனி, நாராயண பதத்திற்கு தத்புருஷஸமாஸமென்றும், பஹுவ்ரீஹிஸமாஸம் என்றும் இருவகையான ஸமாஸங்கள் கொள்ளப்பட்டு நாரபதார்த்தமான ஸகல வஸ்துக்களுக்கும் எம்பெருமான் ஆதாரம் என்றும் அந்த ஸகல வஸ்துக்களையும் தான் ஆதாரமாகி உடையவன் என்றும் தெரிந்து கொள்கிறோம். ஆதலால் நாராணாம் அயனம் என்கிற தத்புருஷ ஸமாஸத்தால் ஆதாராதேயபாவம் என்கிற உறவு தேறுகின்றது.

எட்டாவது உறவு சரீர - ஆத்மபாவம். நாராயண சப்தத்தில் நாரங்கள் பகவானிடத்திலே இருக்கின்றன என்பது தத்புருஷனால் ஸித்திக்கிறது. நாரங்களிலே பகவான் உளன் என்பது பஹுவ்ரீஹியால் ஏற்படுகிறது. அவற்றிலே இவன் இருப்பதாவது அவற்றை உடலாகக் கொண்டு தான் அவற்றுக்கு உயிராக இருப்பதேயாதலால் சரீர-ஆத்ம பாவம் ஸித்திக்கிறது. ஸகல சேதந அசேதங்களும் சரீரம்; அவன் சரீரி.

ஒன்பதாவது உறவு போக்த்ரு - போக்யபாவம். இது நாராயண பதத்திலுள்ள நான்காவது வேற்றுமையால் ஏற்படுகிறது. நாராயணனுக்குச் செய்யப்படுகின்ற கைங்கர்யத்தின் போகமும் அவனுக்கேயன்றி இந்த ஜீவனுக்கில்லை. என்று காட்டுதலால் போக்த்ரு - போக்யபாவம் என்கிற உறவைத் தெரிவிக்கின்றது. எம்பெருமான் போக்தா; ஜீவாத்மா போக்யன். ஜீவாத்மாவை போக்தாவாகவும் எம்பெருமானை போக்யனாகவும் கொள்வதும் ஒருபுடை உண்டெனினும் திருமந்திரத்தில் வடிகட்டின பொருள் முந்துறக் கூறினதே யாகும் என்பர். ஆக, திருமந்திரத்தினால் நவவித (ஒன்பது விதமான) ஸம்பந்தங்கள் தெரியவந்தன.

ஸ்ரீவைஷ்ணவர்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய மேற்கூறிய எம்பெருமானுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் உள்ள ஒன்பது விதமான உறவுகளைப் பற்றித் தனியாகவும் விரிவாகவும் ஆராய்ச்சி முறையிலும் இதுவரை யாராலும் நூல் இயற்றப்பட்டு வெளிவரவில்லை. ஸ்ரீமான் பேராசிரியர் டாக்டர். ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் இக்குறையை நீக்க "நவவித சம்பந்தம்" என்கின்ற ஒப்பற்ற விரிவான நூலை இயற்றி இப்பொழுது வெளியிடுகின்றார். இஃது ஓர் ஒப்பற்ற பொக்கிஷமாகும்.

இந்நூலில் பத்து அதிகாரங்கள் உள்ளன. முதல் அதிகாரத்தில் பொதுவாக ஒன்பது விதமான சம்பந்தங்களைப் பற்றி விளக்கம் தருகிறார். பிறகு ஒன்பது அதிகாரங்களில் ஒவ்வொரு சம்பந்தத்தையும் பற்றி விளக்கம் தருகிறார். அது திருமந்திரத்தில் பெறப்படும் விதத்தை முதலில் விளக்குகிறார். பிறகு ஆழ்வார்களுடைய பாசுரங்களை மேற்கோளாகக் காட்டி எந்த எந்த ஆழ்வார்கள் எந்த எந்த சம்பந்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்பதை மிகவும் விளக்கமாகவும் ஆராய்ச்சி முறையிலும் கூறுகின்றார். இதைப் படிக்கப் படிக்க மிகவும் ஆர்வம் உண்டாகின்றது. இம்மாதிரியான நூல் இதுவரை வெளிவரவில்லை என்று கூறுதல் மிகையாகாது. ஏற்கனவே ரெட்டியார் அவர்கள் வைணவத்தைப் பற்றிப் பல உயர்ந்த நூல்களை இயற்றி வெளியிட்டுப் புகழ் பெற்றவர். அவருடைய ஆழ்ந்த அறிவின் திறனும் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் பூராவையும் நுட்பமாக ஆராய்ந்து அநுபவித்துள்ளமையும் இவருடைய ஒவ்வொரு வரியிலும் வெளிப்படுகின்றது. மேலும் பகவத் விஷயம் எனப்படும் ஈடு முதலிய நூல்களில் புகுந்து அவற்றுள் கிடந்த இரத்னங்களை நமக்குத் தருகிறார். இந்த நூல் எல்லோருடைய கையிலும் இருப்பது அவசியம்.

இறைவன் அருளால் ரெட்டியார் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து எல்லோரும் பயன் பெறும்படியான இம்மாதிரியான

ஒப்பற்ற நூல்களை இயற்றி வெளியிட்டுக் கொண்டு தானும் இன்புற்று ஏனையோர்களையும் இன்புறச் செய்து ஒளி பெற வேண்டும் என்று திருவேங்கடத்தானை வேண்டி நிற்கின்றேன்.

—N. S. ராமானுஜ தாத்தாச்சாரிய ஸ்வாமிகள்

6-12-17B,
கனகபூஷணம் லே அவுட்,
திருப்பதி-517 502,
15-2-1994.

# நூல் முகம்

கண்ணா ரிரம்பெற்ற கோன்உல
    கோங்கிய கற்பகக் காத்
தண்ணாரும் பூவையும் வேண்டிலம் ;
    வேண்டித் தலைக்கணிப்பூ
எண்ணார்க் கிருளன்ன வேங்கடத்
    தான்தொண்டர் ஏவற்றொழில்
பண்ணாசைத் தொண்டரவர் தொண்டர்
    தொண்டர் பதமலரே[1].

—முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்

'நவவித சம்பந்தம்'[3] என்ற இந்நூல் எழுந்ததே ஒரு சிறு வரலாற்றை உட்கொண்டது. 1993-சூலையில், வந்தவாசி நாதமுனிகள் சபையின் ஒன்பதாவது மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பை அளித்தான் ஏழுமலையப்பன். 'தோழி, தாய், மகள்' என்ற பொருள் பற்றி உரையாற்றினேன். கற்றுத்துறை போய வித்தகர் ஏந்தூர் சுவாமிகள் 'நவவித சம்பந்தம்' பற்றி ஆற்றிய சொற்பொழிவையும் செவிமடுக்க வாய்ப்பு ஏற்பட்டது. சுவாமிகள் மிக அற்புதமாகப் பேசினார்கள். சுவாமிகளின் ஞானத்தை எட்டிப்பிடிக்கும் ஆற்றல் சபையோருக்கு இல்லாமையாலும், சபையோர் மனநிலைக்கு சுவாமிகள் இரங்கி வர முடியாமையாலும் சுவாமிகளின் பேச்சு சபையினருக்கு எட்டாப் பழமாகவே இருந்தது. சபையில் எழுந்தருளியிருந்த கரந்தை தாமோதரன் என்ற வைணவச் செல்வர் இந்த இரகசியத்தை எவரும் புரியும் வண்ணம்

2. திருவேங்கடக் கலம்பகம்-100

3. பிள்ளை உலக ஆசிரியரால் அருளிச் செய்யப் பெற்ற அஷ்டாதச ரகசியம் நூலிலுள்ள 11-ஆவது இரகசியம். பரிபாஷைச் சொற்கள் மலிந்த செறிவான மணிப்பிரவாள நடையில் 6½ பக்கத்தில் அமைந்தது.

எழுதக் கூடியவன் அடியேன் ஒருவனே என்று என் பெயரைக் குறிப்பிடவே, சபையோர் இத்தெய்வப் பணியை எனக்கு இட்டனர். ஒருவித பெருமித உணர்வால் ஒப்புக்கொண்டேன். பொருளின் அருமைப் பாட்டையும் அடியேனின் அறிவுக் குறைவையும் எண்ணினேன் இல்லை.

மாநாடு முடிந்து சென்னைக்குத் திரும்பிய அன்றே திருப்பணியில் இறங்கினேன். எம்பெருமான் ஏழுமலையான் திருவருளும், எம்பெருமானார் பேரருளும், பிள்ளை உலகாசிரியரின் ஆசியும் துணை நிற்க, நாடோறும் பத்து மணி நேரம் வீதம் நாற்பது நாட்கள் உழைத்து நூலை ஒருவாறு நிறைவு செய்தேன். உடனே முறைப்படி திருமலை-திருப்பதி தேவஸ்தானத்திற்கு மானியம் கோரி விண்ணப்பித்தேன். ஏழுமலையான் கடைக்கண் திறக்கவே மானியமும் கிடைத்தது. மூட்டு வழிச் செலவில் மூன்றில் இரண்டு பங்கிற்கு உதவியது. மீதிப்பணத்தை அடியேன் பொறுப்பாகக் கொண்டு நூல் ஒருவாறு அச்சு வடிவம் பெற்றது.

இந்த நூலைச் செவ்விய முறையில் அச்சிட்டு உதவிய சுந்தரம் ஆர்ட் பிரிண்டர்ஸாருக்கும் குறிப்பாக அதனைச் செவ்விய முறையில், கண்ணும் கருத்துமாக அச்சிட்டு உதவிய மானேஜர் திரு. M. பலராம் ரெட்டியார் அவர்கட்கும், இந்த நூல் அச்சுத் தொடங்கிய முதல் அச்சு முடியும் வரை ஈட்டு படிவங்கள், பக்கப் படிவங்கள் முதலிய பல நிலைகளில் கருத்தூன்றி, பார்வைப் படிகளை நுணுகி, பிழைபார்த்து நூல் செப்பமுற வடிவமைப்பிற்கும் துணையாய் நின்ற செல்வி M. B. சியாமளா தேவி, M.A., M.Phil. (Ph.D.) அவர்களுக்கும் (திரு. M. பலராம் ரெட்டியாரின் அருமைப் புதல்வி) நன்றி என்றும் உரியது, எழில் கொழிக்கும் முறையில் அட்டை ஓவியம் வரைதல், அச்சுக் கட்டை தயாரித்து மூன்று வண்ணங்களில் அச்சிட்டு உதவிய ஓவிய மன்னர் திரு. P. N. ஆனந்தன் அவர்கட்கும், நூலைச் கவின் பெறக் கட்டமைத்துத் தந்த அருமைத் தம்பி V. திருநாவுக்கரசுக்கும் என் உளங் கனிந்த நன்றி என்றும் உரியது.

திரு. அரங்க சீனிவாசனார் 29-9-1929-ல் பர்மிய நாட்டில் பெரு மாவட்டத்திலுள்ள சுவண்டி என்ற சிற்றூரில் உழவர் குடியில் பிறந்தவர். சிறு வயதிலேயே இலக்கிய ஆர்வம் அரும்பியது. கவிதை இயற்றும் ஆற்றலும் அரும்பியது. இவரது இருபது அகவைக்குள் பத்து நூல்கள் வெளி வந்தன. 1942—2-ஆம் உலகப் பெரும் போரின்போது கால் நடைப் பயணமாகவே தாய் நாடு புறப்பட்ட இவர் பல இடையூறுகளுக்கும், நோய்களுக்கும், குண்டர்களின் தாக்குதல் களுக்கும் ஆளாகினமையால் கௌகாத்தியில் பல திங்கள் மருத்துவ மனையில் தங்க நேர்ந்தது. "காந்தி காதை" என்ற பெருங்காப்பியம் படைத்து பாரதீய வித்யா பவனம் நிறுவிய இராஜாஜி முதல் நினைவு பரிசும், தமிழக சிறப்புப் பரிசையும் பெற்றார். பேரறிஞர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பெருந்திருவாளர். திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் இவரது கவனத்திற்கு இலக்கானார்கள். இதனால் பரிசுகளும், பாராட்டுகளும் வந்து குவிந்தன. "காவடி சிந்தும் கவிஞன் வரலாறும்" என்ற வரலாற்று ஆய்வு நூல் தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது. நாற்பதிற்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். அவற்றுள் வங்கத்துப் பரணி, வழிகாட்டும் வான் சுடர், காவடி சிந்தும் கவிஞன் வரலாறும் கடவுள் வரலாறும் முதலியவை குறிப்பிடத்தக்கவை.

பல நிறுவனங்களின் பாராட்டுகள், பரிசுகள், ஆசிகள் பெற்ற புண்ணியனார். இவற்றுக்கு மேலாகி எவருடனும் இனிமையாகவும், எளிமையாகவும் பழகுபவர். மனத்தினாலும் பிறருக்குத் தீங்கு எண்ணாதவர். 1979 முதல் இவர் எனக்கு நன்கு அறிமுகமானவர். இவரது அடக்கமுடமை, புலமைச் செருக்கு இல்லாமை, இன்முகத்துடன் பழகும் தன்மை என்னைக் கவர்ந்த பெருங்குணங்கள். இவரது புலமைக்கும், அடக்கமுடைமைக்கும் அரசவைக் கவிஞர் என்ற முறையில் இவரைத் தமிழ் நாடு அரசு ஏற்றுக் கொண்டு பெருமைப் படுத்தி யிருக்க வேண்டும்; தவற விட்டது. அரசின் கவனமின்மை

இனிமேல்யாகிலும் தமது முதுமைக் காலத்தில் வாழ்க்கை வசதியில்லாது தவிப்பவர் ஆதலால், இன்றும் இன்னும் அவருக்கு 'அரசவை கவிஞர்' என்ற விருதையும் வழங்கி அவர் வாழ்நாள் வரை தக்க ஊதியமும் கொடுத்து காப்பது அரசின் கடமை. குறிப்பாக, ஈத்துவக்கும் இன்பம் கண்ட தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இவற்றை உணர்ந்து வாழ்த்துவார்கள் என்ற நம்பிக்கையுண்டு. இத்தகைய பெரியார் இந்த வேதாந்த நூலுக்குச் சிறப்புப் பாயிரமாலை வழங்கி என்னைச் சிறப்பித்தமைக்கு அடியேனது இதயம் கலந்த நன்றி என்றும் உரியது.

இந் நூலுக்கு அணிந்துரை நல்கிய பேராசிரியர். வித்யா வாரிதி. N. S. இராமாநுச தாத்தாசாரிய ஸ்வாமிகள் திருப்பதியில் பணியேற்றிய நாள் முதல் (ஆகஸ்டு 1960) அடியேனுக்கு நன்கு அறிமுகமானவர். தமிழில் தனித் தமிழ் வித்துவான் தேர்வு பெற்றவர். வடமொழியில் நான்கு சாஸ்திரத்தில் சிரோமணி பட்டம் பெற்றவர். தவிர நியாயம் வியாகரணம் வேதாந்த சாத்திரங்கள் இவற்றுக்கு உரையெழுதி வெளியிட்டவர். ஸ்வாமி தேசிகன் அருளிய நியாய சித்தாஞ்சனம் என்ற வடமொழி நூலை தமிழில் மொழி பெயர்த்தார். துணைப் பேராசிரியர், முதல்வர் என்ற பல நிலைகளில் பணியாற்றி நற்பெயரும், நற் புகழும் எடுத்தவர். தம்முடைய திறமையினாலும் உலகத்து ஒழுக்க சீலத்தினாலும் மிகமிக உயர்ந்து மத்திய அரசின் கவனத்தையும் கவர்ந்தவர். இதனால் திருப்பதியில் மத்திய அரசு நிறுவிய இராஷ்டிரிய சமஸ்கிருத வித்யா பீடம் (வடமொழி பல்கலைக் கழகம்) என்ற நிறுவனத்திற்கு இவரை முதல் துணை வேந்தராக நியமனம் செய்தது. இவரது நியமனத்தினால் துணை வேந்தர் பதவியும் பெரும் புகழ் பெற்றது. பல்கலைக் கழகமும் இவரது இருப்பினால் நாடு புகழ் எய்தியது. 'வடகலை' வைணவ மரபைச் சார்ந்தவராயினும் தென்கலை மரபையும் போற்றிக் காப்பவர். அங்ஙனமே, பிறசமயங்களிலும் காழ்ப்புக் கொள்ளாது அன்புடன் அக்கொள்கைகளை ஏற்பவர்.

உலகில் படித்தவர்கள், அறிஞர்கள், வல்லுநர்கள் இவர்கள் நிறைய உள்ளனர். கற்றடங்கிய சான்றோரைக் காண்டல் அரிது. இவர் ஒரு நிறை குடம். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்ற வள்ளுவத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவர். "பணியுமாம் என்றும் பெருமை" என்ற வள்ளுவர் வாய் மொழிக்கு இக்கணமாகத் திகழ்பவர். 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற வள்ளுவத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவர். அடியேன் திருப்பதி சென்றது முதல் அடியேனின் உழைப்பை யும், வளர்ச்சியையும் நன்கு அறிந்தவர். அவர்தம் வளர்ச்சி யையும் அறிய அடியேனுக்கு வாய்ப்புகள் இருந்தன. இத்தகைய பெரியார் அடியேனது இந்த நூலுக்கு அணிந்துரை அருளியது இந்நூல் பெற்ற பேறு; அடியேனது பேறுமாகும். அணிந்துரை நல்கிய இந்த சீலருக்கு அடியே னுடைய இதயம் கலந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூல் எழுதத் தொடங்கிய அன்றே எத்தூர சாமியவர்கட்கு அன்புப்படையலாக்க எண்ணினேன். இறை யருளால் அது நிறைவேறுகின்றது. இந்தச் சாமி தென்னார்க் காடு மாவட்டம் எத்தூர் என்ற சிற்றூரில் தோன்றியவர்; பெற்றோருக்கு ஒன்பதாவது பிள்ளை. திண்ணைப் பள்ளியில் முறையாகப் பயின்றது இரண்டாம் வகுப்புவரை தான். இள வயது முதல் சமயக் கல்வியில் நாட்டம். சிறுவயதிலேயே இராமாநுச நூற்றந்தாதி மனப்பாடம். இராமாயணம் • பாரதம் முதலிய உரைநடை நூல்களில் ஆழங்கால் பட்டுப் பயின்றவர். தனிமையில் திண்டிவனம் பழநிசாமி சிவாச்சாரி யாரிடம் ஐந்திலக்கணம் பயின்றவர். பல வைணவர்களிடம் முமுட்சுப்படி, தத்துவதிரயம், பகவத்விஷயம் முதலிய நூல் களைப் பாடங்கேட்டுக் காலட்சேபம் செய்தவர். பன்னிரண்டு வயதில் பஞ்ச சம்ஸ்காரம் செய்யப் பெற்றவர். சுயமாக அஷ்டப் பிரபந்தம் உட்படப் பல இலக்கியங்கள் பயின்றவர். கலைமகள் கடைக்கண் நோக்காலும் ஆராதன தெய்வம் ஸ்ரீ வேணுகோபால் சுவாமியின் திருவருளாலும் கவிதை இயற்றும் ஆற்றல் பெற்றவர். திருவாய்மொழிக் கலம்பகம்,

அலர்மேல் மங்கையந்தாதி, சடகோப நான்மணி மாலை முதலிய கவிதை நூல்களின் ஆசிரியர். திருவாய்மொழி உரை இவர்தம் அண்மைக் காலக் கைங்கரியம். பல வைணவ மேடைகளில் வைணவம் பற்றி உரையாற்றி வருபவர். அகந்தைக் கிழங்கை அகற்றியவர். அடக்கம் இவர்தம் உயர் பண்பு. 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற வள்ளுவர் வாய் மொழிக்கு இலக்கியமாகத் திகழ்பவர். அடியேன்பால் பேரன்பு கொண்டவர்; பல ஐயங்களைத் தெளிவித்தவர். இத்தகைய பெரியார் ஏந்தூர் சுவாமிகட்கு இந்த நூலை அன்புப்படையலாக்கிப் பெறற்கரிய பேறு பெற்றவனாகின்றேன். இவருடைய ஆசியால் மேலும் வைணவ கிரந்தங்களில் புத்தொளி பெறுவேன் என்ற நம்பிக்கை உண்டு.

"தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்தமாயன்" (திருவாய். 7.9:2) என்னுள்ளே நின்று இந்நூலை எழுத வழி காட்டினான். என்னுள்ளே நிரந்தரமாக எழுந்தருளியிருந்து கொண்டு எனக்கு எலலா நலங்களையும் ஈந்துவரும் 'வேங்கடம் மேவிய விளக்கு' இந்நூல் வெளிவரவும் ஓரளவு துணை செய்தான். அப்பெருமான் திருவடிகளைப் போற்றிச் சரண் அடைகின்றேன்.

வெற்பென்று வேங்கடம் பாடினேன்; வீடுஆக்கி
நிற்கின்றேன்; நின்றுநினைக் கின்றேன்; கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன் காண்!

—திருமழிசையாழ்வார்

'வேங்கடம்'
AD-13 (மனை எண். 3354)
அண்ணா நகர்,
சென்னை-600 040.
18—2—1994.

ந. சுப்பு ரெட்டியார்

---

4. நான்முகன் திருவந்தாதி-40

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | அன்புப் படையல் | ... | v |
| | சிறப்புப் பாயிரப் பாமாலை | ... | vi |
| | அணிந்துரை | ... | xvii |
| | நூல்முகம் | ... | xxiii |
| | | | பக்கம் |
| 1. | நவவித சம்பந்தம் | ... | 1 |
| 2. | தந்தை-தனயன் உறவு | ... | 12 |
| 3. | இரட்சக-இரட்சய சம்பந்தம் | ... | 24 |
| 4. | சே-ஷீசேஷ உறவு | ... | 38 |
| 5. | நாயக-நாயகி சம்பந்தம் | ... | 55 |
| 6. | ஞாதா-ஞேயன் உறவு | ... | 84 |
| 7. | சுவம்-சுவாமி சம்பந்தம் | ... | 92 |
| 8. | சரீர-சரீரி பாவனை | ... | 99 |
| 9. | ஆதார-ஆதேய சம்பந்தம் | ... | 111 |
| 10. | போக்தா-போக்கிய சம்பந்தம் | ... | 119 |
| 11. | பின்னிணைப்பு 1 | ... | 134 |
| 12. | பின்னிணைப்பு 2 | ... | 136 |
| 13. | பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் | ... | 140 |
| 14. | பிழை திருத்தம் | ... | 144 |



அருள்மிகு இராதையும்-கிருஷ்ணனும்

# 1. நவவித சம்பந்தம்

சம்பந்த ஞானம் : நவவித சம்பந்தத்தை விளக்கத் தொடங்குவதற்குமுன் சம்பந்த ஞானம்பற்றித் தெளிவு வேண்டுமாதலால் அதனை முதலில் விளக்குவேன்.

எம்பெருமானாகிய சர்வேசுவரனுக்கும் ஆன்மகோடிகளாகிய நமக்கும் உள்ள உறவு முறையைத் அறிவதைச் 'சம்பந்த ஞானம்' எனறு கூறுவர். இந்தச் சம்பந்த ஞானம் இல்லாத காரணத்தால் நாம் சர்வேசுவரனை விட்டுப் பிரிந்து பிறவிப் பெருங்கடலில் ஆழ்ந்து நீந்தமுடியாமல் ஆத்யாத்மிகம்[1] ஆதிபெளதிகம்[2] ஆதிதைவிகம்[3] என்ற மூவகைத் துன்பங்களால் உழன்று கொண்டிருக்கின்றோம். இவ்வகைத்

---

1. ஆத்யாத்மிகம் நம் உடலையும் மனத்தையும் பற்றி வரும் துன்பங்கள். இது சரீர ஆத்யாத்மிகம், மன ஆத்யாத்மிகம் என இருவகைப்படும். முன்னது உடலைப் பற்றிக் கொண்டு வரும் தலைவலி, காய்ச்சல், குட்டம், இருமல் முதலிய பிணிகள். பின்னது காமம், குரோதம், பொறாமை முதலிய குணங்கள்.

2. ஆதிபெளதிகம்—பிசாசம், தீய பிராணிகள், மனிதர், இராக்கதர் முதலியவர்களால் நேரிடும் துன்பங்கள்.

3. ஆதிதைவிகம் — காற்று, மழை, வெயில், இடி, மின்னல் முதலியவற்றால் தெய்வ சங்கற்பமாய் உண்டாகும் துன்பங்கள்.

துன்பங்கட்குக் காரணம் சாத்திரங்களில் கூறப்பெறும் அர்த்த பஞ்சக ஞானம்[4] இன்மையேயாகும். இந்த ஞானம் இல்லாத பிறப்பு வீணான பிறப்பு ஆகும்.

இந்த சம்பந்த ஞானம் உள்ள இடத்தில் எம்பெருமான் விரும்பி யடைவான். ஆதலால், சம்பந்த ஞானம் அவன்மீது அந்த எம்பெருமான்மீது — விருப்பம் கொள்வதற்கு உரிய தாகின்றது. இந்தக் கருத்தைத் திருமழிசையாழ்வார் மிக அற்புதமாகப் புலப்படுத்துகின்றார்.

நின்ற தெந்தை ஊர கத்து
 இருந்த தெந்தை பாட கத்து
அன்று வெஃக ணைக்கி டந்த(து)
 என்னி லாத முன்னெ லாம்
அன்று நான் பிறந்தி லேன்
 பிறந்த பின் மறந்தி லேன்
நின்ற தும்இ ருந்த தும்
 கிடந்த தும் என் நெஞ்சுளே.[5]

இந்தப் பாசுரத்தின் கருத்தைத் தெளிவாக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது. உலகியலில் ஒரு நிகழ்ச்சியை நோக்குவோம். ஒருவன் கடன் பட்டிருக்கின்றான். அக்கடனைத் திருப்பிப் பெறுவதற்காகக் கடன் கொடுத்தவன் வீட்டிலே வந்து கேட்கின்றான். அப்படி வருகின்றவன்

4. அர்த்த பஞ்சகம் — (1) ஆன்மாவின் இயல்பு, (2) ஈசுவரனது இயல்பு, (3) ஆன்மா அடையும் பயன், (4) அப்பயனை அடைதற்குரிய வழிமுறை, (5) அப்பயனை அடைவதற்குத் தடையாய் உள்ளவைகள் இவற்றைக் குறித்து விளக்கமாய்த் தெரிந்து கொள்வதே 'அர்த்த பஞ்சக ஞானம்' எனப்படும்.

5. திருச். விரு. 64

முதலில் சில நாட்கள் நின்றவண்ணம் கேட்டுவிட்டுப் போகின்றான் ; பலன் இல்லை. அடுத்து வருகின்ற சில நாட்களில் வாங்கினவன் திண்ணைமீது உட்கார்ந்து கடனைத் திருப்பித் தருமாறு நிர்ப்பந்தித்துப் போவான். இவ்வளவிலும் அவன் மிசையாவிடில் "கடனைத் தீர்க்காவிடில் நான் போவதில்லை" என்று படுக்கையாகத் திண்ணையில் படுத்து நிர்ப்பந்திப்பான். இப்படியாக எம்பெருமானும் நம்போன்ற ஆன்ம கோடிகள் செலுத்த வேண்டிய கைங்கரியக் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக ஓரிடத்தில் (ஊரகத்தில்)[6] நின்று பார்க்கின்றான். மற்றோரிடத்தில் (பாடகத்தில்)[7] வீற்றிருந்து பார்க்கின்றான். இன்னுமோரிடத்தில் (திருவெஃகாவில்)[8] சாய்ந்து பார்க்கின்றான். "இப்படிச் செய்ததெல்லாம் நான் எதிர் நோக்கி இல்லாத காலத்தில். நித்தியவிபூதி - லீலா விபூதிகட்கு நாதனான எம்பெருமான் சம்சாரியான எனக்கு ருசி பிறவாதகாலமெல்லாம் ருசி பிறப்பிப்பதற்காக நின்றான், இருந்தான், கிடந்தான். என்னிடம் ருசி உண்டாக்குகை அவனுக்குச் சாத்தியம் (பலன்) ; அதற்குச் சாதனம் (வழிமுறைகள்) நிற்றல், இருத்தல், கிடத்தல் என்பவை. புலன் கைபுகுந்த மாத்திரத்தில் — என்னிடம் ருசி பிறந்ததும் — அவன் திவ்விய தேசங்களில் நிற்றல், இருத்தல், கிடத்தல்களைத் தவிர்த்து,

அரவத்து அமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்

அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து[9]

---

6 காஞ்சி உலகளந்த பெருமாள் சந்நிதியில்
7 காஞ்சி பாண்டவ தூதர் சந்நிதியில்
8 காஞ்சி சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதியில்
9 பெரியாழ். திரு 5.2:10

என்று விட்டுசித்தன் விரித்துரைப்பதுபோல் அந்த விருப்புகளையெல்லாம் என் நெஞ்சிலே செய்தருளினான் " என்கின்றார். மேலும் " நான் ஞானப் பிறப்பு பெற்றேன் இல்லை; அது பெற்றபிறகு நான் எம்பெருமானை மறக்கவில்லை " என்றும் பேசுகின்றார். திருமந்திரத்தின் உண்மைப் பொருளை நன்கு உணர்ந்து ஞானம் பெற்றபிறகு நம் பூருவாசாரியர்கள் இம்மந்திரத்தின் பொருளை ஒழிய வேறொன்றாலும் பொழுது போக்குதலைச் செய்தறியார்கள். அடுத்த பாசுரத்தில்[10] எம்பெருமான் திருவேங்கடத்தில் நிற்பதும், திருநாட்டில் (பரமபதத்தில்) இருப்பதும், திருப்பாற்கடலில் கிடப்பதும் தன்னோடு உண்டான முறைமையை அறியாது நான் ஆற்றலற்றிருந்த காலத்தில்தான். நான் முறைமையறிந்துப் (சம்பந்த ஞானம் பெற்றுப்) பரிமாறின பின்னர் அவ்வெம்பெருமானுடைய பரிமாற்றமெல்லாம் என் நெஞ்சில்-என் இதயத்தில்-நடைபெறுகின்றது " என்கின்றார்.

மயர்வற மதிநலம் பெற்ற நம்மாழ்வாரும்,

அடங்கெழில் சம்பத்து
அடங்கக்கண்டு ஈசன்
அடங்கெழில் அஃதென்று
அடங்குக உள்ளே.[11]

[எழில் — அழகியதான ; சம்பத்து — எம்பெருமானின் விபூதி ; அடங்க - எல்லாம் (முற்றிலும்) ; அடங்க - அஃதெல்லாம் ; ஈசனஃது — எம்பெருமானுடைய ; எழில் - சம்பத்து (என்று துணிந்து) ; உள்ளே - விபூதிக்குள்ளே ; அடங்குக - சொருகிப் போவது]

என்று கூறுவர். " நித்தியவிபூதியாகிய பரமபதமும், லீலாவிபூதியாகிய இந்த உலகமும் ஆகிய எல்லாச் சம்பத்துகளும் தம்முடைய சுவாமியின் சொத்துகள் என எண்ணவேண்டும் ;

10 திருச். விரு. 65
11 திருவாய் 1.2:7

அந்தச் சம்பத்துக்குள் நாமும் அடங்கினோம் என்று அநுசந்தித்துக்கொண்டு கைங்கரியம்[12] செய்ய வேண்டும்" என்பது பாசுரத்தின் பொருள். எம்பெருமானது விபூதிக்குள்ளே தானும் ஒருவனாக அடங்கப் பார்க்கவேண்டும். அதற்கு வெளிப்பட்டு ஆட்டம் போட்டால் விநாசமே உண்டாகும். அதற்கு உட்பட்டு விட்டால் கூசவேண்டிய அவசியமே இல்லை என்பது இதில் தெளியும் உண்மையாகும். அஃதாவது 'உடைமை—உடையவன்' என்னும் சம்பந்தம் ஞானம் அடியாகத் தானும் அவன் விபூதியில் ஒருவனாகச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்பதுவே தேர்ந்த உண்மையாகும்.

வரலாறுகள் : இந்த சம்பந்த ஞானம் இங்குக் குறிப்பிடப் பெற்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் இரண்டு வரலாறுகள் மூலம் விளக்கப் பெறுகின்றது. (1) வணிகன் ஒருவன் தன் மனைவி கருவுற்றிருக்கும் காலத்தில் பொருள் தேடும் விருப்பினால் வெளிநாடு சென்றான். பல ஆண்டுகள் அங்குத் தங்கிவிட்டான். அவன் மனைவியும் கருவுயிர்த்து ஓர் ஆண் மகவைப் பெற்றாள். மகனும் தக்க வயதடைந்து தந்தையின் தொழிலையே தன் தொழிலாக மேற்கொண்டு தன் தந்தையைப் போலவே பொருளீட்டுவதற்காக வெளிநாடு சென்றான். இருவரும் ஒருவரையொருவர் அறியாதவர்கள். இருவரும் தத்தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டு ஒரு நாள் ஒரு பந்தலில் வந்து தங்க நேர்ந்தது. அந்த இடம் இருவருக்கும் போதாதாக இருந்தமையால் விவாதம் உண்டாயிற்று. அச்சமயம் இருவரையும் அறிந்தான் ஒருவன் வந்து "இவன் உன் தந்தை ; நீ அவன் மகன்" என்று தந்தை-மகன் என்ற சம்பந்தந்தை அறிவித்தான். அப்பொழுது அவ்விருவரும் "முன்பே நமது சம்பந்தம் தெரிந்திருந்தால் இரண்டு சரக்குகளையும் ஒன்று சேர்த்து அவற்றை விற்றுப் பொருளீட்டி

12. கிங்கரன் - வேலையாள் : கைங்கரியம் - அவன் செய்யும் தொழில். அஃதாவது அடிமைத் தொழில்.

யிருக்கலாம்; இனி என்செய்வது?'' என்று அளவளாவிக் களித்திருந்தனர்.

(2) அரச குமாரன் ஒருவன் பூங்கா ஒன்றினைக் கண்டு அதில் புக அஞ்சினான். அவ்வழியே சென்றான் ஒருவன் ''இஃது உன் தந்தையினுடையது'' என்று அறிமுகம் செய்து வைத்தான். இப்போது அரசகுமரன் தான் நினைத்தபடி பூங்காவிற்குள் புகுந்து அநுபவிக்கலா மன்றோ? ஆகவே, ''அவனுடைய உடைமையே இவை எல்லாம்'' என்ற நினைவே வேண்டப்படுவது. இந்த நினைவு ஏற்பட்டால் தானும் அதற்குள்ளே ஒருவனாகச் சென்று சேரலாம் அன்றோ?

இந்த இரண்டு எடுத்துக்காட்டுகள் போல, ஓர் ஆசாரியன் வாயிலாக எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் இன்னதென்று தெரிந்து கொண்டால் அதனால் நாம் அழியாப் பேறு எய்தி சுகமுற்று உய்யலாம் அல்லவா?

நவவித சம்பந்தம்: எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் ஒன்பது வகைப்படும் என்று சாத்திரங்கள் கூறும். இதனைத் திருமந்திரமும் குறிப்பிடுவதாக நம் முன்னோர்கள் உரைத்துப் போயினர். காரணம், இத்திருமந்திரம் வேதங்களின் சுருக்கமாய் இருப்பதனாலும், அறியவேண்டுவன அனைத்தையும் (அர்த்தபஞ்சக ஞானத்தையும்) தெரிவிப்பதாய் இருப்பதனாலும், எல்லா மந்திரங்களிலும் மேலானதாய் இருப்பதனாலும், தூய்மையானவற்றுள் மிக்க தூய்மையுடையதாய் இருப்பதனாலும் இதில் சம்பந்த ஞானமும் அடங்கியுள்ளது.

## 'ஓம் நமோ நாராயணாய'

என்பது திருமந்திரம். இஃது ஓம் + நம: + நாராயணாய என்று மூன்று பதங்களாய், எட்டு எழுத்தாய்[13] இருக்கும்;

13. 'ஓம்' - என்னும் பதம் ஒரெழுத்து; 'நம':-என்னும் பதம் இரண்டு எழுத்து; 'நாராயணாய' என்னும் பதம் ஐந்தெழுத்து.

மூன்று பதமும் மூன்று பொருளைச் சொல்லும். பிரணவம், சேதநனுடைய சேஷத்துவத்தையும் (அடிமைத் தன்மையையும்), நமஸ்ஸு ஈசுவர பாரதந்திரியத்தையும், (ஈசுவரனுக்கு வசம்பட்டிருத்தலையும்), நாராயணாய சேதநன் ஈசுவரனுக்குப் புரிய வேண்டிய கைங்கரியத்தையும் (தொண்டையும்) தெரிவிப்பனவாகும்.

முதற்பதமாகிய பிரவணம் அ + உ + ம என்று பிரியும். இங்ஙனம் பிரிந்திருக்கும் நிலையில் அகாரம் - பகவானையும், அதில் ஏறி மறைந்திருக்கும் நான்காம் வேற்றுமை (லுப்த சதுர்த்தி) சேஷத்துவத்தையும், உகாரம் - அந்த சேஷத்துவத்தின் அநந்யார்த்துவத்தையும் (மற்றவருக்கில்லாமல் ஈசுவரனுக்கே உரித்தாயிருத்தலையும்) தெரிவிக்கும். சேர்ந்திருக்கும் நிலையைச் 'சம்ஹிதாகாரம்' என்றும் பிரிந்திருக்கும் நிலையை 'அசம்ஹிதாகாரம்' என்றும் சொல்லுவர்.[14]

## பரமான்மா - சீவான்மா உறவுகள் :

அகாரத்தினால்

1) தந்தை - தனயன் என்ற உறவும்,

2) இரட்சிக்கப்படுபவன்- இரட்சிப்பவன் என்ற உறவும், அறியக்கிடக்கின்றன.

அகாரத்தின்மீது மறைந்து கிடக்கும் 'ஆய' என்ற நான்காம் வேற்றுமையின் உருபினால்)

3) சேஷ-சேஷி (அடிமை - அடிமை கொள்பவன்) என்ற உறவு சொல்லப்பெறுகின்றது.

---

14. இந்த விளக்கத்தைப் பெரியவாச்சான் பிள்ளை அருளிய 'நிகமனப்படி'யிலும் காணலாம்.

உகாரத்தினால்

4) நாயக - நாயகி சம்பந்தம் நவிலப் பெறுகின்றது.

மகாரத்தினால்

5) அறிபவன் - அறியப்படும் பொருள் உறவு உரைக்கப் படுகின்றது.

நமஸ்ஸாலே

6) சொத்து - சொத்துக்குரியவன் (ஸ்வ - ஸ்வாமி) சம்பந்தமும்,

நார-பதத்தாலே

7) சரீர - சரீரி பாவனையும்,

அயன-பதத்தாலே,

8) தாங்குகின்றவன் - தாங்கப்படும் பொருள் (ஆதார-ஆதேயம்) தொடர்பும்,

ஆய-பதத்தால்

9) போகத்தை அநுபவிப்பவன் - போக்கியப் பொருள் (போக்தரு-போக்கிய) இவற்றின் சம்பந்தமும் சொல்லப் பெறுகின்றன.

ஆக, திருமந்திரம் இறைவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள ஒன்பது வகை சம்பந்தங்களைச் சொல்லித் தலைக்கட்டு கின்றது. ஆன்மாவுக்கும் பிறிதொரு ஆன்மாவுக்கும் வினைப் பயனால், நேரிடுகின்ற தந்தை-தனயன் முதலிய உறவுகள் அந்த வினைத்தொடர்பு நீங்கும் போதெல்லாம் மாறி விடுகின்றன. அஃதாவது ஒரு பிறவியில் நேரிடும் தந்தை - தனயன், தாய்-மகன், கணவன்-மனைவி போன்ற உறவுகள் அடுத்த பிறவியில் (அல்லது வருகின்ற பிறவி களிலெல்லாம்) தொடர்வதில்லை. ஆனால் இறைவனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம்,

எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்;உனக்கே நாம் ஆட்செய்வோம் [15]

15. திருப்பாவை - 28

என்ற ஆண்டாள் திருவாக்கின்படி 'இங்கு ஒழிக்க ஒழியாது'; அழியாதிருக்கும். அஃதாவது அகாரத்தில் சொல்லப்பெறு கின்ற எம்பெருமான், மகாரத்தினால் சொல்லப் படுகின்ற சீவான்மா இவர்களின் உறவு அநாதியாக இருந்து வருவதாகும்.

எக்காலத்து எந்தையாய்
என்னுள் மன்னில் (2 : 9 : 8)

என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழித் தொடர் இக் கருத்தை அரண் செய்கின்றது. சீவான்மாக்களுக்கு 'அயந' சம்பந்தமான பரமான்ம சம்பந்தம் அநாதியாக இருந்து வருவது போல் அசித்து சம்பந்தமான பிரகிருதி சம்பந்தமும் அநாதியாக இருந்து வருவதே. ஆயினும், அசித்து சம்பந்த மான பிரகிருதி சம்பந்தம் ஒரு காலத்தில் நீக்கப்படும். 'அயந' சம்பந்தமான பரமான்ம உறவு ஒழிக்க ஒழியாதது.

இக்கருத்து ஆசாரிய ஹிருதயத்தின்,

'ஒன்று கூடின தூய்ப் பற்று
அறுக்க மீண்டு ஒழிகையாலே
பழவடியேன் என்னுமது ஒன்றுமே
ஒழிக்க ஒழியாது' (12)

என்றசூத்திரத்தால் தெளிவாக்கப் பெறுகின்றது. இந்த உடல் சம்பந்தம் இடையில் வந்தேறியாய் நல்வினை தீவினை காரணமாக வருவது; இது யாதானும் ஒரு காலத்தில் அழியக் கூடியதாக இருக்கும். நாராயண சம்பந்தம் அநாதியாய் ஒருவித காரணமும் இல்லாமல் வந்ததாகையால், என்றும் உளதாயிருக்கும். இடையில் வந்த சரீர சம்பந்தத்தை 'அநாதி' என்று சொல்லுவது பொருந்துமோ? என்ற வினா எழுகின்றது. அதற்கு மணவாள மாமுனிகள் ''வந்தேறியான காலத்திற்கு அடிதெரியாமையாலும் அநாதி என்று பிரமாணங்கள் சொல்லுவதாலும் இவரும் (அழகிய

மணவாளப் பெருமாள் நாயனார்) 'அநாதி' என்றார். ''ஒரு காலவரையில் அஃது இறைவனுடைய திருவருளால் அது மறையக் காண்கையாலே வந்தேறி என்பது ஒருதலை'' என்று கூறுவர்.

திருமந்திரத்தின் முழுப்பொருளையும் அநுசந்திக்கத் தக்கதாக அமைந்திருக்கும் திருப்பாசுரம் ஒன்று பெரிய திருமொழியில் உண்டு. திருமங்கையாழ்வார் அதனை 'நான் கண்டு கொண்டு கொண்டேன், நாராயணா என்னும் நாமம்' என்று எக்களிப்பில் கூறும் 'வாடினேன் வாடி' (1.1) என்ற முதல் திருமொழியில் உள்ளது.

எம்பிரான் எந்தை
என்னுடைச் சுற்றம்
எனக்கரசு என்னுடை வாணாள். (6)

என்பது ஆறாம் பாசுரம், ''எனக்குப் பல உபகாரங்கள் புரிந்தவனும், எனக்குத் தந்தையும், எனக்கு எல்லா உறவு முறையுமானவனும், என்னை ஆண்டவனும், என்னுடை உயிருக்கு உயிரானவனும் அவனே'' என்கின்றார். இதில், ''ஈசுவரனே இவ்வான்மாக்களுக்கு எல்லாவித உறவுமா கின்றான் என்பது இத்தொடரின் தேர்ந்த பொருள்'' என்பது மணவாள மாமுனிகளின் உரைக் குறிப்பு (முமுட்சு - 102). இதனைப் பிள்ளை உலக ஆசிரியர் அருளிச் செய்த நவவித சம்பந்தம்[16] என்ற நூலில் தெளிவாகக் காணலாம். இந்த உறவு முறைகளை ஆழ்வார் பாசுரங்களில் பரக்கக் கண்டு மகிழலாம்.

இந்த சம்பந்த ஞானம் பற்றிய கருத்துகள்தாம் பாரதி யாருக்குக் ''கண்ணன் பாட்டு'' படைப்பதற்கு வழி காட்டி யிருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது. தவிர,

16. அஷ்டாதச இரகசியங்கள் (பதினெட்டு இரகசியங் கள்) என்ற தொகுப்பில் 11-வது நூல்.

இஷ்ட தெய்வத்தைப் - வழிபடு கடவுளைப் - பல்வேறு பாவனைகளால் வழிபடலாம் என்று நம் நாட்டு பக்திப் பனுவல்கள் பகர்கின்றன. ஆழ்வார் பாசுரங்களிலும் எம்பெரு மானைத் தாய், தந்தை, குரு, தெய்வம் என்று பேசப் பெற்றிருப்பதையும் இவர் கண்டிருக்க வேண்டும். இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்டுதான் பாரதியார் பல்வேறு உறவுகளில் கண்ணனைக் கண்டு களிப்பெய்துகின்றார் என்று கருதுவதில் தவறொன்றும் இல்லை.

குலசேகரப்பெருமாள் வித்துவக் கோட்டம்மான் திருப் பதிகத்தில் (5-ஆம் திருமொழி) இந்த நவவித சம்பந்தமும் அடங்கிக் கிடப்பதாக நம் முன்னோர் குறித்துப் போயுள் ளனர். இதனை உரிய இடங்களில் காட்டுவேன்.

# 2. தந்தை-தனயன் உறவு

திருமந்திரத்தின் முதற்பதமாகிய ‘ஓம்’ என்பதிலுள்ள மூன்று எழுத்துகளில் (அ+உ+ம) அகாரம் தந்தை - தனயன் உறவை உணர்த்துவதாக சொல்லப்பெறுகின்றது என்பதை முதல் இயலில் குறிப்பிட்டோம். அதனை ஈண்டு நினைவு கூர்வோம்.

ஆழ்வார் பெருமக்கள் எம்பெருமானைத் தந்தை நிலையில் வைத்தெண்ணக்கூடிய இடங்கள் எண்ணற்றவை. இப்படி எண்ணும்போது தம்மைத் தனயன் நிலையில் கொண்டுள்ளமை சொல்லாமலே போதரும். எடுத்துக்காட்டாக, நம்மாழ்வார் திருவேங்கடமுடையானை,

…திருவேங்கடத்து
என் ஆனை என் அப்பன் (3.9:1)

என்றும், திருக்குறுங்குடி எம்பெருமானை,

…குறுங்குடி மெய்யம்மையே
உளனாய எந்தையை (3.9:2)

என்றும் தம் திருவாய்மொழியில் குறிப்பிடுவதைக் காணலாம். இந்த ஆழ்வாரே,

எம்பி ரானை எந்தை தந்தை தந்தைக்கும்
தம்பி ரானைதண் தாமரைக் கண்ணனை
கொம்ப ராவுநுண் ணேரிடை மார்புனை (1.10:3)

என்று கூறுவார். எம்பெருமான்தன்னை,

"எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும் எம்பிரானை" என்று அழகாய்ப் பேச, அதன் இன்பத்தில் திளைத்த எம்பெருமான் "இப்படி ஏத்துகின்றவன் ஆர்?" என்று குளிரக் கடாட்சிக்கின்றான். அக்கடாட்சத்தால் மகிழ்ந்த ஆழ்வார் "தண்டாமரைக் கண்ணனை" என்று மேலும் சிறப்பிக்கின்றார், குற்றமே வடிவான தம்மீது எம்பெருமான் இவ்வளவு சிறப்பாகக் கருணை காட்டக் காரணமில்லையே! என்ன காரணமோ? என்று ஆராய்ந்து பார்த்த ஆழ்வார், கடாட்சிக்கச் செய்யவல்ல பெரிய பிராட்டியார் அருகில் இருப்பதை உணர்ந்து, "கொம்பு அராவு நுண் நேரிடை மார்பனை" என்று மேலும் சிறப்பிக்கின்றார். இந்த ஆழ்வாரே திருவிண்ணகர் சேர்ந்த பிரானை,

என்சரண் என்கண்ணன் என்னை
ஆளுடை என்அப்பனே (6.3:8)

என்றும்,

என் அப்பன் எனக்காய் இகுளாய
என்னைப் பெற்றவளாய்,

பொன்அப்பன் மணிஅப்பன்; முத்தப்பன்
என்னப்ப னுமாய்

..................................
தன்ஒப்பார் இல்அப்பன் (6.3:9)
[இகுளாய்-செவிலியாய்]

என்று கூறுவதைக் காணலாம்.

இந்த ஆழ்வாரே,

பொழில்ஏழும் உண்ட எந்தாய்! (2,3:4)

எள்கல் தந்த எந்தாய்! (2.5:4)
[எள்கல்-ஈடுபட்டிருக்குந் தன்மை]

எந்தாய் ! தண்திரு வேங்கடத்துள்
நின்றாய் (2:6:9)

எக்காலத்தும் எந்தையாய்ப் என்னுள் மன்னில் மற்று
எக்கா லத்திலும் யாதொன்றும் வேண்டேன் (2.9:8)

எழில்கொள சோதி எந்தை
தந்தை தந்தைக்கே ! (3.3:1)

எந்தை தந்தைதந்தை
தந்தை தந்தைக்கும் முந்தை (3.3:2)

ஆதுமில் காலத் தெந்தை அச்சுதன் (3.4:4)
[ஆதும்-உபாயமும்]

வார்ப்புனல் அந்தண் அருவி
வடதிரு வேங்கடத் தெந்தை (3.5:8)

தாவி வையம் கொண்ட எந்தாய் ! (4.7:3)

ஆணி செம்பொன் மேனி எந்தாய் ! (4.7:4)

ஏன மாய்நிலம் கீண்டஎன் அப்பனே ! (5.7:6)

அகல்கொள் வையம் அளந்த
மாயன்என் அப்பன் (6.4:6)

புனத்துழாய்முடி மாலை
மார்பன்என் அப்பன் (6.4:6)

மாணி யாய்நிலம் கொண்ட
மாயன்என் அப்பன் (6.4:6)

தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்
வாய்முதல் அப்பனை (7.9:3)

...என்னால்தன்னை
பதவிய இன்கவி பாடிய அப்பனுக்கு (7.9:10)
[பதவிய-மதுரமான]

திருக்குறன் அப்பன் (7.10:2)

பாம்பணை அப்பன் (7.10:5)

தாயாய் தந்தையாய் மக்களாய்
மற்றுமாய் முற்றுமாய்
நீயாய்நீ நின்ற வாறு
இவைஎன்ன நியாயங்களே (7.8:1)

பெரிய அப்பனை, பிரமன் அப்பனை;
உருத்திரன் அப்பனை, முனிவர்க்
குரிய அப்பனை, அமரர் அப்பனை,
உலகுக்கோர் தனியப்பன் தன்னை (8,1:11)

என்று எம்பெருமானை அப்பனாகப்-தந்தையாகப்-பாவித்துப் பாசுரங்கள் அருளியுள்ளதைக் காணலாம்.

எம்பெருமானது வெற்றிச் செயல்களைப் பேசும் திருவாய் மொழியிலும் (7.4), திருக்காட்கரை (9 6)[2] பற்றிய திருவாய் மொழியிலும் பாசுரந்தோறும் 'அப்பன்' என்ற சொல் பாங்குற அமைந்திருப்பதைக் காணுமிடத்து தந்தை-தனயன் உறவின் அழுத்தமான பாங்கினைக் காணலாம்.

திருநெடுந்தாண்டகத்தில் இந்த உறவு இரு பாசுரங்களில் அமைந்திருக்கும் நேர்த்தி பன்முறை படித்து அநுபவித்து மகிழத்தக்கது.

---

2. திருக்காட்கரை : இது தென்திருக்காட்கரை என்ற பெயராலும் வழங்குகின்றது. கேரளத்தில் எர்ணாகுளம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து வட கிழக்குத் திசையில் எட்டுக் கல் தொலைவிலுள்ளது. பேருந்து வசதி உண்டு. தங்குவதற்கோ உணவுக்கோ எந்தவித வசதிகளும் இல்லை. இறைவன்: காட்கரை அப்பன்; தாயார்: பெருஞ்செல்வ நாயகி நாச்சியார், வாத்சல்ய வல்லி நாச்சியார். நின்ற திருக்கோலம், கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

மின்னுருவாய் முன்னுருவில்
வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த
திங்கள் தானாய்
பின்னுருவாய், முன்னுருவில்
பிணிமூப் பில்லாப்
பிறப்பிலியாய், இறப்பதற்கே
எண்ணாது என்றும்
பொன்னுருவாய், மணியுருவில்
பூதம் ஐந்தாய்ப்
புனலுருவாய், அனலுருவில்
திகழும் சோதி
தன்னுருவாய், என்னுருவில்
நின்ற எந்தை (நெடுக :1)

ஒண்மிதியில் புனலுருவி
ஒருகால் நிற்ப
ஒரு காலும் காமருசீர்
அவுணன் உள்ளத்து
எண்மதியும் கடந்தண்ட
மீது போகி
இருவிசும்பி னூடுபோய்
எழுந்து மேலைத்
தண்மதியும் கதிரவனும்
தவிர ஓடித்
தாரகையின் புறந்தடவி,
அப்பால் மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து
நின்ற எந்தை (ஷ-5)

என்ற பாசுரங்களை ஓதி அநுபவித்து இந்த உறவு முறையைத் தெளியலாம்.

திருமங்கையாழ்வாரின் திருநாங்கூர்த் திருமணிக் கூடம் திருமொழி ஒன்றின் (4.5) ஒவ்வொரு பாசுரத்திலும் இந்தத் தந்தை-தனயன் உறவு முறை அமைந்திருப்பதைக் கண்டு அநுபவித்து மகிழலாம்.

காம்புடைக் குன்ற மேந்திக்
கடுமழை காத்த எந்தை (1)

வவ்விய இடும்பை கூரக்
கடுங்கனை துகந்த எந்தை (2)

... ...வன்தாள்
சேத்தொழில் சிதைத்துப் பின்னை
செவ்வித்தோள் புணர்ந்த எந்தை (3)

பூங்குருக் தொசித்துப் புள்வாய்
பிளந்தெரு(து) அடர்ந்த எந்தை (4)

வருமவள் செவியும் மூக்கும்
வாளினால் தடிந்த எந்தை (5)

அண்டமும் சுடரும் அல்லா
ஆற்றலும் ஆய எந்தை (6)

நின்றவெஞ் சுடரும் அல்லா
நிலைகளும் ஆய எந்தை (7)

பொங்கிய முகிலும் அல்லாப்
பொருள்களும் ஆய எந்தை (8)

கோவமும் அருளும் அல்லாக்
குணங்களும் ஆய எந்தை (9)

என்ற பாசுரப் பகுதிகளைக் காண்க.

தந்தை - தாய் சேர்ந்த உறவு : சில பாசுரங்களில் தந்தை தாய் - தனயன் உறவு சேர்ந்து காணப் பெறுகின்றன.

...நல் வீடு செய்யும்
மாதாவினைப் பிதுவை
திருமாலை வணங்குவனே (திருவிருத்-95)

என்றும்,

மேலாத் தாய்தந்தையும்
அவரே இனி ஆவாரே (திருவாய். 5.1:8)

என்றும் நம்மாழ்வார் கூறியிருத்தலைக் காணலாம். அன்பு காட்டி வேண்டியவற்றை ஈவதால் தாயும், கல்வி முதலிய வற்றைப் பெறுவதற்குத் தந்தையும் பொறுப்பாக இருப்பதால் அவர்கள் உவமையாக கொள்ளப் பெற்றனர். நவவித சம்பந்தத்தை கூறும் திருமந்திரம் தாய்-மகன் உறவைக் குறிப்பிடவில்லை. ஆனால் இந்தச் சிந்தனை சாதாரண மக்களிடமும் உள்ளது. ஆழ்வார் பெருமக்களிடத்தும் கம்பன் போன்ற மாபெரும் கவிஞர்களிடமும் இந்தச் சிந்தனையைக் காணலாம்.

தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ்
திருவரங்கத்துள் ஓங்கும்
ஒளியுளார் தாமே யன்றே
தந்தையும் தாயும் ஆவார்
[ஓங்கும்-விஞ்சியிருக்கும் ஒளி-தேசு] —திருமாலை-37

என்று தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருவாக்கில் தாய்-தந்தை உறவு நுவலப்பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம்.

இந்த உலகில் தந்தை, தாயாக இருக்க முடியாது; தாய், தந்தையாக ஆக முடியாது. பரமான்மாவோ 'அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்' (திருச்சந். 115) இருக்கின்றான் என்பர் பக்திசாரர். நம்மாழ்வாரும்,

தாயும் தந்தையும் ஆய்இவ் வுலகினில்
வாயும் ஈசன் மணிவண்ணன், எந்தையே (1-10:6)
[வாயும்-அவதரித்தவன்]

என்றும்,

எந்தை யே!என்றும், எம்பெரு மான்! என்றும்
சிந்தையுள் வைப்பன்; சொல்லுவன் (1-10:7)

என்றும் பேசுவார். மேலும் இவர்,

"என்னைப் பெற்ற
அத்தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்த
அத்தா! (2.3:2)

என்றும்,

தஞ்ச மாகிய தந்தை தாயொடு
தானுமாய் (3.6:9)

என்றும் இதத்தைச் செய்யும் அப்பனாகவும் பிரியத்தைச் (அன்பைச்) செய்யும் அன்னையாகவும் தானே ஆகின்றான். திருமங்கையாழ்வாரின்,

தாய்நினைந்த கன்றே
ஒக்க என்னையும்
தன்னையே நினைக்கச்
செய்து தான்எனக்கு
ஆய்நினைந்து அருள் செய்யும்
அப்பனை (பெரி. திரு. 7.3:2)

என்ற பாசுரப் பகுதியில் தாய்-கன்று உறவினை உவமையாகக் காட்டித் தந்தை-மகன் உறவினைக் காட்டினாலும் 'அப்பன்' என்ற சொல் தாயையே நினைக்கச் செய்கின்றது. கம்பனும் கோசலையைக் குறிப்பிடுங்கால்,

கன்றுயிரி காராவின்
துயருடை கொடி[3]

என்று கூறுவான். கன்று-காரா உறவு தாய்-மகன் உறவினை நினைவு கூரச் செய்கின்றதன்றோ? பிறிதோரிடத்தில் மங்கைமன்னனின்,

.. ......‘உயிர்க் கெல்லாம்
தாயாய் அளிக்கின்ற
தண்தா மரைக் கண்ணா !—பெரி. திரு. 7:1 9

என்ற பாசுரம் தாய் - சேய் உறவினைக் காட்டிச் செல்லுகின்றது. பல்லுயிர்களைப் படைத்ததனால் தாயாகப் கருதப் பெறுகின்றான்.

திருமிசையாழ்வாரின்,

அத்தனாகி அன்னையாகி
ஆளும்எம் பிரானுமாய்
... ... ... ...
புகுந்து நம்முன் ‘மேவினார்’
— திருச்சந்த. 115

என்ற பாசுரப்பகுதியில் தாய்-தந்தை உறவைக் காணலாம். ‘பெற்ற தாய் நீயே, பிறப்பித்த தந்தை நீ; மற்றையார் ஆவாரும் நீ; (பெரி. திருவந்-5) என்ற நம்மாழ்வாரின் வாக்கு இவ்வுறவுக்கு முத்தாய்ப்பு வைக்கின்றது.

குலசேகரப் பெருமாளின்,

தருதுயரம் தடாயேல்உன்
சரணல்லால் சரண் இல்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ்
விதுதுவக்கோட் டம்மானே!

3. கம்ப. அயோத். கங்கை. 67

அரசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி;
அதுபோன்று இருந்தேனே(1)

[தடாயேல் - களைந்திடா விடில்; விரை-மணம்; அரசினம் - மிக்க சினம்; அகற்றிடினும் - வெறுத்துத் தள்ளினாலும்.]

என்ற பாசுரம் திருவித்துவக் கோட்டம்மான்பற்றிய பதிகத்தின் (5) முதற் பாசுரம். இதில் நாம் ஆழ்வாரின் வாக்காலேயே எம்பெருமானை விளித்து அவனைத் தாயாகப் பாவித்து நாம் சேய்நிலைக்கு வந்துவிடுகின்றோம். சேய் தாயிடம் முறையிடுவதுபோல் நாமும் இறைவனிடம் முறையிடுகின்றோம்.

சினத்தினால் ஒரு தாய் தான் பெற்ற குழந்தைமேல் சீறி விழுந்து அதனை வெறுத்துத் தள்ளினாலும், அக் குழந்தை தாயின் கருணையினையே கருதி அழுது அழுது அவள் கருணைக்குப் பாத்திரமாகின்றது. "அழுதால் உன்னைப் பெறலாமே"[4] என்றவாறு அழுது அடி அடைந்த மணிவாசகப் பெருமானைப் போலவே, கண்களில் நீர்மல்க அழுகின்றோம். இந்நிலையில் பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள உறவுமுறை தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவு முறை போன்றது என்ற உணர்வினைப் பெற முடிகின்றது. பல்லுயிர்களையும் படைத்த வித்தகனாகிய பெருமான் தாய் நிலையில் சொல்லப்பெற்றாலும் தந்தை நிலையில் கொள்வது உபலட்சணமாகும்.

இந்நிலையில் நம் சிந்தனையில் குறுந்தொகைப் பாடல் (397) 'பளிச்சென்று' ஒளி விடுகின்றது.

---

4. திருவா. திருச்சதகம் - 90

..........................................

ஊதை தூற்றும் உறவுநீர்ச் சேர்ப்ப!
தாய் உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு
'அன்னாய்' என்னும் குழவி போல்
இன்னா செயினும் இனிதுதலை அளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்னுறு விழுமம் களைஞரோ இலளே
கலைஞர்-நீக்குவார்; [இலள் – பெற்றிலள்]

[ஊதை - குளிர் காற்று; தூற்று- தூவுகின்ற; உறவு நீர் - வன்மையையுடைய; உடன்று - மாறுபட்டு; அலைக்கும் - வருந்திய பொழுது; தலை அளித்தல்-அன்பு செய்தல்; வரைப்பினள் - புரைக்கப் படும் எல்லைக்கு உட்பட்டவள்; விழும் - துன்பம்; கலைஞர்- நீக்குவார்; இலள் - பெற்றிலள்]

என்பது பாடல். ''அன்னை அலைப்பினும், அணைப்பார் பிறரின்றி அவள் மாட்டே செல்லும் குழவிபோல, நீ அருளின்றிப் பிரிவினும் நின்மாட்டே நின்று நின் தண்ணளியால் வாழும் நிலையினள்'' என்று தோழி தலைவனை நோக்கிக் கூறும் கருத்தினையே ஆழ்வாரும் தன்னைக் குழந்தை நிலையிலும் இறைவனைத் தாய் நிலையிலும் வைத்துப் பேசுகின்றார். குழந்தையைக் காட்டிய குறுந்தொகைப் பாடலை படித்துவிட்டு ஆழ்வார் பாசுரத்தைப் படித்தால் பொருள் மேலும் தெளிவுறுகின்றது. ''தாய் உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு 'அன்னாய்'! என்று அழைக்கும் குழவி போல'' என்ற சங்கப் பாடலின் உவமை ஆழ்வாரின் இறைமைப் பாசுரத்தில் புது முறையில் அமைந்து புத்தொளி வீசி நின்று நயமுறுகின்றது. பாட்டின்பம் பக்தி உணர்வாக மாறி நம்மை மேலும் நெகிழ்விக்கின்றது. இவ்வுலக வாழ்வில் பக்தன் பல்வேறு துன்பங்களாலும் தொல்லைகளாலும் தாக்கப்பெற்றாலும் அவை தம் வினைப்பயனால் விளைந்தவை என்று உதறித் தள்ளிவிட்டு இறைவனையே நினைந்து உருகி உருகி அவனையே வழிபடுகின்றான்.

திருமங்கை ஆழ்வார் எடுத்த எடுப்பில் திருமந்திரத்தைக் கூறும் முதல் திருமொழியிலேயே,

எம்பிரான் எந்தை என்னுடையச் சுற்றம்
எனக்கு அரசு என்னுடைய வாழ்நாள் (1.1:6)

[பிரான் – உபகாரகன்; சுற்றம் - சகலவித பந்துவும்;
அரசு - ஆண்டவன்; வாழ்நாள் - பிரான பூதன்]

என்ற பாசுரத்தில் நான்கு விதமான சம்பந்தத்தைக் கூறி திருமந்திரத்தின் பொருளை விளக்கி மகிழ்கின்றார்.

பாரதியார் கண்ணனைத் தாயாகக் கருதி பாடும்போது பராசக்தியே அவருடைய தாயாகி விடுகின்றாள். பாரதியார் 'கண்ணன் பாட்டில்' கண்ணன் - என் தாய், கண்ணன் - என் தந்தை என்ற தனித்தனித் தலைப்புகளில் பாடல்கள் காணப் படுகின்றன. இவற்றைப் படித்து அநுபவிக்கும்போது பிள்ளை உலக ஆசிரியரின் 'நவவித சம்பந்தம்' தான் பாரதியாரை இம் முறையில் பாடத் தூண்டியிருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகின்றது. இல்லையா ?

# 3. இரட்சக - இரட்சய சம்பந்தம்

திருமந்திரத்தின் 'ஓம்' பதத்தில் உள்ள மூன்று எழுத்துக்களில் (அ+உ+ம) அகாரம் இரட்சிக்கப்படுபவன்-இரட்சிப்பவன் என்ற உறவினைக் காட்டுவதாக முன்னர்க் குறிப்பிட்டதை ஈண்டு நினைவுகூரலாம். இந்த உறவில் எம்பெருமான் காக்கும் கடமையுள்ளவன் (இரட்சகன்); அவனைக் கொண்டு தன்னைக் காத்தலையே எதிர்நோக்கி இருப்பவன் சீவான்மா (இரட்சயன்). அவனையொழிய மற்றவர்கள் ஔபாதிக பந்துக்கள்-காரணம் பற்றிய உறவினர்; அவன் ஒருவனே நிருபாதிக பந்து-காரணம் பற்றாத உறவினன்; முன்னவர் இரட்சகர் அல்லர் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

1. வீடணனுடன், உடன் பிறந்தவன் இராவணன்; சுக்கிரீவனுடன் பிறந்தவன் வாலி, இவர்கள் இருவரும் தம்பியரைப் படுத்தின பாட்டை நாம் அறிவோம்.

2. கம்சன் தன் தகப்பனான உக்கிரசேனனை சிறையில் அடைத்தான். உருத்திரன் தன் தந்தையான பிரமனின் தலையைக் கிள்ளினான். (உருத்திரனின் தந்தை பிரமன் என்ற ஒரு புராண மரபும் உண்டு).

3. கைகேயி தன் மகனுக்கு நன்மை செய்வது போல் தீங்கையே புரிந்தாள். இதனால் மாதா இரட்சகர் ஆகாதது தெளியப்படும். இரணியன் தன் மகன் பிரகலாதனைப் படுத்திய பாட்டை நாம் அறிவோம். இதனால் தந்தை இரட்சகராக மாட்டார் என்பது தெளிவு.

4. பாண்டவர்கள் ஆபத்துக் காலத்தில் திரௌபதியைக் காக்கத் தவறினவர்கள். கண்ணனின் திருநாமம் அவளைக் காத்தது. நளன் தமயந்தியை நடுக்காட்டில் கைவிட்டு அகன்றான்.........

5. நாட்டுக்குக் கண் போன்ற சந்திர சூரியர்களும் இரட்சகர்களாகார். காரணம், அவர்கள் சர்வேசுவரனுடைய ஆணைக்கஞ்சி விருப்பப்படி சஞ்சரிக்க முடியாதவர்களாகை யாலும், இரணியன், இராவணன் முதலானோர் கையிலகப் பட்டு இழிதொழில் செய்து திரிபவர்களாகையாலும் என்க.

6. திரிலோகபாலகனான இந்திரனும் தன் பதவி பறி போகும் என்று அஞ்சியிருப்பதனாலும், இந்திரஜித் சிம்ம சொப்பனமாக இருப்பதனாலும் மாபலி கையில் செல்வத்தைப் பறிகொடுத்துக் கண்ணீரும் கம்பலையாக இருப்பதனாலும் இரட்சகனாகமாட்டான்.

7. நான்முகனும் மதுகைடவர்கள் கையில் வேதங்களைப் பறிகொடுத்து ' கண் இழந்தேன், தனம் இழந்தேன் ' என்று கதறுபவனாகையால் இரட்சகனாக மாட்டான்.

8. உருத்திரனும் எல்லா உயிர்களையும் கொல்பவ னாகையாலும், வாணனை இரட்சிப்பதாய்ச் சொல்லி, காக்க முடியாமல் நழுவினமையாலும் இரட்சகனாக மாட்டான்.

எம்பெருமான் ஒருவனே இரட்சகன் என்பதை ஆழ்வார் பாசுரங்களில் பரக்கக் காணலாம். திருக்கண்ணபுரம் பற்றிய பெரிய திருமொழித் திருப்பதிக மொன்றில் (8. 9),

பெற்றார் பெற்றொழிந்தார்
பின்னும் நின்று அடியேனுக்கு
உற்றானாய் வளர்ந்துஎன்
உயிராகி நின்றானை
முற்றா மாமதிகோள்
விடுத்தானை எம்மானை
எத்தால் யான் மறக்கேன்
இதுசொல், என் ஏழை நெஞ்சே! (6)

[பெற்றார்-தாய் தந்தையர்; உற்றான் ஆய்-பலவித பந்துவாய்; கோள்-க்ஷயரோகம்; எத்தால்-எக்காரணம் பற்றி; சொல்-விடைகூறு]

என்பது ஏழாம் பாசுரம். சரீரமாகிய தசைப் பிண்டத்தை மாத்திரமே உற்பத்தி செய்பவர்களான தாய் தந்தையர் பெற்றுப் போய்விட்டார்கள்; ஞானம், பக்தி முதலிய குணங்கள் என்னிடம் வளர்வதற்குரிய வழிகளில் எவ்வித முயற்சியும் செய்தார்கள் இலர். இங்ஙனம் அவர்கள் கைவிட்ட காலத்தில் எனக்கு எல்லா உறவு முறையாய் நின்று என்னை வளரச் செய்து வருகின்ற எம்பெருமானை எப்படி மறக்க முடியும்?'' என்று தம் திருவுள்ளத்தோடு உசாவுகின்றார் ஆழ்வார். திருமந்திரத்தில் தேறுகின்ற ஒன்பது வகையான உறவுகளையும் உடையவன் எம்பெருமான் என்பது ''உற்றானாய் நின்று வளர்த்து என் உயிராகி நின்றானை'' என்ற அடியால் பெறப்படுகின்றது.

உலகைப் பிரளயத்திலிருந்து எம்பெருமான் உய்வித்தமையைக் கூறும், பெரிய திருமொழியிலுள்ள 'மைந்நின்ற' (11.6) என்ற பதிகத்தில் திருமங்கையாழ்வாரின் திருவாக்குகள் (ஒன்பது பாசுரங்கள்) இரட்சக-இரட்சய உறவினை மிகத் தெளிவாக விளக்குகின்றன. இவற்றில் இரண்டு பாசுரங்களை ஈண்டுக் காட்டுவேன்.

மண்ணாடும் விண்ணாடும் வானவரும்
தானவரும் மற்றும் எல்லாம்
உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல்
தான் விழுங்கி உய்யக் கொண்ட
கண்ணாளன் (7)

[மண் நாடு-பூலோகம்; விண்நாடு-சுவர்க்கம் ; வானவர்-தேவர் ; தானவர்-அசுரர் ; உண்ணாததைய ஒண்ணாத ; பெருவெள்ளம் - மகாபிரளயம் ; உண்ணாமல்-விழுங்காமல் ; உய்ய-உய்ய]

அண்டத்தின் முகடழுந்த அலைமுந்நீர்த்
திரைததும்ப 'ஆ ஆ!' என்று
தொண்டர்க்கும் அமரர்க்கும் முனிவர்க்கும்
தான் அருளி உலகம் ஏழும்
உண்டொத்த திருவயிற்றில் அகம்படியில்
வைத்தும்மை உய்யக் கொண்ட
கொண்டற்கை மணிவண்ணன் (9)

[அண்டத்தின்முகடு-அண்டபித்தி ; முந்நீர்-கடல் ; திரை அலை ; ததும்ப-செறிய ; ஆ ஆ-ஐயோ ; அமரர்-தேவர்கள்; அருளி-கிருபை செய்து;ஒத்த-முன்பு போல் இருக்கச் செய்த; அகம்படி-உட்புறம்]

இந்த இரண்டு பாசுரங்களையும் மேலும் இப்பதிகத்திலுள்ள ஏழு பாசுரங்களையும் அநுபவித்துப் படித்தால் இந்த உறவு முறை தெளிவாகத் தெரிவதுடன் ஆழ்வாரின் சொல்வளம், பக்தி ஆகியவையும் அநுபவித்து மகிழத் தக்கவையாக இருப்பதை அறியலாம்.

எம்பெருமான் வீடு அளிக்கும் தன்மையைக் கூறும் 'அணைவது அரவணைமேல்' (2.8) என்ற திருவாய்மொழியில்

ஓவாத் துயர்ப் பிறவு
    உட்படமற் றெவ்வவையும்
மூவாத் தனிமுதலாய்
    மூவுலகும் காவலோன்
மாவாகி ஆமையாய்
    மீனாகி மானிடமாம்
தேவாதி தேவ
    பெருமானென் தீர்த்தனே (5)

[ஓவா - இடைவிடாத; பிறவி-பிறப்பு; மற்று எவ்வெவை-படைப்பு, அளிப்பு, அழிப்பு முதலானவை; மூவா - ஒருநாளும் கை வாங்காத ; தனிமுதல் - அசகாய காரணபூதன்; தீர்த்தன்-பரிசுத்தன்]

என்பது ஐந்தாம் பாசுரம். இஃது என்பெருமான் இரட்சகன் என்பதைக் குறிப்பிடுகின்றது. ‘மூவுலகுங் காவலோன்’ என்ற தொடர் இதனைக் குறிப்பிடுகின்றது. இப்பிறப்பு இடைவிடாத துன்பத்தை உண்டாக்கக் கூடியது. அதாவது உண்டாதல், பிறத்தல், பரிணமித்தல், வளர்த்தல், குறைதல், மரணம் என்ற ஆறு துன்பங்கள். இதனை ‘நீந்தும் துயர்ப் பிறவி’ (2) என்றார் மேல். மூவா - இதனை ஓவாப் பிறவிக்கு அடைமொழியாக்கிப் பிரவாக ரூபத்தாலே நித்தியமாகச் செல்லுகின்ற பிறவிக்குத் தனிமுதல் என்னுதல்; இப்படிப் படைத்துக்கொண்டே போதல், ” சோம்பாது, இப்பல்லுருவையெல்லாம் படர்வித்த வித்தா!” (பெரிய திருவந். 18) என்பதுபோலப் படைத்தல்.

இப்படிப் படைத்துக் காப்பது எவ்வளவு?என்னில்; ‘மூன்று உலகும் காவலோன்’ என்கின்றார். மூவுலகு-மேலும் கீழும் நடுவும் என்னுதல்[1]; கிருதகம், அகிருதகம், கிருதாகிரு

1. ‘மேலும்’ என்றது பூமிக்கு மேலுள்ள ஆறு உலகங்களை; ‘நடுவும்’ என்றது இப் பூவுலகத்தை. கீழும் என்றது பூமிக்குக் கீழே உள்ள ஏழு உலகங்களை,

தகம்[2] என்னுதல். காவலாவது- சாத்திரங்களைக் கொடுத்தல் முதலியவற்றால் காத்தல்; இரட்சித்தல், இப்படிக் காத்தலால் தன் மேன்மை குலையாதோ என்னில்: கர்மங்கட்குக் கட்டுப் படாதவன், கர்மங்கட்குக் கட்டுப்பட்டவர்களைப் போன்று பிறந்து காப்பது என்றபடி. மாவாகி-ஹயக்கிரீவ மூர்த்தியாய் அவதரித்தபடி, ஆமையாய், மீனாய்-சாத்திரங்கட்குக் காரண மான அவதாரங்கள். மானிடம்-இராமன், கிருஷ்ணன் முதலான அவதாரங்கள். இவை ஒழுக்கத்தை அநுட்டித்துக் காக்க வந்த அவதாரங்கள்.

அறந்தலை நிறுத்தி வேதம்
அருள்சுரந்து அறைந்த நீதித்
திறந்தெரிந்து உலகம் பூணச்
செந்நெறி செலுத்தி

என்கின்றான் கம்பன், இப்படி இரட்சிப்பது மேன்மை குலை யாமல் இருந்தன்று; அவதாரத்தாலே என்கின்றார் பின்னிரண் டடிகளில். இவ்வாறு 'இரட்சகம்' சொல்லப்பட்டது.

இரட்சகனைப்பற்றிச் சொன்ன ஆழ்வார் திருக்குடந்தை பற்றி ''ஆரா அமுதே!' (5-8) என்று தொடங்கும் திருவாய் மொழியில் இரட்சிக்கப்படுபவனைப்பற்றி பேசுகின்றார். இத் திருப்பதிகத்தில்,

---

2. பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்னும் மூன்றும் கிருதகம்; ஜனலோகம், தபோலோகம், சத்திய லோகம் என்னும் மூன்றும் அகிருதகம் ; மகர்லோகம் ஒன்றும் கிருதாகிருதகம். கிருதகம்-செய்யப்படுவது, அழிவது; அகிர்தகம் செய்யப்படாதது, அழியாதது, கிருதாகிருதகம்-செய்யப்பட்டும் செய்யப்படாமலுமாயிருப்பது; அழிந்தும் அழியாமலுமாயிருப்பது. இங்குக் கூறப்பெற்றவை தினப் பிரளயத்தில் எனக் கொள்க.

களைவாய் துன்பம்; களையா(து)
ஒழிவாய்; களைகண் பற்றிலேன்;
வளைவாய் நேமிப் படையாய்!
குடந்தைக் கிடந்த மாமாயா!
தளரா உடலம் என்ன(து)
ஆவி சரிந்து போம்போது
இளையா(து) உனதாள் ஒருங்கப்
பிடித்துப் போதஇசை நீயே[8]

[களைவாய்-நீக்கினாலும் சரி; களையாது ஒழிவாய்-நீக்கா விட்டாலும் சரி; களை கண்-துணை; நேமி-சக்கரம், தளரா-தளர்ந்து; ஆவி-உயிர், சரிந்து-நிலை குலைந்து; இளையாது-மெலியாமல், ஒருங்கப் பிடித்து - இருக்கமாகப் பிடித்து போத-போகும்படி; இசை-திருவுள்ளம் பற்று]

என்பது எட்டாம் பாசுரம், "எனக்கு உன் அநுபவம் கிடைக்காமல் போனாலும், உன் திருவடியே தஞ்சம் என்று பிறந்த விசுவாசம் குலையாதபடி பார்த்தருள வேண்டும்" என்கின்றார் இதில்.

எம்பெருமான் திருவருளை அவாவிநிற்கும் பிரபந்நர்கட்கு ஆகிஞ்சன்னியம்[3], அநந்யகதித்துவம்[4] ஆகிய இரண்டும் குலையாதிருக்க வேண்டும் என்பது விதி. திருமங்கையாழ் வாரின்,

நலந்தான் ஒன்றுமிலேன் நல்ல
தோரறஞ் செய்துமிலேன்
—பெரி. திரு. 1.9:4

3. ஆகிஞ்சன்னியம்-கன்மம் ஞானம் பக்தி என்ற மற்ற உபாயங்களில் தொடர்பற்று இருத்தல்.

4. அநந்யகதித்துவம் : ஆன்ம இரட்சனத்திற்கு எம்பெருமானைத் தவிர வேறொரு இரட்சகப் பொருள் அற்றறிக்கை.

என்ற பாசுரத்தில் ஆகிஞ்சன்னியம் தெரிகின்றது. அநந்ய கதித்துவம் இப்பாசுரத்தின் முதலடியில் தெளிவாகின்றது. ''எனது துன்பங்களைக் நீ களைந்தாலும் சரி, களையாவிட்டாலும் சரி-இரட்சித்தாலும் சரி இரட்சியாவிடினும் சரி-உன் காரியத்தில் நீ எப்படியிருந்தாலும் என் காரியத்தில் நான்-உன் திருவடிகளைப் பற்றுவதில்-உறுதியாக உள்ளேன்'' என்கின்றார். இதனால் அவனைக் கொண்டு தன்னைக் காத்தலையே எதிர் நோக்கியிருப்பவன் சீவான்மா - இரட்சயன்-என்பது புலனாகின்றது.

ஆழ்வார்கள் குறிப்பிடும் மூவுலகு உண்டு உமிழ்ந்த வரலாறுகள் யாவும் இரட்சக - இரட்சிய சம்பந்தத்தையே குறிப்பிடுகின்றன என்று சொல்லுவதில் தவறு ஒன்றும் இல்லை. 'மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வன்' (திருமாலை-1) 'பாரினை உண்டு, பாரினை உமிழ்ந்து' (பெரி. திரு. 4.10:5) 'உண்டாய் உலகு ஏழ் முன்னமே, உமிழ்ந்து மாயையால் புக்கு' (திருவாய்-1.5:8) என்பன போன்ற தொடர்கள் பல்வேறு பாசுரங்களில் காணப்பெறுவதைக் கண்டு மகிழலாம்.

இரட்சக-இரட்சய உறவுமுறை ஆழ்வார் பாசுரங்களில் காணப்பெறும் இரண்டு வரலாறுகளால் உறுதிப்படுகின்றது.

முதல் வரலாறு : வைதிகன் பிள்ளைகள் பற்றியது.

(1) தப்பின பிள்ளைகளைத்
தனமிகு சோதிபுகத்
தனியொரு தேர்கடவித்
தாயொடு கூட்டியஎன்
அப்ப ! (பெரியாழ். திரு. 1.6:7)

[தப்பின-கைதப்பிப் போன ; தனமிகுசோதி-பரமபதம் ; கடவி-நடத்தி]

(2) பிறப்பகத்தே மாண்டொழிந்த
பிள்ளைகளை நால்வரையும்
இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து
ஒருப்படுத்து உறைப்பன்(பெரியாழ். திரு. 4.8:2)

[பிறப்பு இடம்-கருஉயிர்த்த இடம்; இறைப் பொழுதில் கண நேரத்தில்; ஒருப்படுத்த - ஒப்புக்கொள்ளச் செய்த; உறைப்பன்-சக்தியுக்தன்]

(3) வேத வாய்மொழி அந்தணன் ஒருவன்
எந்தை! நின்சரண் என்னுடை மனைவி
காதல் மக்களைப் பயத்தலும் காணாள்
கடியதுஓர் தெய்வம்கொண்டு ஒளிக்கும்
என்றுஅழைப்ப
ஏதலார் முன்னே இன்னருள் அவற்குச்
செய்து உன்மக்க மற்றுஇவர் என்று
கொடுத்தாய் (பெரி. திரு. 5 8:8)

[வாய்மொழி - வாய்ப்பேச்சாகவுடைய; எந்தை-தலைவனே; சரண்-அடைக்கலம்; காதல் மக்கள்—ஆசையுடன் பெறுகின்ற பிள்ளைகள்; பயத்தல்-பெற்றல்; கடிய-கொடிய; ஒளிக்கும்-ஒளித்து வருகின்ற; ஏதலார்-பகைவர்; அவற்கு-வைதிகனுக்கு]

(4) படர் புகழ் பார்த்தனும்
வைதிக னும்உடன்
ஏறத்திண் தேர்கடவி
சுடரொளி யாய்நின்ற
தன்னுடைச் சோதியில்
வைதிகன் பிள்ளைகளை
உடலொடுங் கொண்டு
கொடுத்தவன் (திருவாய். 3.10:5)

[படர்-பரம்பின; இடர்-இடைஞ்சல்; திண்தேர்-திடமான தேர்; தன்சோதி-திருநாடு உடலொடும்—அந்த உடம்புடன்; கொண்டு-மீட்டுக் கொணர்ந்து]

இவற்றில் குறித்த முதல் இதிகாசம் : ஒரு வைதிக அந்தணனுக்கு நான்கு குமாரர்கள். முதல் பிள்ளை பிறந்து பூமியைத் தொட்டதும் காணப் பெறவில்லை. இரண்டாவது, மூன்றாவது பிள்ளைகளின் நிலைமையும் அப்படியே. பெற்றவளும் கூட இன்னவிடத்தில் போயிற்றென்று தெரியாமல் காணவொண்ணாது மூன்று பிள்ளைகளும் மறைந்தமையால் நான்காவது பிள்ளையைக் கருவுயிர்க்கப் போகும் சமயத்தில் அந்த அந்தணன் கண்ணபிரானிடம் வந்து 'இந்த ஒரு பிள்ளையையாயினும் பாதுகாத்துத் தந்தருள வேண்டும்' என்று வேண்டினான். அதற்குக் கண்ணபிரான் அப்படியே செய்வதாக வாக்குத் தந்தான். ஆனால், கருவுயிர்த்த அன்று ஒரு வேள்வியில் தீட்சிதனாக இருக்க வேண்டியிருந்ததனால் கருவுயிர்க்கும் இடத்திற்கு எழுந்தருள முடியாத நிலையில் இருந்தான். அருகிலிருந்த பார்த்தன் 'நான்போய் இரட்சிக்கின்றேன்' என்று வாக்குத் தந்து அந்தணனையும் கூட்டிக் கொண்டுபோய்க் கருவுயிர்க்கும் இல்லத்தைச் சுற்றிக் காற்று கூட நுழைய வொண்ணாதவாறு 'சரக்கூடம்' அமைத்துக் காத்துக் கொண்டு நின்றான். அன்று பிறந்த பிள்ளையும் வழக்கப்படி மாயமாய் மறைந்தது. அதனால் மிக்க சோகமடைந்த அந்தணன் அருச்சுனனை மறித்து 'அதமனே, உன்னாலேயன்றோ என் பிள்ளை போம்படி ஆயிற்று; கண்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்?' என்று நிந்தித்து அவனைக் கண்ணபிரானருகே இழுத்துக் கொண்டு வந்தான். கண்ணன் அதுகண்டு முறுவலித்து 'அவனை விடு; உன் பிள்ளையை நான் கொண்டு வந்து தருகின்றேன்' என்று அருளிச்செய்து, அந்தணனையும் தன்னுடன் கொண்டு தேரிலேறி, அருச்சுனனைச் செலுத்தச் சொல்லி அத்தேருக்கும் இவர்கட்கும் திவ்விய ஆற்றலைத் தனது சங்கற்பத்தால் கற்பித்து இவ்வண்டத்திற்கு வெளியே நெடுந்தூரம் அளவும் கொண்டு சென்று, அங்கு ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தி, தன் நிலமான

பரமபதத்தில் தானே புக்கு, அங்கு நாச்சிமார் தங்கள் சுவாதந்திரம் காட்டுவதற்காகவும், கண்ணபிரானது திவ்விய சௌந்தர்யத்தைக் கண்டு களிப்பதற்காகவும் அழைப்பித்து வந்த அந்தப் பிள்ளைகள் நால்வரையும் அங்கு நின்றும் ஆதி உருவத்தில் ஒன்றும் குறையாமல் கொண்டுவந்து கொடுத் தருளினன் என்பது வரலாறு.

இரண்டாவது வரலாறு: சாந்தீபினி (கண்ணனின் குருநாதர்) மகனை காத்தது பற்றியது.

(1) மாதவத்தோன் புத்திரன்போய்
மறிகடல்வாய் மாண்டானை
ஓதுவித்த தக்கணையா
உருவுருவே கொடுத்தான்.

—பெரியாழ். திரு. 4.8:1

(2) ஓது வாய்மையும்
உவனியப் பிறப்பும்
உனக்கு முன்தந்த
அந்தணன் ஒருவன்
'காதல் என்மகன்
புகலிடங் காணேன்;
கண்டு நீதரு
வாயெனக்கு என்று
கோதில் வாய்மையி
னான்உனை வேண்டிய
குறைமு டித்தவன்
சிறுவனைக் கொடுத்தாய்

—பெரி. திரு. 5.8:7

[ஓது-ஓதி உணர்தற்குரிய ; வாய்மை-சத்தியவசனமான வேதம் ; உவனியப்பிறப்பு-உபநயனம் செய்வதால் வரும் இரண்டாம் பிறப்பு ; அந்தணன்-சாந்தீபினி ; காதல் என் மகன்-அன்புக்கு இடமான புத்திரன்; கண்டு-அவள் இருக்கும் இடம் உணர்ந்து ; கோதில் வாய்மையினான் - பழுதுப்படுதல் இல்லாத மெய்ம் மொழிகளையுடைய]

இவற்றில் குறித்த இதிகாசம் : கண்ணபிரான் கம்சனைக் கொன்று உக்கிரசேனனுக்கு முடிசூட்டிய பின்பு, அவந்தி நகரிலிருந்த சாந்தீபினி என்ற அந்தணரிடம் சகல சாத்திரங் களையும் கற்றான். குருதட்சிணை கொடுக்கும் நிலையி லிருந்தான். அந்த ஆசிரியர் கண்ணனுடைய சிறப்பை அறிந்த வராகையால் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு மேற்குக் கடலில் பிரபாச தீர்த்தத் துறையில் நீராடும்போது மூழ்கி இறந்துபோன தன்மகனைக் கொண்டுவந்து தரவேண்டும் என்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார். கண்ணபிரானும், 'அப்படியே செய்கின்றேன்' என்று ஒப்புக் கொண்டு கடல் நீரில் வாழ்கின்ற சங்கு வடிவமான 'பஞ்சஜனன்' என்ற அசுரனே அந்த அந்தணச் சிறுவனைக் கொண்டு போயினன் என்பதை வருணனால் அறிந்து, கடலில் இறங்கி அவ்வசு ரனைக் கொன்று அவன் உடலாகிய பாஞ்சசன்யத்தை எடுத்து வாயில் வைத்து ஊதிக்கொண்டு யமபுரிக்கு எழுந்தருளி அங்கு 'யாதனையிற்' கிடந்த அந்தச் சிறுவனை அவன் இறந்தபோது கொண்டிருந்த உருவம் மாறாதபடி கொண்டு வந்து தட்சிணையாகக் கொடுத்தான் என்பது வரலாறு.

பெரியாழ்வார் திருமொழியொன்றில் (4.10) அரங்கத்து அரவணைப் பள்ளியானை நோக்கி,

அல்லற் படாவண்ணம்
காக்க வேண்டும் (3)

அற்றைக்கு நீ என்னைக்
காக்க வேண்டும் (4)

ஐய! இனிஎன்னைக்
காக்க வேண்டும் (5)

அண்ணலே! நீ என்னைக்
காக்க வேண்டும் (6)

அஞ்சலை என்றுஎன்னைக்
காக்க வேண்டும் (7)

ஆனாய்! நீஎன்னைக்
காக்க வேண்டும் (8)

என்று ஏழு முறை 'காக்க வேண்டும்' என்பதில் இந்த உறவைக் கண்டும் மகிழலாம்.

சீவான்மாக்களுக்குத் துன்பங்களைக் கொடுப்பதும் இரட்சிக்கும் வகையைச் சார்ந்ததாகும். இதனைக் குலசேக ராழ்வாரின் வித்துவக் கோட்டம்மான்பற்றிய,

வாளால் அறுத்துச்
சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ
யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும்
வித்துவக்கோட்டு அம்மா! நீ
ஆள்ஆக உனதுஅருளே
பார்ப்பன் அடியேனே (5:4)

[மாளாத-நீங்காத; காதல்-அன்பு; ஆள் ஆ(க)-அடிமை உண்டாக; பார்ப்பன்-நோக்கியிரா நின்றேன்]

என்ற பாசுரத்தால் அறிகின்றோம்.

நோயாளன் ஒருவன் மருத்துவனிடம் வருகின்றான் வாளால் அறுத்தும் சூடு போட்டும் அவனது நோயைப்

போக்குகின்றான் மருத்துவன். நோய் நீங்கும்பொருட்டு நோயாளி அத்தச் சிகிச்சைத் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுகின்றான். இத்துன்பங்களை விளைவித்த மருத்துவனிடமும் நீங்காத அன்புடையவனாகவே இருக்கின்றான். இங்ஙனமே துன்பங்களைக் கொடுத்தும் இறைவன் ஆன்மாக்களை உய்விப்பான் என்பது வைணவ சமயக்கொள்கை. இறைவனது கருணை வெள்ளம் துன்ப வடிவிலும் நம்மை வந்தடையும். இறைவனே அனைத்தையும் அருளிக் காப்பவன் என்ற துணிவு ஏற்பட்டபின் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொள்வதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை. இந்த எடுத்துக்காட்டில் மருத்துவன் நிலையில் எம்பெருமானையும் நோயாளியின் நிலையில் சீவான்மாவையும் வைத்துக் கூறப் பெற்றுள்ளமை அறியப்படும்.

# 4. சேஷீ - சேஷ உறவு

இந்த உறவு திருமந்திரத்தினை முதற்பதத்தின் 'ஓம்' என்பதிலுள்ள மூன்று எழுத்துகளில் (அ + உ + ம) என்பதிலுள்ள அகாரத்தில் ஏறி மறைந்துள்ள 'ஆய' என்னும் நான்காம் வேற்றுமை உருபால் (லுப்த சதுர்த்தியால்) தெரிவிக்கப் பெறு கின்றது. இந்த உறவு அடிமை கொள்பவன் - அடிமை என்ப தாகும். சீவான்மாவுக்கு அவனுடைய கை, காலகள் முதலான உறுப்புகள் கூடிய உடல் சேஷமாவது போன்று, பரமான் மாவுக்குச் சரீரமாக நிற்கும் இந்தச் சீவான்மா சேஷபூதன் (அடிமை) ஆகின்றான். சர்வேசுவரன் தன்னுடைய திருவுள்ளத்தின் சங்கல்பாநுகுணமாய்த் தனக்கே உரிய விருப்பப் பொருளாய் உரிமையாக்கிக் கொள்ளுகின்றான். அதனால் பரமான்மா சேஷீ (ஆண்டான்) ஆகின்றான்.

பகலவனின் ஒளி அவனைவிட்டுப் பிரியாமல் காணப் பெறுவது போல, பரமான்மாவை விட்டுச் சீவான்மா பிரியா மல் காணப்படுவதால் அவனுடைய அமிச பூதனாகின்றான். அங்ஙனமே சீவான்மாவை விட்டுப் பரமான்மா பிரியாமல் இருப்பதால் சீவான்மாவை அமிசமாக உடையவனா கின்றான் பரமான்மா. மண்குடம் கருமையாக உள்ளது. துணி வெண்மையாக உள்ளது. கருமை, வெண்மை விசேஷணங்கள். குடமும், துணியும் விசேஷ்யங்கள். இந்த விசேஷ்ய - விசேஷணங்கள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதன போல விசேஷ்யமான பரமாத்மாவும் விசேஷணமான சீவான் மாவும் ஒருவரை விட்டு ஒருவர் விலகிநிற்க இயலாதவர்கள்.

இரத்தினத்திலிருந்து அதன் பிரகாசம் வேறுபடாமல் இருப்பது இரத்தினத்திற்குப் பெருமை தருவது. பூவைவிட்டு அதன் மணம் வேறுபடாமல் இருப்பது பூவிற்குப் பெருமை தருவது. அதுபோல, பரமான்மாவை விட்டுப் பிரியாது இருக்கும் சீவான்மா பரமான்மாவிற்கு கைங்கரியம் (தொண்டு) புரிவது சீவான்மாவுக்குப் பெருமை தருவது. இரத்தினத்திற்கு ஒளியும் பூவிற்கு மணமும் போலே சீவான்மாவிற்குக் கைங்கரியம் பெருமையைத் தருவது. கைங்கரியமே சீவான்மாவின் சொரூபமாகும்.

'சேஷத்துவமே[1] ஆன்மாவுக்குச் சொரூபம்'[2]

என்பது முமுட்சுப்படியின் வாசகம், அதாவது சேதநன் ஈசுவரனுக்கு சேஷபூதன் (அடிமை) என்பதாகும். எம் முறையில் அடிமையாகின்றான் என்பதனை நோக்குதல் வேண்டும். ஈசுவரன், சித்து, அசித்து என்பன வைணவ தத்துவங்கள். இவற்றுள்ஈசுவரனை விட்டு மற்ற இரு தத்துவங்களையும், 1. சித்து + சித்து, 2. அசித்து + அசித்து, 3. சித்து + அசித்து, 4. அசித்து + சித்து என்று இணைகளாகப் பிரித்து அமைத்து இவற்றிற்குச் சேஷி-சேஷபாவனையாகின்ற சம்பந்தத்தைச் செப்புதல் வேண்டும். இவற்றை 1. சேஷி-சேஷப் பொருள்களின் இச்சை, 2. சேஷி-சேஷப் பொருள்களை மேற்கொள்ளும் புருஷனுடைய இச்சை, 3. சேஷப் பொருளுடைய இச்சை, 4. சேஷியினுடைய இச்சை என நான்காகப் பிரித்து ஆராயலாம்.

---

1. சேஷத்துவம் - இது கட்டிப் பொன் போன்றது. கட்டிப்பொன் எப்படி அதனை உடையவனுக்குப் பெருமையைத் தந்து, அவனுக்குப் பிரியமானபடி பயன்படுத்திக் கொள்வதற்குத் தக்கதாகவும் இருக்கின்றதோ, அப்படியே சீவான்மா தன்னை உடைய ஈசுவரனுக்குப் பெருமையை ஈந்து அவன் விருப்பப்படி விநியோகப்படுத்திக் கொள்வதற்குத் தகுதியுடையதாகவும் இருக்கின்றது.

2. முமுட்சு - 55. ஒப்பிடுக. டை - 51.

1. மன்னனுக்கும் ஊழியனுக்கும் உள்ள சம்பந்தம் முதலில் குறித்த சேஷீ - சேஷ சம்பந்தமாகும். 'இவன் நமக்குப் பணியைச் செய்கின்றான். இது நம் சிறப்பிற்கு உறுப்பாகையால் இவன் நமக்கு வேண்டும்' என்று கருதும் மன்னனுடைய இச்சையாலும், "நான் தலைவனுக்குச் சிறப்பை உண்டு பண்ணுபவனாகையால், அதற்குச்சேரப் பாங்காய் நடந்து கொள்ள வேண்டும் என்று ஊழியனுடைய இச்சையாலும் ஊழியன் உபாதேயப் பொருளாயிருத்தலின் அவனுக்குச் (ஊழியனுக்குச்) சேஷத்துவம் உண்டு. இது சித்துக்கும் -சித்துக்கும் உள்ள தொடர்பு.

2. ஆசமனத்திற்கும்[3] பிரட்சாளனத்திற்கும்[4] உள்ள தொடர்பு அசித்திற்கும்·அசித்திற்கும் உள்ள சேஷீ - சேஷ பாவனை என்று சொல்லப்பெறும். இவ்விரண்டும் செயல் களாயிருத்தலின் அசித்தின்பாற்படும், மேற்கூறிய மன்னன்-பணியாளன் என்னும் இருவரிடத்திலும் இச்சையைக் காண்டல் போன்று, இவற்றிடத்தில் காண்டற்கில்லை. ஆனால், ஆசமனத்திற்குத் தூய்மையை உண்டாக்கும் வன்மை உள்ளது. அவ்வாசமனத்திற்குப் பிரட்சாளனம் இன்றியமையாது வேண்டும். இங்ஙனம் [அவசியம் வேண்டி யிருக்கும் இதை மேற்கொள்ளும் புருஷன் இச்சையாலே பிரட்சாளனம் உபேயமா யிருத்தலின், இது சேஷப் பொரு ளெனச் சொல்லப் பெறும்.

3. சித்திற்கும் அசித்திற்கும் உள்ள தொடர்பை எசமா னன் அவன் செய்யும் வேள்வி என்னும் இடத்தில் காணலாம்

3. ஆசமனம் என்பது, 'அச்சுதாய நம; அனந்தாய நம; கோவிந்தாய நம;' என்னும் மந்திரங்களை உச்சரித்துத் தீர்த்தத்தை உள்ளங்கையில் எடுத்துப் புசித்து, 'கேசவாய நம;' முதலிய 12 நாமங்களையும் சொல்லி அந்தந்த இடங்களைத் தூடைத்துக் கொள்ளுதல்.

4. பிரட்சாளனம் என்பது நீரினால் கை, கால்களை அலம்பிக் கொள்ளுதல்.

இது மூன்றாவதாகச் சொன்ன சித்திற்கும் - அசித்திற்கும் உள்ள தொடர்பு. ஜைமினி மாமுனிவர் வேள்வி என்னும் செயலிற்குச் செய்பவனாகிய தன்மையில் எசமானன் சேஷப் பொருள் எனக் கருதுகின்றார். இங்கு வேள்விப் பொருளாகிய சேஷிக்கு இச்சை உண்டாவதற்கு வழி இல்லை. சேஷப் பொருளாகிய எசமானன் வேள்விக்குத் தொடக்கமாகிற சிறப் பிற்கும் காரணமாகலின் "இந்த வேள்விக்கு நான் வேண்டும்" என்னும் தன்னிச்சையால் உபாதேயப் பொருளாகப் பார்க்கப் படுகின்றான். அதனால் எசமானனுக்குச் 'சேஷத்துவம்' உண்டு.

4. அசித்துக்கும் சித்துக்கும் உள்ள தொடர்பைப் பொன், பொன்னுடையவன் என்னும் இடங்களில் காணலாம். இங்கு சேஷப் பொருளாகிய பொன்னுக்கு இச்சை உண்டாவ தில்லை. சேஷியான பொன்னுடையவனே "இப்பொன் பொன்னுடையவன் என்னும் சிறப்பிற்கு உடலாகையால், நமக்கு வேண்டும்" என்னும் தன்னிச்சையால் பொன்னை எடுத்துக் கொள்ளுகின்றான். இவ்விதம் பொன் உபாதேயமா யிருத்தலின் அதற்குச் சேஷத்துவம் உண்டு என்பது தெளிவு.

இக்கூறியவற்றால் சித்து அசித்துகளுடைய சேஷி - சேஷபாவனைத் தொடர்பை ஒருவாறு தெரிந்துகொண் டோம். இவற்றுள் சேதநன் ஈசுவரனுக்குச் சேஷபூதனாய் இருக்குந் தன்மை எப்பகுதியைச் சார்ந்தது என்பதைத் தெரிவு செய்வோம்.

(1) மன்னனுக்குக் கன்மத்தால் ஊழியன் சேஷப் பொருளாகின்றான். இங்கோ ஈசுவரனுக்குச் சேதநன் அங்ஙனம் கன்மத்தில் சேஷப் பொருள் அல்லன். ஆதலால் ஈசுவரனுக்கும் சேதநனுக்கும் உள்ள தொடர்பு, மன்ன னுக்கும் ஊழியனுக்கும் உள்ள தொடர்பு போன்றதன்று.

(2) ஆசமனம், பிரட்சாளனம் இரண்டும் அசித்துப் பொருளாதலின், இங்குச் சித்துப் பொருளாகின்ற ஆன்மா பரமான்மாக்களைப் பற்றிக் கூறுதலின், இதுவும் பொருந்தாது.

(3) தலைவன் அவன் செய்யும் வேள்வி ஆகிய இரண்டில் அசித்துச் சேஷியாயும், சித்து சேஷப் பொருளாயும் இருத்தலின், சேஷியாய் இருக்கும் ஈசுவரன் சித்தாதலின், இதுவும் பொருந்தாது.

(4) பொன், பொன் உடையவன் இவற்றிலும் ஒன்று சித்தாயும், மற்றொன்று அசித்தாயுமே உள்ளன. ஆயினும், சித்தாகிய பொன்னுடையவனுக்கு அசித்தாகிய பொன் எங்ஙனம் எவ்வகையிலும் அவனுடைய விருப்ப விநியோகங்களுக்குத் தக்கதாய் உள்ளதோ, அங்ஙனமே சேதநனும் ஞானமிருப்பினும், தனக்கென ஒன்றையும் கொள்ளாதவனாயும், ஈசுவரனின் பிரியத்திற்கேற்பவே விநியோகிக்கப்படத் தக்கவனாயும் உள்ளான். அங்ஙனம் இருத்தலே சேதநனுடைய சொரூபமாகும். ஆதலின் பொன்னின் நிலையிலேயே சேதநன் ஈசுவரனுக்குச் சேஷபூதனாய் உள்ளான் என்பதாகக் கொள்ளல் வேண்டும். ஆகவே, இதுவே பொருத்தமானதாகின்றது.

ஈண்டு இதற்கு விளக்கமாக இரண்டு எடுத்துக்காட்டுகளை உரைக்கலாம் :

(1) சக்கரவர்த்தித் திருமகன் கானகம் சென்றதால் வசிட்டர் பரதனை அரசு ஏற்றுக் கொள்ளுமாறு கூறினார். பரதன் வசிட்டரை நோக்கி, "முனிவரே, அரசு எவ்வாறு இராமனுக்கு உடைமைப் பொருளோ, அவ்வாறே யானும் அவருக்கு உடைமைப் பொருளாக உள்ளேன். இம் முறையில் அரசை யான் ஆள வேண்டியதுதான் என்னை ? அரசுதான் என்னை ஆளட்டுமே !" என இயம்பினான். இங்கு ஞானியாகிய பரதன், இராமனைப் பொன்னுடையவன் இடத்தில் வைத்துத் தன்னைப் பொன்னோடு ஒக்கக் கூறியுள்ளதைக் காணலாம்.

(2) ஆதிசேடனைப் பொன்னாகவும் நாராயணனைப் பொன்னையுடையவனாகவும் பொய்கையாழ்வார் கூறுவார்.

சென்றால் குடையாம் ; இருந்தால்சிங் காசனமாம் ;
நின்றால் மரவடியாம் ; நீள்கடலுள்—என்றும்
புணையாம் ; அணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்,
அணையாம் திருமாற்கு அரவு

[மரவடி—பாதுகை; புணை—திருப்பள்ளி மெத்தை; அணிவிளக்கு—மங்கள தீபம்; பூம் பட்டு—அழகிய திருப்பரி வட்டம்; புல்கும்—தழுவிக் கொள்வதற்கு அணை—தலையணை]

என்பது பாசுரம், "திருவனந்தாழ்வானைப்போல எம்பெருமானுக்கு எல்லாக் காலங்களிலும் எல்லாவிதமான அடிமைகளையும் செய்யப்பெற வேண்டுமென்று திருவுள்ளங் கொண்ட ஆழ்வார் அத்திருவனந்தாழ்வான் செய்யும் அடிமைச் செயல்களை எடுத்தருளிச் செய்கின்றார். எம்பெருமான் உலாவி யருளும்போது மழை-வெயில் திருமேனியில் படாதபடி குடையாக வடிவெடுப்பன்; எழுந்தருளியிருக்கும்போது திவ்விய அரியணையாக வடிவங் கொள்வான்; நின்று கொண்டிருக்கும்போது திருப்பாதுகையாக வடிவம் கொண்டிருப்பன்; திருப்பாற் கடலில் திருக்கண் வளர்ந்தருளுங் காலத்தில் திருப்பள்ளி மெத்தை உருவமாக இருப்பன்; ஏதேனும் ஒன்றை எம்பெருமான் விளக்கு கொண்டு காண விரும்பும்போது திருவிளக்காக மாறிப் பணி செய்வன்; சாத்திக் கொள்வதற்குத் திருப்பரி வட்டத்தை விரும்பும்போது அதுவுமாக வடிவாய் கொள்வான்; சாய்ந்தருளும்போது தழுவிக் கொள்வதற்கு உரிய தலையணையுமாகவும் வடிவங்கொண்டு உதவுவான்" என்பது பாசுர விளக்கம்.

ஆழ்வார் பாசுரங்கள் : இந்த உறவை ஆழ்வார் பாசுரங்களில் வரும் இடங்களை நினைந்து அநுபவிப்போம்.

---

5. முதல் திருவந். 53

(1) எடுத்த எடுப்பில் எல்லோர் சிந்தனையிலும் எழுவது,

எற்றைக்கும் ஏழேழ்
　　பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம்
　　உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள்
　　மாற்று (29)

[எற்றைக்கும்—காலம் உள்ள அளவும்; ஏழேழ் பிறவிக்கும்—அவதாரங்களில்; உற்றோம்—உறவினர்கள்; ஆள் செய்வோம்—அடிமை செய்வோம்.]

என்ற திருப்பாவையின் 29-ஆம் பாசுரமாகும்.

''எம்பெருமானுடைய பிறவிதோறும் ஒக்கப் பிறக்கும் பிராட்டியைப்போலே நாங்களும் ஒக்கப் பிறந்து உனக்கே (உனக்கு மாத்திரமே) அடிமைத் தொழில் செய்ய நினைக்கின்றோம்'' என்றனர், ஆயச் சிறுமிகள். ஆழ்வார்கள் எல்லாரும் பெரும்பாலும் பகவானிடம் வேண்டினது பிறப்பறுக்கவேண்டும் என்பது. 'ஆதலால் பிறவி வேண்டேன்' (திருமாலை - (3) என்று தொண்டரடிப் பொடிகளும், 'யான் உலகில், பிறப்பேன் ஆக என்னேன்' (பெரி.திரு. 6.3:1) என்று திருமங்கையாழ்வாரும் சொல்லியிருக்க, இப்பெருமாட்டி அவதாரங்கள் தோறும் கூடவே வந்து பிறந்து அடிமைத் தொழில் செய்ய விரும்புகின்றனர். இவ்விடத்தில் சைவப் பெரியார், திருநாவுக்கரசரும் பிறவி வேண்டும் என்பதை,

மனிதப் பிறவியும் வேண்டுவதே
　　இந்த மாநிலத்தே (4.81:4)

என்ற தேவாரப்பாடலில் கூறியிருப்பதை நினைந்து மகிழலாம்.

திருவேங்கடம்[6] பற்றிய பெரிய திருமொழி திருப்பதிகம் ஒன்றில் (1.9) திருமங்கையாழ்வார் '' உன்னைக் காண்பதோர

6. திருவேங்கடம் - இதைத் திருமலை என்றும் வழங்குவர். திருப்பதி (கிழக்கு) என்ற இருப்பூர்தி நிலையத்தில்

ராசையினால், '' நின்னை வந்தடைந்தேன். என்னுடைய முன்னைத் தீவினைகளைச் கருத்தில் கொண்டு என்னைக் கைவிடலாகாது. நீயே சர்வ ரட்சகன்; நானோ அநாதன், அநந்நியகதி, என் குற்றங்களைப் பொறுப்பிக்கைக்காகப் பிராட்டியும் 'அகலகில்லேன் இறையும்' என்று நின் திரு மார்பில் உறைகின்றாள். எனவே ''என் குற்றங்களைப் பொறுத்து என்னை ஆட்கொள்ள வேண்டும்'' என்று வேண்டுகின்றார். ஒவ்வொரு பாசுரத்திலும் ''அடியேனை ஆட்கொண்டருளே'' என்ற வேண்டுகோளைக் காணலாம். ஒன்பதாம் பாசுரத்தில் ''மாயனே, எங்கள் மாதவனே'' என்று பிராட்டி சம்பந்தம் கூறப்பெற்றிருப்பதனால் 'புருஷகாரம்' தெளிவாகின்றது.

'கண்ணார் கடல் சூழ்' (1-10) என்று தொடங்கும் திருவேங்கடம்பற்றிய திருப்பதிகத்திலும் பாசுரந்தோறும் ஆழ்வார்,

அண்ணா! அடியேன் இடரைக் களையாயே (1)
அலங்கல் துளப முடியாய்! அருளாயே! (2)
ஆரா அமுதே! அடியேற்கு அருளாயே (3)
அண்டா! அடியே னுக்குஅருள் புரியாயே (4)

(தென்-மத்திய இருப்பூர்தி) இறங்கிச் செல்ல வேண்டும். பேருந்து வசதிகள் உள்ளன. (சதிரவசதிகள் இலவசமாக) உள்ளன. கட்டணம் செலுத்துவோருக்கு நல்ல குடில்கள் (Cottages) வசதிகள் உள்ளன. உணவு வசதிகள் கிடைக்கும். எம்பெருமான்: திருவேங்கடநாதன், திருவேங்கடமுடையான், சீநிவாசன், வேங்கடநாதன், பாலாஜி, வேங்கடாசலபதி—பல திருநாமங்கள். தாயார்: அலர்மேல் மங்கை (திருச்சானூரில்); நின்ற திருக்கோலம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்

கோள்நா கணையாய் ! குறிக்கொள் எனை நீயே (5)

எந்தாய் ! இனியான் உனை என்றும் விடேனே (9)

என்று 'காக்கவேண்டும்' என்ற வேண்டுகோளை விடுப்பதைக் காணலாம்.

'தூ அளந்து உலகம்' (4.6) என்று தொடங்கும் 'காவளம்பாடி'[7] பற்றிய திருப்பதிகத்தில் பாசுரந்தோறும் "காவளம் பாடியாய் ! களைகண் நீயே" [களைகண்-இரட்சகன்] என்று இரட்சகத்துவத்தைப் பன்னி உரைக்கின்றார். இங்ஙனம் இந்த ஆழ்வார் பாசுரங்களில் இரட்சகத்துவத்தைப் பல இடங்களில் கண்டு மகிழலாம்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் 'வைகுந்தா' (2.6) என்ற திருப்பதிகத்தில் முதல் பாசுரத்தின்,

செய்குந்தா உன்னை நான்
பிடித்தேன் ; கொள் சிக்கெனவே (1)

என்பது இறுதி அடி, "என்னை நீ விட்டாலும், உன்னை நான் விடமுடியாதபடி பற்றிக் கொண்டேன்" என்று கூறுவதால், தான் சேஷன் என்பதைப் புலப்படுத்திக் கொள்வதைக் காணலாம்.

'எம்மா வீடு' (2.9) என்ற திருவாய்மொழித் திருப்பதிகத்தில் முதல் பாசுரத்தில் "பிரானே, நின்திருவடிகளை என் தலைமேல் வைக்கும் இத்தனையே வேண்டுவது" என்கின்றார்.

---

7. காவளம் பாடி : சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 7 கி. மீ. தொலைவிலுள்ளது. எந்தவித வசதிகளும் இல்லாத திருத்தலம். இருப்பூர்தி நிலையத்திலிருந்து மாட்டு வண்டி வசதிகள் உண்டு. இறைவன் : கோபாலகிருஷ்ணன், கண்ணன். தாயார் : மடவரல் நங்கை செங்கமலவல்லி நாச்சியார். நின்ற திருக்கோலம் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

இஃதேயான் உன்னைக்
 கொள்வதெஞ் ஞான்றும்என்
மைதோய் சோதி
 மணிவண்ண எந்தாய்
எய்தா நின்கழல்
 யான்எய்த ஞானக்
கைதா ; காலக்
 கழிவுசெய் யேலே (2)

[இஃதே-இஃது ஒன்றேயாகும். உன்னை-தேவரீரிடத்திலே, எஞ்ஞான்றும்-என்றைக்கும் ; கொள்வது-பிரார்த்திப்பது; மைதோய்-கருமைநிறம் படிந்த; எய்தா-பெறுதற்கரிதான ; நின்கழல்-தேவருடைய திருவடிகளை ; எய்த-அடைய; தா-தந்தருள வேண்டும் ; காலக்கழிவு-கால தாமதம் ; செய்யேல்-செய்ய வேண்டா]

என்பது இரண்டாம் பாசுரம். முதல் பாசுரத்தில் கேட்டதையே இங்கும் கேட்கின்றார்—'ஞானக் கைதா' என்று. "என்னுடைய சொரூபத்திற்கும் நின்னுடைய சொரூபத்திற்கும் இதுவே கொள்ளத்தக்கதாகும். சுவாமியான உன் பக்கல் சேஷபூதனான நான் கொள்வது இதுவேயாகும்." என்கின்றார். 'எய்தா நின்கழல்யான் எய்த ஞானக்கைதா' - தம் முயற்சியால் ஒருவர்க்கும் அணுக வொண்ணாத உன் திருவடிகளை 'உன்னாலே பேறு' என்றிருக்கின்ற நான் அணுகும்படியாகப் பண்ணவேண்டும்.

இவ்விடத்தில் ஈடு: "எம்பார்க்கு ஆண்டான் அருளிச் செய்த வார்த்தையை நினைப்பது" என்று. இதன் விவரணம் வருமாறு: முதலியாண்டான் ஒரு சமயம் திருநாராயண புரத்தில் (கர்நாடக மாநிலம்) எழுந்தருளியிருக்கையில் அவருடைய சீடரான ஸ்ரீவைணவர் ஒருவர் கோயிலை அடைந்து அங்கே எம்பார் சந்நிதியில் கைங்கரியம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நாள் சில ஸ்ரீவைணவர்கட்கு

எம்பார் திருவிலச்சினை சாதிக்க இருக்கையில் இந்த ஸ்ரீ வைணவரும் தமக்கும் சாதிக்கும்படி வேண்டினர்; அப்போது எம்பார், 'உமக்கு விசேஷ சம்பந்தம் உண்டோ?' என்று அவரை வினவ, அவரும் 'தேவரீருடைய சம்பந்தமே சம்பந்தம்' என்று பணிந்து விண்ணப்பம் செய்ய, அவ்வளவிலே எம்பார் 'இவர் முதலியாண்டானுடைய ஸ்ரீபாதத்தவர்' என்று அறியாமல் இவருக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களைப் பண்ணி இவரைக் கொண்டு கைங்கரியங்களும் பெற்று எழுந்தருளியிருக்கையில் ஆண்டானும் திரும்பக் கோயிலிலே எழுந்தருள, அப்போது அந்த ஸ்ரீவைணவர் ஆண்டானை வந்து சேவிக்க, ஆண்டானும் முன்புபோல இவரைக்கொண்டு தான் வேண்டும் கைங்கரியங்களைக் கொண்டிருக்க, அப்போது எம்பாரும் அறிந்து ஆண்டான் பக்கலிலே எழுந்தருளி 'கனக்க அபசாரப் பட்டேன்' என்று அருளிச் செய்தார். இவருடைய திருவுள்ளத்தில் ஊடாடும் கிலேசத்தை அறிந்து அப்பொழுது ஆண்டான் அருளிச் செய்த வார்த்தை இது: "ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டு பேர் கைகொடுத்தால் அவனை எடுப்பவர்கட்கும் எளிதாய், ஏறுபவனுக்கும் எளிதாய் இருக்குமல்லவா? அப்படியேயாகிறது" என்றாராம். இங்குக் கைகொடுப்பதாவது ஞானம் அளிப்பது. சம்சார சாகரத்தில் அழுந்தினவர்கட்கு இரண்டு ஆசாரியர்களாக இருந்து 'ஞானக் கை' கொடுப்பது நன்றுதானே என்பது முதலியாண்டானது திருவுள்ளம்.

'சன்மம் பலபல செய்து' (3.10) என்ற திருவாய்மொழியில்,

முட்டில்பல் போகத் தொருதனி
　நாயகன் மூவுல குக்குரிய
கட்டியைத் தேனை அமுதைநன்
　பாலைக் கனியைக் கரும்புதன்னை
மட்டவிழ் தண்ணந் துழாய்முடி
　யானை வணங்கி அவன் திறத்துப்
பட்டபின் னைஇறை யாகிலும்
　யான்என் மனத்துப் பரிவலனே (3)

[ முட்டு-இடையூறு ; தனி நாயகன்-ஒப்பற்ற தலைவன்; கட்டி-கருப்பங்கட்டி ; மட்டு-மது ; பட்டபின்னை-ஆட்பட்ட பிறகு ; இறை-சிறிது அளவு ; பரிவு-பீடை]

என்பது மூன்றாம் பாசுரம். இப்பாசுரத்தில் ' 'தனிநாயகன்' என்பதால் 'சேஷி' என்ற நிலையும், 'பட்டபின்னை' என்பதால் 'சேஷன்' என்ற நிலையும் விசதமாகின்றன.

வீற்றிருந்து (4.5) என்ற திருவாய்மொழியில்,

உண்டும் உமிழ்ந்தும் கடந்தும்
இடந்தும் கிடந்தும் நின்றும்
கொண்ட கோலத் தொடுவீற்
றிருந்தும் மணங்கூடியும்
கண்ட வாற்றால் தனதே
உலகென் நின்றான்தன்னை
வண்டமிழ் நூற்க நோற்றேன்
அடியார்க் கின்பமாரியே (10)

[ உண்டும்-(பிரளயத்தில்) உண்டும் ; உமிழ்ந்தும்-படைத்தும் ; கடந்தும்-அளந்து காற்கீழே இட்டும்; இடந்தும்-தூக்கியும் ; கிடந்தும்-கடற்கரையில் கிடந்தும் ; நின்றும்-தேவர்கட்குக் காட்சி கொடுக்க நின்றும் ; கொண்டகோலம்-முடிசூட்டி நின்றகோலம் ; மணம் கூடியும்-பூமிப் பிராட்டியோடு கூடியும் ; உலகுதனதே என்-உலகம் தனக்கே சேஷம் என்று சொல்லும்படி ]

என்பது பத்தாம் பாசுரம். இதில் 'தனதே உலகென நின்றான் தன்னை' என்பதால் சேஷித்துவமும் 'வண்டமிழ் நூற்க நோற்றேன்' என்பதால் சேஷத்துவமும் தெளிவாகின்றன. திருக்குடந்தைபற்றிய,

ஆரா அமுதே (5.8) என்ற திருவாய்மொழியில்

வாரா வுருவாய் வரும்என்
மாயா ! மாயா மூர்த்தியாய் !
ஆரா அமுதாய் அடியேன்
ஆவி அகமே தித்திப்பாய் !
தீரா வினைகள் தீர
என்னை ஆண்டாய் ! திருக்குடந்தை
ஊரா ! உனக்காட் பட்டும்
அடியேன் இன்னம் உழல்வேனோ ? (10)

[ வாரா-திரு உருவத்தோடு வாராமல் ; அருவாய்-அரூபியாய்; மாயா-ஒருகாலும் அழியாத ; ஆரா-திருப்தி பிறவாத ; தீரா-தொலையாத ; தீர-தொலையும்படி ; ஆண்டாய்-ஆண்டருளினாய் ; ஆட்பட்டும்-அடிமைப் பட்டும் ; உழல்வேனோ-கிலேசப்படுவேனோ ]

என்பது பத்தாம் பாசுரம். இதில் ' ஆண்டாய் ' என்பதால் சேஷித்துவமும், ' உனக்காட்பட்டும் ' என்பதால் சேஷத்துவமும் தெளிவாகின்றன.

நீராய் நிலனாய் (6.9) என்ற திருவாய்மொழியில்

தெரிதல் நினைதல் எண்ணல்
ஆகாத் திருமாலுக்கு
உரிய தொண்டர் தொண்டர்
தொண்டர் சடகோபன் (11)

[ தெரிதல்-சாத்திர ஞானத்தால் தெரிதல் ; நினைதல் மனத்தால் நினைதல் ; எண்ணல்-தியானத்தால்-கருதுதல் ]

என்பது பதினோராவது (பலச் சுருதிப்) பாசுரம். இதில் ' திருமாலுக்கு ' என்பதால் சேஷித்துவமும், ' தொண்டர் தொண்டன் ' என்பதால் சேஷத்துவமும் தெளிவாகின்றன.

உண்ணிலாவிய (7.1) என்ற திருவாய்மொழியில்,

புண்டரீகக்கொப் பூழ்புனற்
பள்ளி அப்பனுக்கே
தொண்டர் தொண்டர் தொண்டர்
தொண்டன் சடகோபன் (11)

[ புண்டரீகம்-தாமரை ; புனல் பள்ளி அப்பன்-காரண நீரில் கண் வளர்ந்த பெருமான் ]

என்பது பதினோராவது(பலச்சுருதிப்)பாசுரம். இதில் 'புனல் பள்ளி அப்பன்' என்பதால் சேஷித்துவமும் 'தொண்டர் தொண்டன்' என்பதால் சேஷத்துவமும் புலனாகின்றன.

வார்கடாஅருவி (8.4) என்ற திருச்செங்குன்றூர் பற்றி திருவாய்மொழியில்,

என்அமர் பெருமான்
இமையவர் பெருமான்
இருநிலம் இடந்தஎம்
பெருமான்

முன்னைவல் வினைகள்
முழுதுடன் மாள
என்னைஆள் கின்றஎம்
பெருமான் (3)

[ என் அமர்-எனக்குற்ற ; இமையவர்-நித்திய சூரிகள் ; இருநிலம்-பெரிய பூமி; இடந்த-தூக்கிய ; ஆள்கின்ற-அடிமை கொள்கின்ற ]

என்பது மூன்றாம் பாசுரம். இதில் 'என் அமர் பெருமான்... இருநிலம் இடந்த எம்பெருமான்' என்பதால் சேஷித்துவமும், 'என்னை ஆள்கின்ற' என்பதால் சேஷத்துவமும் அறியப் பெறுகின்றன. இங்ஙனமாகத் திருவாய்மொழியில் சேஷி-சேஷ உறவு (ஆண்டான்-அடிமை உறவு) பற்றிய பாசுரங்கள் நிறைந்து காணப்பெறுகின்றன.

குலசேகரப் பெருமாள் அருளிய வித்துவக்கோட்டம்மான் பற்றிய திருமொழியில் (5),

செந்தழலே வந்து அழலைச்
　　செய்திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் வெங்கதிரோற்
　　கல்லால் அலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும்
　　விற்றுவக் கோட்டம்மா ! உன்
அந்தமில் சீர்க்கல்லால்
　　அகம்குழைய மாட்டேனே (6)

[ செந்தழல்-செந்நிற முடைய நெருப்பு ; அழலை-வெப்பத்தை ; செம்கமலம்-செந்தாமரை ; அந்தரம் சேர்-வானத்தில் தோன்றுகின்ற ; வெம் கதிரோன்-சூரியன் ; அல்லால்-அல்லது ; அலரா-மலரமாட்டா ; வெம்துயர்-கொடிய பாவங்கள் ; வீட்டாவிடினும்-தீர்த்தருளா தொழிந்தாலும் ; அந்தம் இல்சீர்-எல்லை இல்லாத சிறப்பு (வகுத்த சேஷியாக இருக்கும் இருப்பு) ]

என்பது ஆறாம் பாசுரம். இதில் சூரியன் நிலையில் எம்பெருமானையும் (சேஷி) தாமரையின் நிலையில் தம்மையும் (சேஷன்) வைத்துக் கூறியதனால் ஆண்டான்- அடிமை உறவு காணப்படும். ஆனால் பிரதிவாதி புயங்கரம் அண்ணசாமி நாயக-நாயகிபாவனை தொனிக்கும் என்று அருளிச் செய்வர். ஒரு வகையில் நோக்கினால் இதுவும் பண்டைய நிலைப்படி ஆண்டான்-அடிமை உறவு தானே! (ஆண்-பெண் சமத்துவம் பேசும் இக்கால நிலையில் சில குடும்பங்கட்குப் பொருந்தலாம்)

பாரதியாரின் 'கண்ணன் பாட்டில்' கண்ணன் - என் ஆண்டான் என்ற தலைப்பில் ஒரு பாடல் உண்டு. அது கண்ணனை ஆண்டானாகவும் (சேஷீ), தம்மை ஓர் அடிமை

யாகவும் (சேஷன்) வைத்து விளக்குகின்றார் பாரதியார். அசை போடும் பொருட்டு (சிந்திக்கும் பொருட்டு) சிலவற்றை ஈண்டுக் காட்டுவேன்.

தஞ்சம் உலகினில் எங்கணு மின்றித்
 தவித்துத் தடுமாறி
பஞ்சைப் பறையன்[7] அடிமை புகுந்தேன்
 பாரம் உனக்காண்டே! —ஆண்டே
 பாரம் உனக்காண்டே! (1)

துன்பமும் நோயும் மிடிமையும் தீர்த்துச்
 சுகமருளல் வேண்டும்,
அன்புடன் நின்புகழ் பாடிக் குதித்துநின்
 ஆணைவழி நடப்பேன்—ஆண்டே!
 ஆணைவழி நடப்பேன். (2)

காடு கழனிகள் காத்திடுவேன், நின்றன்
 காலிகள் மேய்த்திடுவேன்
பாடு படச்சொல்லிப் பார்த்ததன் ! பின்னர்என்
 பக்குவஞ் சொல்லாண்டே! —ஆண்டே!
 பக்குவம் சொல்லாண்டே! (3)

தோட்டங்கள் கொத்திச் செடிவளர்க்கச் சொல்லி
 சோதனை போடாண்டே!
காட்டு மழைக்குறி தப்பிச்சொன்னாலெனக்
 கட்டியடி ஆண்டே! —ஆண்டே!
 கட்டியடி ஆண்டே! (6)

---

7-பறையன் – இன்றுள்ள சாதியைக் குறிப்பதன்று. 'அடிமை' என்ற பொருளில் ஆளப்பெற்றுள்ளதாகக் கொள்க.

ஒன்பது வாயிற் குடியினைச் சுற்றி
ஒரு சிலபேய்கள்வந்தே
துன்பப் படுத்துது மந்திரம் செய்து
தொலைத்திட வேண்டும் ஐயே ! —பகையாவும்
தொலைத்திடவேண்டும் ஐயே ! (9)
[மந்திரம்-திருமந்திரம்]

பேயும் பிசாசும் திருடரும் என்றன்
பெயரினைக் கேட்டளவில
வாயும் கையும்கூடி அஞ்சி நடக்க
வழிசெய்ய வேண்டும் ஐயே !—தொல்லைதீரும்
வழிசெய்ய வேண்டும் ஐயே ! (10)

இந்தப் பாடல்களை ஆழ்ந்து சிந்தித்து ஊன்றிப் படித்தால் 'சேஷீ-சேஷ சம்பந்தம்' தட்டுப்படும்.

# 5. நாயக-நாயகி சம்பந்தம்

திருமந்திரத்திலுள்ள 'ஓம்' என்ற முதற் பதத்தின் மூன்று எழுத்துகளில் (அ+உ+ம) உ-காரத்தினால் நாயக-நாயகி சம்பந்தம் நவிலப் பெறுவதாக முன்னர்க் குறிப்பிட்டதை ஈண்டு நினைவு கூரலாம். இந்த உறவு ஈண்டு விளக்கப் பெறுகின்றது.

எம்பெருமான் ஆழ்வார்களிடம் ஞானத்தையும் வளர்த்தான்; பக்தியையும் வளர்த்தான். தாமான தன்மையிலிருந்து பாடும்போது ஞானப் பாசுரங்கள் வெளியாயின. பிராட்டியாரின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு பேசும் போது பிரேமப் பாசுரங்கள் முகிழ்த்தன. நம்மாழ்வார் திருவாய்மொழியில் தாமான தன்மையில் பாடிய பாசுரங்கள் 73 பதிகங்களாகவும், பிராட்டியாரின் தன்மையிலிருந்து பாடிய பாசுரங்கள் 27 பதிகங்களாகவும் வடிவெடுத்துள்ளன. திருமங்கையாழ்வார் பாசுரங்களில் 24 பதிகங்கள் பெண் பாவனையில் பேசுவனவாக அமைந்துள்ளன. பெரியாழ்வார் பாசுரங்களில் இரண்டு பதிகங்கள் அகப்பொருள் அமைந்த பாசுரங்களாக அமைந்துள்ளன. இதனை அழகியமணவாளப் பெருமாள் நாயனார்

'ஞானத்தில் தம்பேச்சு
பிரேமத்தில் பெண்பேச்சு'[1]

என்று குறிப்பிடுவர். அதாவது ஞானநிலையிலிருக்கும் பொழுது அவர்கள் தரமான தன்மையிலிருந்து பேசுவர். பிரேமநிலையிலிருக்கும்பொழுது பெண் தன்மையை அடைந்து வேற்று வாயாலே பெண் பேச்சாகப் பேசுவர். அப்பொழுது நம்மாழ்வாருக்குப் 'பராங்குசர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப் 'பராங்குச நாயகி' என்ற பெண்மைப் பெயரும், திருமங்கையாழ்வாருக்குப் 'பரகாலர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப் 'பரகால நாயகி' என்ற பெண்மைப் பெயரும் வழங்கப்பெறும்.

அகத் துறைப் பாசுரங்கள் பரமான்மாவைத் தலைவனாகவும் சீவான்மாவைத் தலைவியாகவும் கொண்டு பேசுவனவாக அமையும். வைணவப் பெருமக்கள் சங்ககால அகப்பொருள் நெறியையொட்டிப் பிற்காலத் தத்துவ முறையைக் கலந்து புதியதோர் அகப்பொருள் நெறியை அமைத்துக் காட்டிய பெருமையைப் பெற்றனர்.

மங்கையர்மீது கொள்ளும் காமம் 'விஷயகாமம்' என்றும் மாதவன்மீது கொள்ளும் காமம் 'பகவத் விஷயகாமம்' என்றும் வழங்கப்பெறும். முன்னதிலிருந்து பின்னது முற்றிலும் மாறுபட்டது. ஆயினும் சிற்றின்ப அநுபவமாகிய 'விஷய காமத்திற்குக்' கூறப் பெறும். அகப்பொருள் துறைகள் யாவும் 'பகவத் விஷயகாமத்திற்கும்' கூறப்பெறும். சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பது போல, பகவத் விஷயாநுபவத்திற்கும் பரபக்தி[2], பரஞானம்[3]

1. ஆசா. ஹித. 118
2 பரபக்தி—எம்பெருமானை நேரில் காண வேண்டும் என்ற ஆவல்.
3. பரஞானம்—எம்பெருமானை நேரில் காணல்.

பரமபக்தி[4], என்பவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப்பெறுகின்றன என்பதாகச் சமயச் சான்றோர்கள் கொள்வர்.

ஆழ்வார்கள் தரமான தன்மையைவிட்டுப் பெண்பாவனையை ஏறிட்டுக் கொள்வது எதற்காக? என்ற வினா எழுகின்றது. இதற்கு விடைகாணல் வேண்டும். ஆழ்வார்கள் பெண்தன்மையைத் தாமாக ஏறிட்டுக் கொள்ளுகின்றனரல்லர். இந்த நிலை (அவஸ்தை) தானே பரவசமாக வந்து சேருகின்றது. புருடோத்தமனாகிய எம்பெருமானின் பேராண்மைக்கு முன்னர் உலகம் அடங்கப் பெண் தன்மையதாயிருக்கையாலும், சீவான்மாவுக்குச் சுவாதந்திரிய[5] நாற்றமேயின்றிப் பாரதந்திரியமே[6] வடிவாயிருப்பதாலும், இவ்வகைகளுக்கேற்பப் பெண்பாவனை வந்தேறி என்றே கொள்ளலாம்.

வைணவர்களிடையே நிலவும் இன்னொரு மரபும் உண்டு. தண்டகாரண்ய முனிவர்கள் இராமபிரானின் பேரழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயமங்கையர்களாகிக் கண்ணனைக் கூடினர் என்ற வழக்கு ஒன்று உண்டு. ஆனால், ஆழ்வார்கள் அப்படியின்றி அப்பொழுதே பெண்மை நிலையை அடைந்து எம்பெருமானாகிய புருடோத்தமனை அநுபவிக்கக் காதலிக்கின்றனர் என்பதாகக் கொள்ளுவதே இந்த மரபு.

---

4. பரமபக்தி—எம்பெருமானை மேன்மேலும் இடைவிடாது அநுபவிக்க வேண்டும் என்னும் ஆவல். அன்றியும், எம்பெருமானோடு கூடும்போது சுகிக்கும்படியாகவும், பிரியும் போது துக்கிக்கும்படியாகவும் இருப்பது பரபக்தி; பகவானுடைய முழுமையான நேர்க்காட்சி பரஞானம்; அவனுடைய அநுபவம் பெறாவிடில் நீரைவிட்டுப் பிரிந்த மீன்போல மூச்சு அடங்கும்படி இருந்தல் பரமபக்தி. இவ்வாறு நம் பண்டைய ஆசிரியர்கள் நினைவுபடுத்துவர்.

5. சுவாதந்திரியம்-சுதந்திரத்தன்மை.

6. பாரதந்திரியம்-பிறருக்கு வசப்பட்டிருத்தல்.

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு எம்பெருமானை அநுபவிக்கும்பொழுது, அவர்கள் தோழி, தாய், மகள் என்ற மூவருள் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர்.

> "சம்பந்த உபாய புலங்களில் உணர்த்தி துணிவு பதற்றம் ஆகிய பிரஜ்ஞாவஸ்தைகளுக்குத் தோழி, தாயார், மகள் என்று பேர்"[7]
>
> [ பிரஜ்ஞாவஸ்தை-மூன்று காலங்களையும் அறியும் அறிவின் நிலை ]

என்று அழகியமணவாளப் பெருமாள் நாயனார் சூத்திரமிட்டுக் காட்டுவர். இங்ஙனம் மூன்று நிலைகளாக வடிவெடுக்கும் பாசுரங்கட்குத் தத்துவமும் கூறப்பெறுகின்றது. இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு எம்பெருமானை அநுபவிக்கும்பொழுது அவர்களின் பாசுரங்களும் தோழி சொல்வதுபோல் உருக்கொண்டு 'தோழிபாசுரம்' என்று திருநாமம் பெறும். தாய் சொல்வதுபோல் வடிவெடுத்துத் 'தாய்ப்பாசுரம்' என்று பெயர் பெறும். தலைவி பேசுவது போல வடிவெடுத்து 'மகள் பாசுரம்' என்று வழங்கப்பெறும். இங்ஙனம் மூன்று வகையாகக் கூற்றுகள் நிகழ்ந்து பாசுரங்கள் பேசுகின்றவர்கள் ஆழ்வார்களேயாவர். இதனைப் பதிகங்கள் தோறும் வரும் 'பலசுருதிப் பாசுரங்களால்' தெளிவாகும்.

திருவாய்மொழியில் பெண்நிலையிலிருந்து பேசியவற்றுள் தோழி பாவனையில் பேசியவை மூன்று பதிகங்கள்;[8] தாய் பாவனையில் பேசியவை ஏழு பதிகங்கள்;[9] மகள் பாவனையில் பேசியவை பதினேழு பதிகங்கள்.[10] இவற்றுள் தூதுப்பதிகங்க

7. ஆசா. ஹிரு. 133 (புருடோத்தம நாயுடு பதிப்பு)
8. திருவாய் 4.6 ; 6.5 ; 8.9. என்பன.
9. ஷை. 2.4 ; 4.2; 4.4 ; 5.6 ; 6.6 ; 6.7; 7.2. என்பன
10. ஷை. 1.4 ; 2.1 ; 4.8 ; 5.3 ; 5.4 ; 5.5 ; 5.9 ; 6.1 ; 6.2 ; 6.8 ; 7.3 ; 8.2 ; 9.5 ; 9.7 ; 9.8 ; 9.9 , 10.3 என்பவை.

ளாக நடைபெறுபவை நான்கு பதிகங்கள்[11]. திருமங்கையாழ்வார் அருளிச் செயல்களில் தாய் பாவனையில் அமைந்தவை 9 பதிகங்கள்[12]; மகள் பாவனையில் அமைந்தவை பதினைந்து திருமொழிகள்[13]; தூதுப் பதிகங்களாக நடைபெறுபவை ஒரு சில பதிகங்களிலும் உதிரிப் பாசுரங்களும்[14]. தோழிப் பாசுரங்கள் ஒன்று கூட இல்லை. பெரியாழ்வார் திருமொழியில் தாய்ப் பாசுரமாக இரண்டு பதிகங்கள்[15] காணப் பெறுகின்றன.

தத்துவம் : ஆசாரிய ஹிருதய சூத்திரத்தில் மூன்று நிலைகளும் 'ஞானாவஸ்தைகள்' என்னாமல் ' பிரஜ்ஞாவஸ்தைகள்' என்றது மூன்று விதமான நிலைகளும் அவர்கட்கு எல்லாக் காலங்களிலும் உண்டு என்னுமிடம் தோற்றுகைக்காக. திருவெட்டெழுத்தின் - அதாவது திருமந்திரத்தின் - ஓம், நமோ, நாராயணாய என்ற முறையே மூன்று பதங்களின் பொருள்களாய சேஷத்துவம், பாரதந்திரியம், கைங்கரியம் என்பவற்றின் ஞானமும் இவர்கள் திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தேயன்றோ இருப்பது? இதனை ஆசாரிய ஹிருதயம் 'அவஸ்தா திரய விருத்தி' (திரயம் - மூன்று; அவஸ்தை - நிலை) என்று பேசும்.

தோழிப் பாசுரங்கள் : இப்பாசுரங்களால் 'ஆன்மாக்கள் யாவும் பிற தெய்வங்கட்கு அடிமைப் பட்டவை அன்று எனவும், அவை தமக்குத் தாமே அடிமை அன்று எனவும் தெரிவிப்பதாகிய 'அநந்யார்ஹ சேஷத்துவம்' என்ற

---

11. திருவாய் 1.4; 6.1; 6.8; 9.7 என்பன.
12. பெரி. திரு. 2.7; 3.7; 4.8; 5.5; 8.1; 8.2; 9.9; 10.9 என்பன. திருநெடுந் 11-20 பாசுரங்கள்.
13. ஷெ. 2 8; 3.6; 8.3; 9.2; 9.3; 9.4; 9.5; 10.8; 10 10; 11.1; 11.2; 11 3 திருநெடுந். (21-30); சி. திருமடல் 1 பெ. திருமடல் 1.
14. ஷை 3,6; 1,2,3,4; 9.4. திருநெடுந். 26,27
15. பெரியாழ். திரு. 3.7; 3.8

கருத்தைத் தெரிவிப்பனவாக இருக்கும். இதுவே ஆசா. ஹ்ரு. 133 சூத்திரத்தில் 'சம்பந்தத்தில் உணர்த்தியாகிற பிரஜ்ஞாவஸ்தை' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. தோழிப் பாசுரங்களை ஆழ்ந்து அநுசந்தித்தால் இக்கருத்து தட்டுப் படும். சிலவற்றைக் காட்டுவேன்.

(1) திருவாய்மொழியில் 'தீர்ப்பாரையாமினி' (4.5) என்ற பதிகத்தில்,

இவளைப் பெரும்பரிசு இவ்வணங்கு
 ஆடுதல் அன்று ; அந்தோ!
குவளைத் தடங்கண்ணும் கோவைச்
 செவ்வாயும் பயந்தனள்;
கவளக் கடாக்களிறு அட்ட
 பிரான்திரு நாமத்தால்
தவளப் பொடிகொண்டு நீர்இட்
 டாடுமின்; தணியுமே (5)

[பரிசு - மார்க்கம் ; அணங்கு ஆடுதல் - வெறியாடுதல்; குவளை தடகண் - குவளை மலர் போன்ற விசாலமான கண்கள்; கோவை - கோவைக் கனி; பயந்தனள் - நிறவேறுபாடு அடைந்தனள் (பயப்பு-நிறவேறுபாடு); கவளம் - ஓர் அளவு; கடா - மதம்; களிறு - (குவலயாபீடம் என்ற) யானை; அட்ட - கொன்ற; பிரான் - சுவாமி; தவளப் பொடி - வைணவர்களின் பாததூளி; இட்டிடுமின் - தூவுங்கள்; தணியும் - நோய் தீரும்]

என்பது ஐந்தாம் பாசுரம். இது வெறி விலக்குத் துறையைச் சார்ந்த பாசுரம். தலைவியின் மன வாட்டத்தையும் உடல் வேறுபாட்டையும் கண்ட தாயார் கட்டுவிச்சியின் குறியால் இவை தெய்வத்தினாலாயிற்று என்று துணிந்து வேலனைக் கொண்டு 'வெறியாட்டு' எடுக்கும் நிலை இது. தோழி அறத்தோடு நின்றோ வேறு வழிகளை மேற்கொண்டோ இதனை நிறைவேற்ற விடாமல் தடுக்க முயல்வது 'வெறி விலக்கு' என்று வழங்கப் பெறும். இதில் தோழி சொல்லுவது;

"குவல்யா பீடத்தைக் கொன்றொழித்த கண்ணபிரானின் திருநாமங்களைச் சொல்லுங்கள்; அதுபோதாதென்றால் வைணவர்கள் பாத தூளிகளைக் கொண்டு வந்து தூவுங்கள். இவற்றால் நோய் தீர்வதைக் காண்பீர்கள். வெறியாட்டு இதற்கு மருந்தன்று'' என்கிறாள். இதனால் இவள் எம்பெருமானுக்கு அடிமையேயன்றி பிறருக்கு அடிமையன்று" என்ற கருத்து தோழி பேச்சால் வெளியாகின்றது.

[2] இதே துறையமைந்த திருவிருத்தப் பாசுரம் தன்று (20) மிக அற்புதமாக நாடக பாணியில் 'வெறிவிலக்கை' விளக்குகின்றது.

சின்மொழி நோயோ கழிபெருந்தெய்வம்,
இந்நோய் இனது என்று
இன்மொழி கேட்கும் இளந்தெய்வம்
அன்று இது வேலன்! நில்நீ
என்மொழி கேள்மின்என் அம்மனைமீர்!
உலகேழும் உண்டான்
சொன்மொழி மாலைஅம் தண்ணந்
துழாய்கொண்டு சூட்டுமினே (20)

[ சில் மொழி-சில பேச்சுகள்; கழி பெரும் தெய்வம்-மிகப் பெரிய தெய்வம்; இனது-இப்படிப்பட்டது; இல் மொழி-இல்லாத மொழி; இளந் தெய்வம்-சிறு தெய்வம்; வேலன்-வெறியாட்டாளன்; ஏழ்உலகு-எல்லா உலகங்களையும்; சொல் மொழி-திருநாமம்; மாலை-திருத்துழாய் மாலை; சூட்டுமின்-சூட்டுங்கள் ]

என்பது பாசுரம். ஒரு வெறியாடுகளம். தோழியின் உடல் வேறுபாட்டைக் கண்டு தாயார் வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்கின்றனர். முருக பூசை புரியும் வெறியாட்டாளன்[16] களம்

16. வெறியாடுபவனையும் வேலன் என்று குறிப்பிடுவது அகத்திணை மரபு. அவன் முருகக் கடவுளது வேலைத் தனக்கு அடையாளமாக ஏந்திக் கொண்டு நின்று ஆடுதலால் வேலன் எனப்படுகின்றான்.

அமைத்து வெறியாட்டுக்குத் தயாராகின்றான். ஒருபக்கத்தில் 'அரிநரைக் கூந்தல் செம்முதுச் செவிலியர்' சூழ தாய் அமர்ந்திருக்கின்றாள், தலைவி பக்கத்து அறையொன்றில் வெறியாடுவதனால் தன் களவு வெளிப்பட்டுவிடுமோ? என்று அஞ்சிக் கண்ணீர் விட்டு அழுத நிலையில் இருக்கின்றாள். இச்சமயத்தில் களத்தில் தோழியின் பிரவேசம் நடைபெறுகின்றது. வேலனை நோக்கி, "வேலனே! உன் பூசையை நிறுத்துக. இவளுக்கேற்பட்ட நோய் மிகப்பெரிய தெய்வமான எம்பெருமான் விஷயமாக ஏற்பட்டது. இவளுடைய நோய் 'இப்படிப் பட்டது' என்று வரையறுத்துச் சொல்ல ஆற்றலில்லாத பொருளற்ற தோத்திரங்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்ற சிறு தெய்வ விஷயமாக ஏற்பட்டது அன்று" என்கின்றான். தாயாரை நோக்கி, "நீங்கள் இவ்வாறு கலங்குவது உசிதமன்று. உங்களைவிட நான் மிகச் சிறியவனேயாயினும், இப்போது என் பேச்சுக்குச் சிறிது செவி சாயுங்கள். இந்த விபரீத முயற்சியை விட்டொழித்து உலகமுண்ட திருவாயனுடைய திருநாமங்களை இவள் செவிப்படுமாறு சொல்லுங்கள். அவனுடைய திருத்துழாய் மாலைப் பிரசாதத்தைக் கொணர்ந்து இவளுக்குச் சூட்டுங்கள். இதுவே இவள் நோய்க்கு மருந்து" என்று பேசுகின்றாள். இதில் தலைவியின் அநந்யார்ஹ சேஷத்துவத்தைத் தோழி வெளிப்படுத்துவது தெளிவாகின்றதல்லவா!

(3) திருவாய்மொழியில் 'துவளில் மணிமாடத்து' (6.5) என்ற பதிகத்தில்,

> கரைகொள் பைம்பொழில் தண்பணைத்தொலை
> வில்லி மங்கலம் கொண்டுபுக்கு
> உரைகொளின்மொழி யாளை நீர்உமக்
> காசை யின்றி அகற்றினீர்
> திரைகொள் பௌவத்துச் சேர்ந்த தும்திசை
> ஞாலம் தாவி யளந்ததும்
> நிரைகள் மேய்த்ததும் மேபி தற்றி
> நெடுங்கண் நீர்மல்க நிற்குமே (3)

[கரை-தாமிரபரணிக்கரை; தண்பணை-குளிர்ந்த நீர் நிலங்கள்; தொலைவில்லிமங்கலம்-இரட்டைத்திருப்பதி; உரைகொள்-புகழ்மிக்க; அகற்றினீர்-உறவு அறுத்துக் கொண்டீர்; பௌவம் திருப்பாற்கடல்; திசைஞாலம்-திசைகளோடு கூடின பூமி; நிரைகள்-பசுக்கூட்டங்கள்; 'பிதற்றி-வாய்வெருவி; நீர்மல்க-நீர்பெருக]

என்பது மூன்றாம் பாசுரம், தொலைவிலிமங்கலத்திற்கு[17] இவளை இட்டுச்சென்றதால் ஏற்பட்ட பலன்' என்கின்றாள் தோழி. ''நீங்கள் அவளை அங்கு இட்டுச் சென்றதால் பொருநையாற்றங்கரையை விளாக்குலை கொண்டிருக்கின்ற பரந்த சோலைகளையும் குளிர்ந்த நீர் நிலைகளையும் காணும் படியாயிற்று. இதனால் இவள் அத்திருப்பதியில் ஈடுபட்டு உங்களோடு உறவு அறும்படியானாள். திருப்பாற்கடலில் எம்பெருமான் அறிதுயில் கொண்டிருக்கும் நிலையையும், திருவிக்கிரமாவதாரத்தில் நிலம் முழுவதைத் தாவி அளந்த நிலையையும், கண்ணனாக நின்று ஆநிரைகளை மேய்த்த தையும் பிதற்றிக் கொண்டு கண்ணீர் பெருக நிற்கின்றாள் என்கிறாள் தோழி. இதனால் தலைவியின் அநந்யார்ஹத்துவம் தோழிக்கு தெரிவித்தவாறு.

(4) திருவாய்மொழியில் குட்டநாட்டுத் திருப்பதியாகிய திருப்புலியூர்[18] பற்றிய 'கருமாணிக்க மலைபோல்' (8.9)

17. தொலைவில்லிமங்கலம்: ஆழ்வார் திருநகரி இருப்பூர்தி நிலையத்திலிருந்து இரண்டுகல் தொலைவிலுள்ளது. இத்திருப் பதி; பொருநையாற்றின் வடகரையிலுள்ளது. ஆற்றைக்கடந்து தான் இதனை அடைதல் வேண்டும். அடுத்தடுத்து இரண்டு கோயில்கள் இருப்பதால் இஃது இரட்டைத்திருப்பதி என்றும் வழங்கப்பெறும். நவதிருப்பதியில் இஃது இரண்டாவது மூன்றாவதாகும்.

18. திருப்புலியூர்-இது மலை நாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. செங்கனூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து மேற்குத்திசையில் நாலு கல் தொலைவிலுள்ளது. எந்தவித வசதிகளும் இல்லாத செங்கனூர் நிலையத்திலிருந்து மாட்டுவண்டியில்தான் செல்ல வேண்டும். எம்பெருமான்-மாயப்பிரான்; தாயார்-பொற்கொடி நாச்சியார்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

என்ற திருப்பதிகத்தில்,

> புனையிழைகள் அணியும் ஆடை
> யுடையும் புதுக்கணிப்பும்
> நினையும் நீர்மைய தன்றிவட்கிது
> நின்று நினைக்கப் புக்கால்
> சுனையி னுள்தடந் தாமரை
> மலரும் தண்திருப் புலியூர்
> முனைவன் மூவுல காளி
> அப்பன் திருவருள் மூழ்கினளே (5)

[ புனை-பூணுதல்; புதுக்களிப்பு-வடிவில் பிறந்த புதுமை; முனைவன்-முன்னோன்; ஆளி-ஆள்பவன்]

என்பது ஐந்தாம் பாசுரம். இந்தத் திருவாய்மொழி 'அறத்தொடு நிலை" என்ற அசல் பொருள் துறையில் அமைந்துள்ளது, கற்பென்னும் கடைப்பிடியில் நின்று தலைவியின் களவொழுக் கத்தைத் தோழி பெற்றோர்க்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருளாகும். அறத்தொடு நிற்றலைத் தொல் காப்பியர் 'புரைதீர்கிளவி' (தொல். களவியல்-23 நச்.) என்று குறிப்பிடுவர். இறையனார்களவியலாசிரியர் 'மாறுகோள்இல்லா மொழி' (இறை-கள. 14.) என்று கூறுவர். இதற்கு உரை யாசிரியர் ''எற்றினொடு மாறுகொள்ளாமையேஎனின்: தாயறிவினொடு மாறுகொள்ளாமையும், தலைமகள் பெருமை யொடு மாறுகொள்ளாமையும், தலைமகள் கற்பினொடு மாறு கொள்ளாமையும், தோழி தனது காவலொடு மாறுகொள்ளா மையும், நாணினொடுமாறுகொள்ளாமையும் உலகினொடு மாறுகொள்ளாமையும் எனக் கொள்க'' என்று நயம்படக் கூறுவர்.

இப்பாசுரத்தில் தோழி இத்தலத்து எம்பெருமானுடன் புணர்ச்சி (கலவி) நடைபெற்றிருக்கக்கூடும் என்பதற்கு மூன்று சான்றுகளைக் காட்டுகின்றாள், (1) அவள் அணிந்திருக்கும்

ஆபரணங்கள் முன்பு நாம் பூட்டினாற்போல் இல்லை' 'கலைத்துப் பூட்டினாற்போல் தோன்றுகின்றதன்றோ?' என்கின்றாள். (2) உடுத்தின ஆடையும் நாம் உடுத்தினபடி இல்லை. முகத்தைப் பார்த்து உடுத்தது போலல்லவா உளது! வேறுபாடு தோன்றவில்லையா?' என்று ஆடையின்மீது கவனத்தை ஈர்க்கின்றாள். (3) 'இவள் வடிவிலேயும் பிறந்த புதுமைகள் தோன்றவில்லையோ? இதற்கு முன்பு கோடையோடின வயல் போலல்லவா இருந்தது? இப்போது நீர் பாய்ந்த வயல் போலே தோன்றும் செவ்வியைப் பாருங்கள்' என்கின்றாள். காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் நின்று ஆராயப் புகுந்தாலும் இவளிடம் பிறந்துள்ள அழகுகள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவை என்பதையும் உணர்த்துகின்றாள். எம்பெருமானுடைய படிகளையே நினைக்க முடியாதபோது அவன் திறத்தில் ஈடுபட்டாருடைய படிகள் நினைக்கும் தரமன்று என்பதனையும் பெற வைக்கின்றாள். இவற்றால் 'முனைவன் மூவுலகாளி அப்பன் திருவருள் மூழ்கினளே' என்று இயற்கைப் புணர்ச்சி நடைபெற்று விட்டதை உறுதிப்படுத்துகின்றாள்.

அடுத்த பாசுரத்தில் (6) 'வேறு சான்றுகளும் உள்ளன' என்கின்றாள்.

திருவருள் மூழ்கி வைகலும்
    செழுநீர்நிறக் கண்ணபிரான்
திருவருள் களும்சேர்ந் தமைக்(கு)அடை
    யாளம் திருந்தஉள (6)
[வைகலும்-நடோறும்]

எப்பொழுதும் அவன் திருவருளிலேயே மூழ்கிக் கிடக்கின்றாள். அவனுடைய திருவருள் இவளிடம் சேர்ந்தமைக்கு மறைக்க முடியாத அடையாளங்கள் பல உள்ளன என்று கூறி ஒன்றினை மட்டிலும் காட்டுகின்றாள்.

திருவருள் கமுகு ஒண்பழத்தது
மெல்லியல் செவ் (6)

[கமுகு-பாக்குமரம் ; இதழ் உதடு]

'எம்பெருமான் திருவருளால் இத்திருப்பதியில் வளர்ந்த கமுகு —திருவருள் கமுகு—ஈன்ற செவ்விய பழத்தின் நிறத்தை யல்லவா ஒத்துள்ளது இவளது உதடுகளின் நிறம்? இதனை நீங்களே ஆய்ந்து பார்க்கலாமே?'' என்கின்றாள். இவ்விடத்தில் 'திருவருள் கமுகு' என்றதற்கு இன்சுவை மிக்க ஈட்டின் சூக்தி : ''திருவருட் கமுகு என்று சில உண்டு; அதாவது நீரால் வளருகையன்றிக்கே பெரிய பிராட்டியாரும் சர்வேசுவரனும் கடாட்சிக்க, அத்தால் வளருவன சில'' என்பது, சுவைத்து மகிழத்தக்கது.

திருப்புலியூர் ஊர்வளத்தையும் அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் பெருமையையும் பேசுகின்றாள்.

புகழும்......திருப்புலியூர் வளமே (3)

சீர்வ ளம்கிளர் மூவுல
குண்டுமிழ் தேவபிரான்
பேர்வ ளம்கிளர்ந் தன்றிப்பேச்சிலள்
இன்றிப் புனையிழையே (4)

படஅரவு அணையன்தன் நாமம்
அல்லால் பரவாள் இவளே (8)

பரவாள் இவள் ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...
புரவார் கழனிகள் சூழ் திருப்
புலியூர்ப் புகழ்அன்றி மற்றே (9)

என்ற பாசுரத் தொடர்களில் இவற்றைக் காணலாம்.

இத்திருப்பதியின் இயற்கைச் சூழலைக் கூறுவாள்போல் ''அங்கு அஃறிணைப் பொருள்களும் கூட ஒன்றோடொன்று கலந்து பரிமாறி வாழாநிற்கும்'' என்கிறாள் (தோழி). மெல்லிய இலைத்தழைப்பையும் அழகினையும் உடைய வெற்றிலைக்

கொடி முதிர்ந்து இளகிப் பருத்த கமுக மரத்தைத் தழுவி நிற்கின்றது. ''(வெற்றிலை) தன் கணவனான கமுகிற்குத் தன் உடம்பை முதுறாட்டாகக் கொடுக்கும் போலே காணும்'' என்பது ஈட்டின் சூக்தி. இதற்குமேல் தென்றற் காற்று வாழைத் தோப்பில் வீசா நிற்கின்றது. 'இப்படிப்பட்ட வாய்ப்பு அமைந்த தலத்தில் இவளும் தானுகந்த பொருளை அணையப் பெற்றது வியப்பு அன்று; முறையே, என்று; குறிப்பிடுகின்றாள்.

மல்லலஞ் செல்வக் கண்ணன்
தாளடைந்தாள் இம்மடவரலே (7)
[ மடவரல்-தலைவி ]

இறுதியாக மேற்கூறிய காரணங்கட்கெல்லாம் முத்தாய்ப் பாக, இதற்கு வேறு விதமான முடிவும் கூற முடியாதவாறு, பிறிதொரு காரணம் கூறுகின்றாள்.

அன்றிமற் றோருபாய மென்? இவள்
அம்தண்து ழாய்க்கமழ்தல்
...............................................
நின்ற மாயப்பி ரான்திரு
உருளாமிவள் நேர்பட்டதே (10)
[ உபாயம்-காரணம், கமழ்தல்-மணம் வீசுதல் ]

''இவளது உடம்பில் அழகிய குளிர்ந்த திருத்துழாயின் மணம் வீசுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? என் உடம்பிலாவது உங்கள் உடம்பிலாவது திருத்துழாய் மணம் வீசுகின்றதோ? எம்பெருமான் திருமேனியில் அணைந்தாலல்லது இம் மணம் வீசுவதற்குக் காரணம் உண்டோ?'' என்கின்றாள். ''இராஜபுத்திரரை அணையாதாற்குக் கோயில் சாந்து நாறுவதற்கு விரகு உண்டோ?'' என்பது ஈடு. இதனால் திருப்புலியூரில்நின்ற மாயப்பிரானுடையதிருவருளுக்கே இவள் இலக்காயினாள் என்று கூறும் தோழியின் கருத்தில் தலைவியின் 'அநந்யார்ஹ சேஷத்துவம்' பளிச்சிடுகின்றதன்றோ?

தாய்ப் பாசுரங்கள் : இவை ஈசுவர பாரதந்திரியத்தையும் அவனே உபாயமாகின்றான் என்பதையும் தெரிவிக்கின்றன. 'உபாயத்தில் துணிவு ஆகிற பிரஜ்ஞாவஸ்தைக்குத் (ஆசா. ஹிரு.138) தாயார் என்று பெயர். திருமந்திரத்திலுள்ள 'நம:' பதத்தாலே இஃது அறியப் பெறுகின்றது. தாய்ப்பாசுரங்களை ஆழ்ந்து கற்றால் இக்கருத்துத் தட்டுப்படும். சிலவற்றை ஈண்டுக் காட்டுவேன்.

(1) திருவாய்மொழியில் 'மண்ணையிருந்து துழாவி'(4.4) என்ற திருப்பதிகத்தில்,

கோமள ஆன்கன்றைப் புல்கிக்
'கோவிந்தன் மேய்த்தன'! என்னும்
போம்இள நாகத்தின் பின்போய்
'அவன் கிடக் கையீ தென்னும்;
ஆமள வொன்றும் அறியேன்
அருவினை யாட்டியேன் பெற்ற
கோமள வல்லியை மாயோன்
மால்செய்து செய்கின்ற கூத்தே (5)

[ கோமளம்-இளமை, அழகு; கிடக்கை-படுக்கை; ஆம் அளவு–ஆகும் அளவு; மால்-மயக்கம் ]

என்பது ஐந்தாம் பாசுரம்.

கண்ணபிரான் கன்றுகளை மேய்த்தான் என்பதறிந்த பராங்குசநாயகி தெருவில் தெரிகின்ற பருவத்தால் இளையன வாய்ப் பெருத்திருக்கின்ற கன்றுகளைப் பிடித்து அணைத்துக் கொண்டு 'நம் கண்ணபிரான் மேய்த்த கன்றுகள் இவை' என்கின்றாள். கோவிந்தன் பசுக்களையும், கன்றுகளையும் மேய்த்த பெருமைக்கு முடிசூடினவன். பாம்பினைக் கண்டால் அஞ்சாமல் அதன் பின்னே ஓடி எம்பெருமானுடைய திருப்பள்ளி மெத்தை இது' என்கின்றாள். அவனோடு கூடித்தானும் படுக்கலாம் என்ற ஆசையோடே நாகத்தின் பின்னே நடந்தால் போலும்

எம்பெருமான் சம்பந்தப்பட்ட பொருள்களைக் கண்டு அப்பெருமானையே கண்டதாகக் கொண்டு களித்தலே பரம வைணத்துவமாகும். இதனால் தலைவியின் பாரதந்திரியம் வெளியாகின்றது. தாய்ப்பாசுரம் இதனை வெளிப்படுத்துகின்றது.

(2) திருவாய்மொழியில் 'உண்ணும் சோறு' (6.7) என்ற பதிகம் தாய்ப்பாசுரமாக நடைபெறுகின்றது. இதில்,

உண்ணும் சோறு பருகுநீர்
தின்னும்வெற் றிலையுமெல்லாம்,
கண்ணன் எம்பெருமான் என்றென்
றேகண்கள் நீர்மல்கி,
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்
கவனூர் வினவி
திண்ணம் என்இள மான்புகும்
ஊர்திருக் கோளூரே (1)

[என்று என்றே-பலகாலும் சொல்லி; இளமான்-என் மகள்; அவன்-எம்பெருமான்; ஊர்-இருப்பிடம்; திண்ணம்-உறுதி]

என்பது திருக்கோளூர்[19] பற்றிய திருவாய்மொழியின் முதல் பாசுரம். படுக்கையில் மகளைக் காணாத திருத்தாயார் தன் மகள் திருக்கோளூருக்குத்தான் சென்றிருக்க வேண்டும் என்று அறுதியிடுகின்றாள். ஆசா. ஹிரு. -இல் இருடிகளைவிட ஆழ்வார்க்கு நெடுவாசி அருளிச்செய்யிமிடத்து,

---

19. திருக்கோளூர்-ஆழ்வார் திருநகரியிலிருந்து கிழக்கே இரண்டு கல் தொலைவு. எந்தவித வசதியும் இல்லாத சிற்றூர். மதுரகவிகள் அவதரித்த தலம், இறைவன்-வைத்தமாநிதி; தாயார்- கோளூர்வல்லி நாச்சியார், சயனத்திருக்கோலம் (புயங்கசயனம்). கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

அவர்கட்குக் காயோடு என்னும் இவையே தாரா கதிகள்.
இவர்க்கு எல்லாம் கண்ணனிறே (60)

[ அவர்கட்கு-இருடிகட்கு; இவர்க்கு-ஆழ்வார்க்கு]

என்பவரும் சூத்திரத்தில் இருவருக்குமுள்ள வேறுபாடு தெரிவிக்கப் பெறுகின்றது. அவர்கட்குக் காய், கனி, கிழங்கு, இலைகள், காற்று, தண்ணீர் என்னும் இவைகளே தாரக போஷக போக்கியங்கள்[20] இவர்க்கு உண்ணும் சோறு, பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன். கண்ணனே தாரக போஷக போக்கியாதிகள்.

'சோறும் நீரும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்' என்றால் போதுமே; தனித்தனியாக அடைமொழிகள் தந்து கூறியதற்குக் காரணம்: வயிறு நிறைய உண்டவனுக்குப் பரமான்னம் கிடைத்தாலும் அஃது உண்ணும் சோறாகாது; கங்கைக் கரையிலே திரிபவனுக்குக் கிணற்று நீர் பருகு நீராகாது; அவ்வவற்றிற்கு விருப்பம் சில சமயங்களிலும் வேண்டாமை சில சமயங்களிலும் இருப்பது உலக இயல்பு. ஆதலால் பெரும்பசியனுக்குக் கிடைத்த சோறுதான் உண்ணும் சோறு; பெருவிடாயனுக்குக் கிடைத்த நீர்தான் பருகுநீர் என்று கொள்ள வேண்டும். பெரும் பசியனுக்குச் சோற்றிலும் விடாய்த்தவனுக்கு நீரிலும் எப்படிப்பட்ட ஆர்வமோ, அப்படிப்பட்ட ஆர்வம் ஆழ்வாருக்குப் பகவத் விஷயத்தில் இருந்தது. 'எல்லாம் கண்ணன்' என்ற தாய்ப்பாசுரத் தொடர் தலைவியின் பாரதந்திரியத்தையும், உபாயத்தையும் காட்டுகின்றது.

---

20. தாரகம்-தரிக்கச்செய்வது; நீர் முதலியன. போஷகம்; புஷ்டியைத் (பலத்தைத்) தருவது; சோறு முதலியன, போக்கியம்-இன்பத்தைத் தருவது: தின்னும் வெற்றிலை, முதலாயின.

(3) திருவரங்கம்,[21] பற்றிய திருவாய்மொழியிலுள்ள 'கங்குலும் பகலும்' (7. 2) என்ற திருப்பதிகம் தாய்ப் பாசுரமாக நடைபெறுகின்றது. திருவரங்கப்பெருமானிடம் தன் மகள் மிகவும் மோகித்திருப்பதைக் கண்ட திருத்தாயார் அரங்கனைப் பார்த்து வினவுவதாக அமைந்தது இத் திருவாய்மொழி.

> கங்குலும் பகலும் கண்துயில் அறியாள் ;
> கண்ணநீர் கைகளால் இறைக்கும் ;
> சங்குசக் கரங்கள் என்றுகை கூப்பும் ;
> தாமரைக் கண்என்றே தளரும்.
> எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட்டு ? என்னும்
> இருநிலம் கைதுழா இருக்கும்
> செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தாய் !
> இவள்திறத்து என்செய் கின்றாயே ? (1)

[ கங்குல்-இரவு; துயில்-உறக்கம்; கண்ணநீர்-கண்ணீர்; தளரும் - சோர்வுறும்; இருநிலம் - அகன்ற பூதலம் திறத்து - விஷயத்தில் ]

என்பது முதல் பாசுரம். "இரவும் பகலும் உறக்கம் கொள்ளாள். 'கண் துயில் கொள்ளாள்' என்னாது 'கண் துயில் அறியாள்' என்ற தன் கருத்தை நம்பிள்ளை காட்டியருள்வது: 'ஸம்ஸ்லேஷத்தில் (சேர்ந்திருக்கும்போது) அவன் உறங்க வொட்டான்; விச்லேஷத்தில் (பிரிவில்) விரக வியசனம் உறங்க வொட்டாது. ஆகையாலே இவளுக்கு இரண்டு படியாலும் உறக்கமில்லாமையாலே

21. திருவரங்கம்-கோயில் என்றும் வழங்குவர். இருப்பூர்தி நிலையம். பல்வேறுபட்ட வசதிகள் நிறைந்த தலம். திருச்சியிலிருந்து அடிக்கடி நகரப் பேருந்து வசதிகள் உண்டு. எம்பெருமான்; அரங்கநாதன், பெரிய பெருமாள். (மூலவர்) உற்சவர் அழகிய மணவாளன்; தாயார் ; சீரங்கநாச்சியார் (தனிக்கோயில்). கிடந்த திருக்கோலம். தெற்கு நோக்கிய திருமுக மண்டலம்.

அறியாள் என்கிறது'' என்பதாக. எம்பெருமானின் ஒவ்வொரு சேஷ்டிதங்களை நினைந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருக விடுகின்றாள். 'சங்கும் சக்கரமும் சிரித்த முகமும் தொங்கும் பதக்கங்களுமாய் நம் பெருமாள் சேவை சாதிக்கின்ற அழகு காண்மின் காண்மின்! காண வாரீர்' என்று சொல்லி அதிக நினைவினால் சங்கு சக்கரங்களை நோக்கிக் கை கூப்புகின்றாள். 'தாமரைக் கண்களால் நோக்காய்!' (9.2:1) என்று சொல்ல வேண்டுமென்று நினைத்துத் தொடங்கினாள்; தாமரைக் கண் என்று சொன்ன அளவில் விகாரப்பட்டு மேலே எழமாட்டாமல் தளர்கின்றாள். 'உன்னை விட்டு எப்படித் தரிக்க முடியும்?' என்று வயிறு பிடிக்கின்றாள். இப்படிச் சொன்னவுடன் அவன் வரக் காணாமையாலே அகன்ற பூதலத்தைக் கைகளால் துழாவுகின்றாள். இவ்வாறு தான் கூறி 'இவள் விஷயத்தில் ஏது செய்வதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கின்றாய்?' என்று பெரிய பெருமாளைத் தாய் வினவுவதில் ஆழ்வாரின் ஈசுவர பாரதந்திரியமும் உபாயத்தில் துணிவும் பளிச்சிடுவதைக் காணலாம்.

(4) திருமங்கையாழ்வாரின் திருவிடஎந்தை பற்றிய திருமொழியொன்று (2.7) தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்குவதாக நடைபெறுகின்றது. இதில்,

> அலங்கெழு தடக்கை ஆயன்வாய் ஆம்பற்கு
> அழியுமால் என்உள்ளம் என்னும்;
> புலம்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்
> போதுமோ நீர்மலைக்கு என்னும்
> குலங்கெழு கொல்லிக் கோமள வல்லி
> கொடியிடை நெடுமழைக் கண்ணி
> இலங்கு எழில் தோளிக்கு என் நினைந்து இருந்தாய்?
> இடஎந்தை எந்தை பிரானே (8)

என்பது எட்டாம் பாசுரம். காதல் மிகுதலால் பரகால நாயகி வாய் வெருவுதல்களைத் திருத்தாயார் பேசுகின்றாள். ''கண்ணன் திருப்பவளத்தில் வைத்து ஊதுகின்ற புல்லாங்

குழலினோசை என் நெஞ்சைக் கொள்ளை கொள்ளுகின்றது என்கின்றாள்; திருப்புட்குழி[22] என்னும் திருப்பதியின் வளத்தை எடுத்துப் பாடுகின்றாள்; திருநீர்மலைக்குப்[23] போக வேண்டும் என்று பயணம் எடுக்கின்றாள்; தன்னுடைய விருப்பம் ஒன்றும் நிறைவேறாமையால் கண்ணீரும் கம்பலையுமாகச் சோர்வுறுகின்றாள். 'இப்படிப்பட்ட, என் மகள் திறத்தில் நீ செய்ய நினைத்திருப்பது நிக்ரகமோ? அநுக்ரகமோ?' என்கின்றாள். திருத்தாயார் வாக்கில் தன் மகளின் ஈசுவர பாரதந்திரியமும் உபாயத்தில் துணிவும் தொனிக்கின்றதைக் காண முடிகின்றது.

---

22. திருபுட்குழி— காஞ்சியருகில் உள்ள ஒரு திவ்விய தேசம். தென்மேற்குத் திசையில் சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ளது. இராமன் பெரிய உடையாரின் (சடாயு) திருமேனியை ஒரு குழியிலிட்டுத் தகனம் செய்த இடம்.

23. திருநீர்மலை - சென்னை - பல்லாவரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் நான்கு கி.மீ தொலைவிலுள்ள ஒரு திவ்வியதேசம். சென்னையிலிருந்து பல்லாவரம் வரையில் மின்-இருப்பூர்தி. பேருந்து வசதிகள் உள்ளன. பல்லாவரத்தில் பேருந்து வசதிகள் உண்டு. சிறியமலை. மலையடிவாரத்தில் ஒரு கோயில் உண்டு. இறைவன்: திருநீர்வண்ணன், நீலமுகில் வண்ணன்; தாயார்: அணிமாமலர் மங்கைத் தாயார். நின்ற திருக்கோலம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

மலைமேல் இரண்டு சந்நிதிகள் உள்ளன. (1) அரங்க நாதன் அரங்கநாயகி. சயனத் திருக்கோலம், தெற்கு நோக்கிய திருமுக மண்டலம். (2) சக்கரவர்த்தித் திருமகன், அழகிய சிங்கர் உலகளந்த பெருமாள் சுற்றுப்பிராகாரத்தில் உள்ளனர், கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

மலை போகும் வழியில் (1) நின்றான்-நீர்வண்ணன் (அடிவாரம்); (2) இருந்தான்-சாந்த நரசிம்மன் (மலைமேல்) (3) கிடந்தான்-அரங்கநாதன் (மலை மேல்); (4) நடந்தான் திரிவிக்கிரமன் (மலை மேல்) என்ற நான்கு நிலைகளில் எம்பெருமான்கள் எழுந்தருளியிருத்தல்.

மகள் பாசுரங்கள்: எல்லோருக்கும் சேஷியாய், சரண்யனாய் அறுதியிடப் பெற்று சித்தோபாயமாய் இருக்கும் எம்பெருமானைத் தாமதித்து அநுபவிக்கக் காரணம் இல்லாமையால் அவனை உடனே பெறவேண்டும் என்ற பதற்றத்தையுடையவள் மகள். இந்தப் பதற்ற நிலையை விளக்குவன மகள் பாசுரங்கள். மகள் பாசுரங்களை ஆழ்ந்து அநுசந்தித்தால் இந்தப் பதற்றநிலை தட்டுப்படும். சிலவற்றைக் காட்டுவேன்.

(1) திருக்குறுங்குடி பற்றிய 'எங்ஙனேயோ' (5.3) திருவாய்மொழியில்,

என்னெஞ்சினால் நோக்கிக் காணீர்
 என்னை முனியாதே
தென்னன் சோலைத் திருக்குறுங்குடி
 நம்பியைநான் கண்டபின்
மின்னு நூலும், குண்டலமும்
 மார்பில் திருமறுவும்
மின்னு பூணும் நான்கு தோளும்
 வந்துஎங்கும் நிற்குமே (2)

[நெஞ்சால்-நெஞ்சைக் கொண்டு; நோக்கி-அநுபவித்து; முனியாதே-சீறாமல்; மறு-ஸ்ரீவத்சம்]

என்பது இரண்டாம் பாசுரம். இஃது உருவெளித்தோற்றத்தில் தலைவனைக் கண்ட தலைவி தாயாரை மறுத்துரைப்பதாக அமைந்த பாசுரம் இதில், "நங்காய்! திருக்குறுங்குடி நம்பியை நீ மாத்திரமா கண்டாய்? நாங்களும் பார்த்தோமே, நாங்களும் சேவித்திருக்கின்றோம். ஆயின, உனக்கு இப்படிப்பட்ட முறைகேடு ஆகாது" என்று தாயார் சொல்ல, அதற்குத் தலைமகள், "என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்" என்கின்றாள். "என் நெஞ்சினை இரவலாக வாங்கி வைத்துக் கொண்டு நீங்கள் நம்பியை சேவித்தீர்களாகில் இவ்வாறு என்னைப் பொடியமாட்டீர்கள்" என்கின்றாள்.

"நீ கண்டது எவ்வாறு?" என்று தாய்மார் கேட்க, "நம்பியை நான் கண்டபோது மேகத்தில் மின்னியது போலிருந்தது அவனது யஞ்ஞோபவீதம்; பரந்த மின் ஓரிடத்தில் சுழித்தாற் போலிருந்தது அவனது மகரகுண்டலம்; வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கும் படியாக இருந்தது அவனது ஸ்ரீவத்சம்; நாய்ச்சியாரோடு கலக்கும்போதும். கழற்ற வேண்டாதபடி இருந்தன திருவாபரணங்கள்; ஆபரணங்களுக்கு ஆபரணமாகக் கற்பகத்தரு பணைத்தார்போலே இருந்தன அவனது நான்கு திருத்தோள்கள். "உங்கள் அறிவுரைப்படி செய்யவேண்டும்" என்று நான் முயற்சி செய்தாலும், அவை யாவும் என்னைச் சுற்றிச் சுற்றி வளைய வருகின்றனவே! இதுவே நான் கண்ட காட்சிக்கு வேறுபாடு" என்கின்றாள். எல்லாப் பாசுரங்களும் உள்ளத்தை உருக்கும் அநுபவங்கள். தலைவியின் வாக்கு அவளது பதற்ற நிலையைப் பாங்குடன் தெரிவிக்கின்றது.

(2) தென் திருப்பேரைபற்றி 'வெள்ளைச்சுரிசங்கொடு (7:3) என்றுதொடங்கும் திருவாய்மொழியில்,

கண்டதுவே கொண்டெல் லாருக் கூடிக்
　　கார்க்கடல் வண்ணனோ டென்திறத்துக்
கொண்டுஅலர் தூற்றிற் றதுமுதலாக்
　　கொண்ட என் காதல் உரைக்கில்தோழி;
மண்திணி ஞாலமும் ஏழ் கடலும்
　　நீள்விசும்பும் கழியப் பெரிதால்
தென்திரை சூழ்ந்தவன் வீற்றிருந்த
　　தென்திருப் பேரெயில் சேர்வன் சென்றே (8)

[ கண்டதுவே-வெளியில் காணக் கூடிய; கார் கடல்-கருங் கடல்; வண்ணன்-நிறத்தன்; என்திறம்-என்விஷயம் அலர்-பழி; கொண்ட-இடங்கொண்ட; விசும்பு ஆகாயம்; கழிய-ஒப்ப; திரை-அலை ]

என்பது எட்டாம் பாசுரம். தென்திருப்பேரையை[24] அடைய வேண்டுமென்ற தன் துணிவைப் பராங்குச நாயகி சொன்னதும் தோழிமாரும் தாயரும் அதனைத் தடுத்து நிற்கப் பார்க்கின்றதாகச் செல்லுகிறது இத்திருவாய்மொழி. ''ஊரார் பழி சொல்லே எருவாக நின்று என்னிடம் வளர்ந்து செல்லுகின்ற காதல் எல்லா உலகங்களையும் விழுங்கிச் செல்லா நின்றது; ஆகவே அவன் இருக்கின்ற தென்திருப்பேரையில் சென்று சேர்வேன்'' என்கிறாள் தலைவி பராங்குச நாயகி.

(3) திருவாய்மொழியில் இன்னுயிர்ச் சேவலும் (9.5) என்ற திருப்பதிகம் தலைவனைக் காண ஆசையுள்ள தலைவி அவனை நினைவூட்டும் பொருள்களால் தளர்ந்தமை கூறுவதாக அமைந்துள்ளது. இதில்,

> இன்னுயிர்ச் சேவலும் நீரும்
> கூவிக் கொண்டு இங்கெத்தனை
>
> என்னுயிர் நோவ
> மிழற்றேன்மின் குயிற்பேடைகாள்!
>
> என்னுயிர்க் கண்ண பிரானை
> நீர்வரக் கூவு கிலீர்
>
> என்னுயிர் கூவிக் கொடுப்பார்க்கும்
> இத்தனை வேண்டுமோ? (1)

24. தென்திருப்பேரை: நவதிருப்பதிகளில் ஒன்றாகிய இது ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கே சுமார் ஐந்து கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து சாலையருகில் உள்ளது. இங்குத் தங்குவதற்குச் சத்திரம், உணவு விடுதிகள் உண்டு. இங்கிருந்து பொருநையாற்றைக் கடந்து (ஒருகல் தொலைவு) சென்றால் இரட்டைத் திருப்பதியை அடையலாம். இறைவன்: மகர நெடுங்குழைக்காதன்; நிகரில் முகில் வண்ணன்; தாயார்: குழைக்காதுவல்லி நாச்சியார். இருந்த திருக்கோலம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

[ இன் உயிர்-இனிமையான உயிர்; சேவல்-ஆண் பறவை; நீரும்-நீங்களும்; கூவிக் காண்டு-(கலவிக்காகக்) சத்தமிட்டுக் கொண்டு; எத்தனை-மிகவும்; நோவ-நோவு படும்படி; மிழற்றேன்மின்-ஒலியைச் செய்ய வேண்டா; வர-வரும்படி; கூவுகிலீர்-அழைக்கமாட்டீர்; கூவி-வாங்கி; இத்தனை-இவ்வளவு பாரிப்பு ]

என்பது முதல் பாசுரம். சோலைக்குச் சென்ற ஆழ்வார் நாயகியை (தலைவியை) அங்குள்ள குயில், மயில் முதலானவை தலைவனுடைய பேச்சையும் வடிவையும் நினைப்பூட்டி நலிகின்றன. தலைவி இவை தாமாக நலிகின்றன, அல்ல; நம்மை முடிக்க வேண்டுமென்று பார்த்த எம்பெருமானாலே ஏவப்பெற்று நலிகின்றன' என்றெண்ணி, அப்பறவைகளை நோக்கி, 'உங்களுக்கு என்னை நலிய நினைவாகில் இவ்வளவு பாரிப்பு வேண்டுமோ? என் உயிரை நானே கொடுக்கச் சித்தமாக இருக்கின்றேனே?' என்று சொல்லியும் அவனுடைய திருக்குணங்களை ஒருவாறு நினைத்துத் தரித்தும் நடைபெறுகின்றது இத்திருவாய்மொழி.

இந்தப் பாசுரம் குயிற்பேடைகளை நோக்கிப் பேசுவது; 'பேடைகளே உங்களுக்கு நற்சீவனான சேவலும், சேவலுக்கு நற்சீவனான நீங்களும் கூடியிருந்து நலிகிறது போதாதா? பேச்சாலும் நலிய வேண்டுமோ'' என்கின்றாள். காதல் நோயால் தாக்குண்டவர்கட்குக் கூடியிருப்பாரைச் காண்பதையும் தாங்க முடியாது; ஒருவருக்கொருவர் அவர்கள் பேசுவதையும் தாங்க முடியாது என்பது அநுபவம், 'என்னுயிர் நோவ' என்பதில் ஒரு சிறப்புப் பொருள் தொனிக்கும். ''உங்கள் கூக்குரலைக் கேட்டால் அவனுடைய உயிர் தளிர்க்கும், அவனருகே போய்க் கூவுங்கள். என்னருகே கூவினால் என் உயிர் தளிர்க்காது, சிதிலமாகும்; ஆகவே இங்குக் கூவாது ஒழிவீர்களாக'' என்பது.

இங்ஙனம் கூறக் கேட்ட குயிற்பேடைகள் ''எங்களுடைய சாதிக்குக் கூவுவதுதானே இயல்பு ; அதனைத் தவிர்த்திருக்க முடியுமோ?'' என்று கேட்டதாக நினைத்து, ''அப்படி

யானால் என்னுயிரான கண்ணபிரான் இங்கு வந்து சேருமாறு கூவுலாகாதோ?'' என்கின்றாள். தலைவியின் பேச்சு அவளது பதற்ற நிலையைக் காட்டுவது தெரிகின்றதல்லவா?

அடுத்த பாசுரங்களில் அன்றிற் பேடைகள் (2, 3), கோழிகள் (4), பூவைகள் (5), கிளிப்பைதல்கள் (6), மேகக் குழாங்கள் (7), வண்டு, தும்பிகள் (8,9), நாரைத்திரள்கள் (10) இவற்றை நோக்கிப் பேசுகின்றாள். இப்பாசுரங்கள் ஆழ்ந்து ஓதி அநுபவிக்கும்போது தலைவியின் துடிப்பைப்-பதற்றத்தைத்-தெளிவாக உணர முடிகின்றது.

(4) திருமங்கையாழ்வாரின் 'தவள இளம்பிறை' (9.5) என்று தொடங்கும் திருக்குறுங்குடி[25] பற்றிய திருமொழியில்,

திண்திமில் ஏற்றின் மணியும், ஆயர்
தீம்குழல் ஓசையும், தென்றலோடு
கொண்டதுஓர் மாலையும், அந்தி ஈன்ற
கோல இளம் பிறையோடு கூடி
பண்டை அல்ல இவைநமக்கு
பாவியேன் ஆவியை வாட்டம் செயயும்;
கொண்டல் மணிநிற வண்ணர் மன்னு
குறுங்குடிக் கேஎன்னை உய்த்திடுமின் (5)

[திமில்-முசுப்பு; ஆயன்-இடையன். கோலம்-அழகிய: ஆவி-உயிர்; கொண்டல்-மேகம்; மன்னு-பொருந்தி வாழப் பெற்ற]

---

25. திருக்குறுங்குடி: சேரன்மாதேவி இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவிலுள்ளது. வானமாமலையிலிருந்து (நாங்குனேரி) சுமார் 12 கி. மீ. தொலைவிலுள்ளது. பேருந்து வசதிகள் உண்டு. எம்பெருமான்; வைணவ நம்பி, குறுங்குடி நம்பி, மலைமேல் நம்பி, நின்ற நம்பி, இருந்த நம்பி, கிடந்த நம்பி, திருப்பாற்கடல் நம்பி என்பவர்கள். தாயார்: குறுங்குடிவல்லி நாச்சியார், நின்ற திருக்கோலம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

என்பது ஐந்தாம் பாசுரம். இத்திருமொழியின் பாசுரங்கள் யாவும் "குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்" என்றே முடிகின்றன. 'உய்த்திடுமின்' என்ற வினைமுற்றிற்கேற்ப பாசுரந்தோறும் 'அன்னைமீர்' என்றோ 'தோழிமீர்' என்றோ விளி வருவித்துக் கொண்டு பொருள் காணல் வேண்டும்.

காலையின் மணியோசை தென்றல் காற்று, மாலைப் பொழுது, இளம்பிறை ஆகிய இவை பிரிவாற்றாமையால் வருந்தும் காதலர்களை மேலும் வருந்தச் செய்யும். எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தற் போன்ற நிலையாக வடிவெடுக்கும். "இவை பலகாலும் நம்மை வருத்தியிருந்தாலும் இப்போது வருத்துவனபோல் இதற்குமுன் ஒரு நாளும், வருத்தவில்லை; இவை ஒவ்வொன்றும் தனியாக நின்று கொலை செய்யப் போதுமானவை; கூட்டாக வந்து இன்று நலிவதை அந்தோ! பொறுக்கமுடியவில்லை. சாதாரணப் பொருள்களை ஆசைப்படாமல் 'உயர்வற உயர் நலமுடையவனாய், அயர்வுறும் அமரர்கள் அதிபதியானவனை' ஆசைப்படும்படியான பாவத்தைப் பண்ணினேன். என்னுடைய ஆவி இனி தரிக்க விரகில்லை; நான் வேண்டும் என நீங்கள் நினைத்தால், திருக்குறுங்குடியில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள்; அங்கே எழுந்தருளியிருக்கின்ற கொண்டல் மணிவண்ணரைக் கண்டவுடன் என்வாட்டமெல்லாம் தீரும்; மேகத்தையும் மணியையும் கண்ட பின்னரும் வாட்டம் நிற்குமோ? ஆகவே, பாதகப் பொருள்களின் வசத்திலே அகப்பட்டு நான் நலிவுபடாமல் இவையெல்லாம் அநுகூலங்களாகப்பெறும் தேசத்தில் என்னைக் கொண்டு போய் விட்டிடுங்கள்" என்கின்றாள்.

இவ்விடத்தில் ஆண்டாள் தன்னைக் கண்ணன் இருக்கும் இடங்களில் உய்த்திடுமாறு நுவலும் நாச்சியார் திருமொழி (12) அநுசந்திக்கத் தக்கது. ஆண்டாள் தன்னை,

மதுரைப் புறத்து
என்னை உய்த்திடுமின் (1)

ஆய்ப்பா டிக்கே
என்னை உய்த்திடுமின் (2)

நந்தகோ பாலன்
கடைத்த லைக்கே
... ... ... ... ... ...
என்னை உய்த்திடுமின் (3)

யமுனைக் கரைக்கு
என்னை உய்த்திடுமின் (4)

பொய்கைக் கரைக்கு
என்னை உய்த்திடுமின் (5)

பத்தவி லோசனத்து
(என்னை) உய்த்திடுமின் (6)

பாண்டி வனத்து
என்னை உய்த்திடுமின் (7)

கோவர்த் தனத்து
என்னை உய்த்திடுமின் (8)

துவரா பதிக்கு
என்னை உய்த்திடுமின் (9)

என்று கூறுவதைக் கண்டு மகிழலாம். இவற்றிலெல்லாம் ''எம் பெருமானைக் கிட்டியல்லது தரியேன்'' என்ற பதற்றம் தொனிப்பதைக் காணலாம். 'சித்தோபாயம்' நிழலிடுவதைக் கண்டு மகிழலாம்.

இந்த நாயக - நாயகி உறவைக் குலசேகரப் பெருமாள் திருமொழியின் (5:2) திருபாசுரத்தில் காணலாம்.

கண்டார் இகழ்வனவே
காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லால்
அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிவுடைசூழ்
வித்துவக்கோட் டம்மா!
கொண்டாளா யாகிலும்
உன்குரைகழலே கூறுவனே (2)

[கண்டார் - பார்ப்பவர்கள்; இகழ்வன - இகழத்தக்க செயல்கள்; கொண்டானை-கணவனை; குலமகள்-கற்புடைய பெண்; ஆளாய் ஆகிலும் - ஆட்கொள்ள விடினும்]

என்பது பாசுரம். இதில் ஆழ்வார் கணவன் நிலையில் எம்பெருமானையும், மனைவி நிலையில் தம்மையும் வைத்துக் கூறியுள்ளார். இதனால் பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்குமுள்ள சம்பந்தம் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவுபோல் தோன்றுகின்றது; அதாவது, பரமான்மாவின் தலைமையும் சீவான்மாவின் அடிமையும், சீவான்மா பரமான்மாவுக்கே உரியதாயிருத்தலும், சீவான்மா பரமான்மாவின் சேர்க்கையால் இன்புறுதலும், பிரிவினால் துயருருதலும், பரமான்மாவையே சீவான்மா கரணங்களெல்லாவற்றாலும் அநுபவித்து ஆனந்தப்படுதலும் முதலாயினவற்றைக் கண்டு மகிழலாம்.

தொக்கிலங்கி யாரெல்லாம்
பரந்தோடி தொடுகடலே

புக்கன்றிப் புறம்நிக்க
மாட்டாத; மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்!
வித்துவக்கோட் டம்மா! உன்
புக்குஇலங்கு சீரல்லால்
புக்கிலன்காண், புண்ணியனே (8)

[ தொக்கு இலங்கு - நீரோட்டம் திரண்டு விளங்குகின்ற பரந்து - பரவி; தொடுகடல் - ஆழ்ந்த கடல்; புறம்- பிறிதோரிடம்; சீர் - கல்யாண குணங்கள். ]

என்பது வித்துவக்கோட்டம்மான் பதிகத்தில் எட்டாம் பாசுரம். கடல் நிலையில் எம்பெருமானையும் நதியின் நிலையில் தம்மையும் வைத்துக் கூறியதனால் பரமான்மாவின் பெருமையும், சீவான்மாவின் சிறுமையும், முடிவில் சீவான்மா பரமான்மாவை அடைதலும் புலனாவதால் நாயகி நாயக உறவு தொனிப்பதாகக் கூறுவர் பிரதிவாதி பயங்கரம்.[25]

பாரதியாரின் 'கண்ணன் பாட்டில்' 'கண்ணன் என் காதலன்' என்ற தலைப்பில் காணப்பெறும் ஐந்து பாடல்களிலும், 'கண்ணன்-என்காந்தன்' என்ற பாடலிலும் பாரதியார் தம்மை நாயகி நிலையில் வைத்துக் கொண்டு கண்ணன்பால் ஈடுபட்டுக் களிப்பதை ஈண்டு நினைவு கூர்ந்து மகிழலாம்.

காதல் சுவையின் தொடர்பு சிறிது மின்றியே பக்திச் சுவையின் அடிப்படையாகவே பாசுரங்கள் அருளிச் செய்தல் கூடும். அங்ஙனமிருக்க காதல் சுவையையும் கலந்து பாசுரங்கள்

25. பெரு திரு. திவ்வியார்த்த தீபிகை காண்க.

அருளிச் செய்யப் பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? உடல் நலத்திற்குக் காரணமான வேப்பிலை உருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கட்கு வெல்லத்தைச் சேர்த்து உண்பிப்பது போலவும், கொயினா மாத்திரைகட்குச் சருக்கரைப்பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பது போலவும் சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலை நாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் பணிப்பர். இது கடையாய காமத்தினை உடையவர்கட்குக் காட்டப்பெறும் உக்தி முறையாக இறையனார்களவியலிலும்[26] கூறப் பெற்றுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கி உணர்தல் தகும். ஆழ்வார்களின் முறுகிய பக்தி நிலையை உணர்த்துவதற்கேற்ற ஓர் இலக்கிய மரபே இஃது என்று கொள்ளினும் இழுக்கில்லை என்று கொள்வதும் ஒரு சிறப்பாகும்.

26. இறை. கள- நூற்பா 2இன் உரை காண்க.

# 6. ஞாதா-ஞேயன் உறவு

திருமந்திரத்தின் முதற் பதமாகிய 'ஓம்' என்பதிலுள்ள மூன்று எழுத்துகளில் (அ+உ+ம) உள்ள மகாரத்தினால் இந்த உறவு முறை தெரிவிக்கப்பெறுகின்றது. மகாரம் இருபத்தைந்தாம் எழுத்தாய்,[1] ஞானவாசியுமாக இருப்பதால் ஆன்மாவைச் சொன்னபடியாகும்.

> "மகாரம் இருபங்தைந்தாம் அட்சரமாய் ஞானவாசியு
> மாயிருக்கையாலே, ஆத்மாவைச் சொல்லுகிறது" (66)

என்பது முமுட்சுப்படி. இதனால் ஞாதா-ஞேயன் உறவு (அறிவன்-அறியப்படும் பொருள் உறவு) சொல்லப்படுவதாக அறியக்கிடக்கின்றது.

இவ்விடத்தில் ஆன்மாவைப்பற்றிச் சிறிது அறிந்து கொள்ள வேண்டும். முற்றும் உப்புச் சுவையே பொருந்திய உப்புக் கட்டியைப் போன்று, ஆன்மப்பொருள் முற்றும்

---

1. இது பிறிதோரிடத்தில் விளக்கப் பெற்றுள்ளது. இந்நூல்-கட்டுரை-7 காண்க.

ஞானமாயுள்ளது என்று சமயச் சான்றோர் கூறுவர். ஆன்மா விற்கு சேஷத்துவம், ஞானத்துவம், ஞாத்ருத்வம் (அறிவுடைய வனாய் இருக்கை) ஆகிய மூன்று தன்மைகள் உண்டு. ஈண்டு ஆன்மா அறிவுடையவன் (ஞாதா) என்பதும், அதனால் அந்த ஆன்மா ஞானமற்ற (அசேதநமான) உடலைக் காட்டிலும் வேறுபட்டவன் என்பதும் சொல்லப்பெறுகின்றன.

சீவான்மாவிற்கு இந்த உலகிலும் சரீரம் உண்டு. பரம பதத்திலும் சரீரம் உண்டு. ஆனால் லீலா விபூதியில் (இந்த உலகில்) உள்ள இச்சரீரம் ஐம்பெரும்பூதங்களால் ஆக்கப் பெற்றுள்ளது. நித்திய விபூதியாகிய பரமபதத்தில் உள்ள சரீரம் சுத்த சத்துவத்தினால் ஆக்கப்பெற்றுள்ளது. இதனை முதலில் மனத்தில் இருத்துதல் வேண்டும். ஞானம் என்பது தானே தோன்றும் பொருள். சுத்த சத்துவமும் தானே தோன்றும் பொருள். இச்சுத்த தத்துவம் தானே தோன்றும் பொருளாயிருத்தலின் ஞானமாகவே இருக்கிறது என்பதை அறிகின்றோம். ஆன்மா ஞானமாகவே உள்ளது எனச் செப்பின் அவ்வான்மாவை இவ்வுலகில் பஞ்ச பூதங்களாலாகிய சரீரத்திற்கு வேறுபட்டது எனக் கூறலாமேயன்றி பரமபதத்தில் ஞானமாகவே இருக்கும் சுத்த சத்துவத்தினாலாகிய சரீரத் திற்கு வேறுபட்டது என இயம்ப முடியாது. ஆதலின் அப்பதத்திலுள்ள சுத்த சத்துவத்தினாலாகிய சரீரத்தினும் ஆன்மா வேறுபட்டவன் என்பதைக் காட்டுவதற்கே ஆன்மா ஞானமுடையவனாக இருக்கின்றான் எனச் சொல்லப்பட்டது. சுத்த சத்துவம் ஞானமாய் உள்ளதேயன்றி ஞானமுடைய தாய் இல்லை.

இந்த உடல் ஆன்மா அன்று. ஆன்மாவின் வேறுபட்டது என்பதைப் பலகாரணங்களைக் காட்டி 'தத்துவ சேகரம்' என்னும் நூலில் விரிவாக விளக்கியுள்ளார் பிள்ளை உலக ஆசிரியர். இந்த உலகில் 'நான் தேவன்' 'நான் மனிதன்' 'நான் பருத்தவன்', 'நான் இளைத்தவன்' என உடலை 'நான்' எனக் கூறும் வழக்காறுகள் உண்டு. ஆனால் 'நான்'

என்பதற்குப் பொருள் 'ஆன்மா' என்றும், அவ்வான்மா உடலினின்றும் வேறுபட்டது என்றும் கூறுவதை விளக்க வேண்டும்.

1. பிற நாட்டான் ஒருவன் பத்து ஆண்டுகட்கு முன்னர் நம் நாட்டிற்கு வந்தபோது திருவரங்கத்திலுள்ள அரங்க விமானத்தைக் காண்கின்றான். அந்த மனிதனே இன்று இங்கு வந்து முன்பு தான் கண்ட அரங்க விமானத்தை நோக்கி, "இது யான் முன்னர் பார்த்த ஒன்றே; இது முன்னிருந்தபடியே இன்றும் உள்ளது" என அறிகின்றான். உடலோ கணத்திற்குக் கணம் மாறுபடும் பொருளாய் உள்ளது எனச் சாத்திரங்கள் சாற்றுகின்றன. இதனை நாம் அநுபவத்தாலும் இன்று மருத்துவ முறையினாலும் அறிகின்றோம். இம்முறையில் பத்து ஆண்டுகட்கு முன்பு இருந்த உடலே இன்று உள்ளது என்று சொல்ல முடியுமா? அங்ஙனமாயின், 'இது நாம் பத்து ஆண்டுகட்கு முன் பார்த்த பொருள்' என அறிதற்கு அன்றும் இன்றும் மாறுபடாது ஒரே நிலையில் இருக்கும் பொருள் ஒன்று இருந்தே தீரவேண்டுமன்றோ? ஆதலின் இந்த அறிவு உடலின் வேறுபட்ட அறிவுடைய ஆன்மாவிற்கே அமையும் என்பதும், அந்த ஆன்மா உடலைக் காட்டிலும் வேறுபட்டது என்பதும் தெரிகின்றன அல்லவா?

2. இன்னும், நேற்றுக் கண் பார்த்த ஒன்றையே இன்று கை தொடுகின்றது. இவ்வாறு ஒரு கரணத்தால் பார்த்தல் மற்றொரு கரணத்தால் தொடுதல் என்பது அறிவுள்ளதும் என்றும் உள்ளதுமான ஒரே பொருளினால் நிகழுமேயன்றி அறிவற்றதும் அப்போதைக்கப்போது மாறுந்தன்மையுடையதுமான சில பொருள்களினால் நிகழாதென்பது அநுபவசித்தம், ஆதலின், அறிவற்ற சடப் பொருளாகிய உடலினால் இவை நடைபெறாதென்றும், இவற்றை நிகழ்த்துவதற்கு உடலைக் காட்டிலும் வேறுபட்ட ஒரு பொருள் இருத்தல் வேண்டும் என்றும், அஃதே ஆன்மா என்றும் அறிகின்றோம்.

இனி, நாம் எடுத்துக் கொண்ட உறவு பற்றிச்

பெயரும் கருங்கடலே
நோக்கும் ஆறு;ஒண்பூ
உயரும் கதிரவனே
நோக்கும்—உயிரும்
தருமனையே நோக்கும்;
ஒண்தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும்
உணர்வு (67)

[பெயரும்-பொங்கிக் கிளர்கின்ற; ஒண்பூ-அழகிய தாமரை; உயரும்-உன்னதமான; கதிரவன்-சூரியன்; உயிர்-ஆன்மா; தருமன்-எமன்; ஒண்தாமரையாள்-பெரிய பிராட்டியார்; கேள்வன்-கணவன்; உணர்வு-ஞானம்]

என்பது பொய்கையாழ்வாரின் திருவாக்கு. ஞானம் என்பது பலவிதம். பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு துறையிலும் (பொருளியல், அரசியல், மருத்துவம், பொறியியல், அறிவியல் போன்றவை) படித்துப் பட்டம் பெற்ற ஒவ்வொருவனும் தன்னை ஞானி என நினைத்துக் கொள்ளுகின்றான். ஆனால் உண்மையான ஞானம் என்பது எது? எம்பெருமான் என்ற பரம்பொருளை அறிகின்ற அறிவு ஒன்றுதான் ஞானமாகும் என்று சாத்திரங்கள் கூறும் விடைதான் இப்பாசுரத்தில் 'ஒண்தாமரையாள் கேள்வன், ஒருவனையே நோக்கும் உணர்வு' என்ற பகுதியில் கூறப்பெற்றுள்ளது; மற்றவை யாவும் எடுத்துக்காட்டுகளாக அருளிச் செய்யப் பெற்றவை.

ஆறுகள் மாக்கடலை நோக்கி ஓடுவதும், தாமரைப்பூ பகலவனை நோக்கி மலர்வதும், உயிர்கள் எமதர்மனையே நோக்கிக் கிட்டுவதும் எப்படி நியதமாக நிகழ்கின்றனவோ, அப்படியே ஞானம் என்பதும் திருமாலைப்பற்றியல்லது இதர

விஷயங்களைப் பற்றியுண்டாகும் அறிவு அறிவல்ல; அவை அறிவின்மைக்குச் சமமானவையே. இவ்விடத்தில், குலசேகரப் பெருமாளின்,

தொக்கிலங்கி யாறெல்லாம்
    பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க
    மாட்டாத; மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்!
    வித்துவக்கோட் டம்மா!
புக்கிலங்கு சீரல்லால்உன்
    புக்கிலன்காண் புண்ணியனே; (5:8)

என்ற திருவாக்கு ஒருபுடை ஒப்பு நோக்கத் தக்கது.

இவற்றால் மகாரத்தால் சொல்லப்படும் சீவான்மா அகாரத்தின் பொருளாய் உள்ள பரமான்மாவின் சொரூப, ரூப, குண விபூதிகளை அறிகின்றவனாகின்றான். ஆதலால் சீவான்மா ஞாதா வாகின்றான். சீவான்மாவால் தெரிந்து கொள்ளப்பட்ட படியால் பரமான்மா ஞேயன்-அறியப்படுபவன்- ஆகின்றான். பிள்ளை உலக ஆசிரியர் அருளிச்செய்த முமுட்சுப்படியில் திருமந்திரப் பிரகரணத்தில்,

" இத்தால்—'தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு'
என்றதாயிற்று " (முமுட்சு-73)

என்ற சூத்திரத்திற்கு மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வியாக்கியானத்தை நோக்குங்கால் இப்பாசுரத்தில் உணர்வு என்பது ஞானமயனான ஆன்மா என்று பொருள் படுவதாகக் கொண்டே விளக்குபவனான ஆன்மா திருமாலுக்கு அநந்யார்ஹ சேஷபூதன் என்பதை உணர்த்துவதாகக் கருத்துக் கொள்ளவும் இடம் ஏற்படுகின்றது.

நம்மாழ்வாரின் திருவாறன்விளை[2] திருவாய்மொழியின் இன்பம் பயக்க (7.10) என்ற திருப்பதிகத்தின்,

சிந்தைமற் றொன்றின் திறத்தல்
லாத்தன்மை தேவபி ரான்அறியும்
சிந்தையி னால்செய்வ தானறி
யாதன மாயங்கள் ஒன்றுமில்லை
சிந்தையி னால்சொல்லி னால்செய்கை
யால்நிலத் தேவர் குழுவணங்கும்
சிந்தை மகிழ்திரு வாறன்
விளையுறை தீர்த்தனுக் கற்றபின்னே (10)

[ சிந்தை-மனம்; மற்று ஒன்று-வேறொன்று; தேவபிரான்-எம்பெருமான்; சிந்தையினால்-நெஞ்சால்; சொல்லால்-வாக்கால்; செய்கையால்-காயத்தால்; நிலத் தேவர்-பாகவதர் குழு-பாகவதர் கூட்டம்; சிந்தைமகிழ்-மனம் களிக்கும்.]

என்பது பத்தாம் பாசுரம். இந்தப் பாசுரத்தில் முதல் இரண்டு அடிகள்தாம் நமது கருத்திற்கு முக்கியம். " சிந்தையை மகிழச் செய்கின்ற திருவாறன்விளை என்னும் திவ்விய தேசத்திலே எழுந்தருளியிருக்கின்ற பரிசுத்தனான எம்பெருமானுக்கு அடிமை என்று அறுதியிட்ட பின்பு என் மனம் வேறு ஒன்றினை உத்தேசியமாக நினைத்திராத தன்மையை எம்பெருமான் அறிவான்; சிந்தையினால் நினைக்கப்படுவனவான வஞ்சனைகள் (மாயங்கள்) அவன் அறியாதன ஒன்றும் இல்லை என்பதால்.

2. திருவாறன் விளை (ஆரமுல்லா), செங்கனூர் (கேரளம்) இரும்பூர்தி நிலையத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன. சத்திரம் உண்டு; கடைகள் உண்டு; உணவு விடுதி இல்லை. இறைவன்: திருக்குறளப்பன். தாயார்: பதுமாசனி நாச்சியார். நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

''ஆழ்வீர்! இப்போது நீர் திருவாறன்விளையிலே பிராவண்யம் (ஊற்று) முற்றியிருந்தீராகிலும், பலகாலும் 'பரமபதம், பரமபதம்' என்று வாய்வெருவிக் கிடந்தீராதலால், எம்பெருமான் 'இதையே கொள்ளும்' என்று நிர்பந்தித்துக் கொடுத்தானாகில் என் செய்வீர்?'' என்று சிலர் உசாவிய தாகக் கொண்டு அதற்கு விடை தருகின்றார் இப்பாசுரத்தில், ''அதனை, என் நினைவிற்கு மூலமாக இருக்கின்ற சர்வேசு வரனைக்கேட்டுக் கொள்வது'' என்று அருளிச் செய்வர் நஞ்சீயர். ''திருவாறன்விளையே பிராப்பியம் என்று இருக்கின்றீர்; ஈசுவரன் சுதந்திரன் அல்லனோ? அவன் பரம பதத்தைத்தரின் என் செய்வீர்!'' என்ன, ''அவன் முற்றறி வினன் அல்லனோ? அவன் அறியானோ, என்கின்றார்'' என்று பிள்ளான் பணிப்பர். ''அவன் புருஷார்த்தப் பிரதன் என்று பிரசித்தி பெற்றவன் அல்லனோ? புருஷன் விரும்பியதை யன்றோ அவன் கொடுத்தருளுவன்! எனது சிந்தை திருவாறன்விளை தவிர மற்றொன்றையும் கணிசியாதிருக்கும் படியை அறிய ஆற்றலற்றவன் அல்லனே; அப்படி அறிந்து கொண்டும் எங்ஙனே மற்றொன்றினைக் கொடுப்பான்?'' என்கின்றார். ''மற்றொன்று என்கிறது, பரமபதத்தின் பெயர் சொல்லுகையும் கூட அஸஹ்யமானபடி'' என்பது ஈடு. இதனாலும் 'ஞாதா-ஜ்ஞேயன்' உறவு உறுதியாகின்றது.

இந்த உறவு குலசேகராழ்வாரின் பெருமாள் திருமொழி யின் விற்றுவக் கோடு[3] பற்றிய திருமொழியின் (5)

எத்தனையும் வான்மறந்த
காலத்தும் பைங்கூழ்கள்

3. திருவிற்றுவக் கோடு : ஷோரனூர்-குருவாயூர் சாலையில் ஷோரனூரிலிருந்து 14 கி.மீ. தொலைவிலுள்ளது. சந்நிதி பாரதம்புழா நதிக்கரையில் உள்ளது ஷோரனூரிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. இறைவன் : உய்யவந்த பெருமாள்; தாயார்: விற்றுவக் கோட்டுவல்லி நாச்சியார். நின்ற திருக்கோலம்; தெற்கு நோக்கிய திருமுகமண்டலம்.

மைத்தெழுந்த மாமுகிலே
    பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்விட் டாவிடினும்
    வித்துவக்கோட் டம்மா!, என்
சித்தம்மிக உன்பாலே
    வைப்பன் அடியேனே (7)

[ எத்தனையும்-எவ்வளவு காலம்; வான்-வானம்; வறந்த காலத்தும்-மழை பெய்யாமல் செய்தாலும்; பைங் கூழ்கள்-பயிர்கள்; மைத்து-கருநிறங்கொண்டு; மாமுகில் பெரிய மேகங்கள்; மெய்துயர்-தவறாது நுகரும் துன்பம்; விட்டாவிடினும்-போக்கா விட்டாலும்; சித்தம்-மனம்; உன்பால்-உன்னிடத்தில் ]

என்ற ஏழாம் பாசுரத்தில் தெளிவாகக் காணலாம். கான மேகத்தின் நிலையில் எம்பெருமானையும் பயிரின் நிலையில் தம்மையும் வைத்துக் கூறியதனால் ஞாதா-ஞேயன் உறவு (உலகத்து உயிர்கட்கெல்லாம் சிவாதாரம் பரமான்மாவே என்ற உண்மை) தெளிவாக அறிய முடிகின்றது.

# 7. சுவம்-சுவாமி சம்பந்தம்

திருமந்திரத்தின் நடுப்பதமான 'நம:' என்பதால் இந்தச் சம்பந்தம் (ஸ்வ-ஸ்வாமி) சொல்லப் பெறுகின்றது. இதைச்சொத்து - சொத்துக்குரியவன் (சொம் - சொத்து. உடைமை - உடையவன்) உறவு என்றும் கூறலாம். இந்த உலகில் பொருளையுடையவன் அதனைத் தன் விருப்பப்படி அநுபவிப்பதும், பெட்டியில் வைத்துப் பேணுவதும் பிறருக்கு உதவுவதுமாக எப்படிச் சுதந்திரமாகப் பயன்படுத்துகின்றானோ அப்படியே பரமான்மாவும் இந்தச் சீவான்மாவைச் சுதந்திரமாக வைக்கவும், தள்ளவும், எடுக்கவும் உரியவனாகின்றான். சீவான்மாவும் அப்பொருளைப் போலவே தனக்கு எந்தவித சுதந்திரமுமின்றிப் பரமான்மாவின் விருப்பத்திற்கே அவனது அநுபவிக்கும் பொருளாகக் கடமைப்பட்டு வாழ்பவனாக அமைகின்றான்.

மகாரம் வடமொழியில் இருபத்தைந்தாம் எழுத்து. இது ஞானத்தைக் குறிக்கும் சொல். ஆதலால் இஃது ஆன்மாவைச் சொல்லுகின்றது. மகாரம் இருபத்தைந்தாம் எழுத்து என்பது எப்படி? வடமொழியில் க இனம் ஐந்து; ட இனம் ஐந்து; த இனம் ஐந்து: ப இனம் ஐந்து. இந்த ஐந்து இனங்களிலும் இருபத்தைந்து எழுத்துகள் உள்ளன. இவற்றுள் பகர இனத்திற்கு இறுதியாகவுள்ள (இருபத்தைந்தாவதாகவுள்ள எழுத்து) மகாரம் ஆகும்.

இஃது ஆன்மாவைக் குறிப்பது எப்படி? வைணவ தத்துவத்தில் சித்து, அசித்து, ஈசுவரன் ஆகிய மூன்றும் உண்மைப் பொருள்கள். அசித்து பிரகிருதி தத்துவம். அப்பிரகிருதி தத்துவமும் அதன் காரியப் பொருள்களும் சேர்ந்து இருபத்து நான்கு தத்துவங்கள். இத்தத்துவங்களை முதல் இருபத்து நான்கு எழுத்துகள் கூறுகின்றன. இதனை விளக்குவேன். க-இனத்தைச் சேர்ந்த ஐந்து எழுத்துகளால் ஐம்பெரும் பூதங்களும், ச-இனத்தைச் சேர்ந்த ஐந்து எழுத்துகளால் கன்மேந்திரியங்கள் ஐந்தும், ட-இனத்தைச் சேர்ந்த ஐந்து எழுத்துகளால் ஞானேந்திரியங்கள் ஐந்தும், த-இனத்தைச் சேர்ந்த ஐந்து எழுத்துகளால் ரூபம், சத்தம், மணம், சுவை, ஸ்பரிசம் (சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன) ஆகிய ஐந்தும், ப-இனத்தைச் சேர்ந்த முதல் நான்கு எழுத்துகளால் மனம், அகங்காரம், மகத்துவம், மூலப்பகுதி ஆகிய நான்கும், இவ்வினத்தைச் சேர்ந்த இருபத்தைந்தாம் எழுத்தாகிய மகாரத்தால் ஆன்மாவும் சொல்லப்பெறுகின்றன. மகாரத்தில் சொல்லப்பெறும் ஆன்மாவுக்கும் அகாரத்தில் சொல்லப்பெறும் பரமான்மாவுக்கும் உள்ள உறவே உடைமை-உடையவன் என்ற உறவாகும். இந்த உறவை ஆழ்வார் பாசுரங்களின் மூலம் தெளியலாம்.

எம்மாவீட்டு (2.9) என்ற நம்மாழ்வாரின் திருவாய் மொழித் திருப்பதிகத்தில்,

> யானே என்னை அறிய கிலாதே,
> யானே என்தனதே என்று இருந்தேன்
> யானே நீ;என் உடைமையும் நீயே;
> வானே ஏத்தும்எம் வானவர் ஏறே!(9)

[அறியகிலாமல் - அறியமாட்டாமல்; யான் - அகங்காரம்; என் தனது-மமகாரம்; இருந்தேன்-கொண்டிருந்தேன்]

என்பது ஒன்பதாம் பாசுரம், ''தேவரீருக்கும் எனக்கும் உண்டான சம்பந்தம் அநாதியாக இருந்து வருவது, அந்தோ! அதனை நெடுநாளாக மறந்து 'யான்' 'எனது' என்ற

செருக்குகளால் பாழாய்ப் போனேனே'' என்ற இழந்த நாட்களுக்காக வருந்துகின்றார். பாசுரம் தொடங்கும் போதே யானே என்கின்றார். 'என்னாலே நான் கெட்டேன்' என்கின்றார். ''எம்பெருமான் என்னை வாரிப் பிடியாக பிடித்துக் கொள்ள எதிர் சூழல் புக்குத் திரியா நிற்க, நானே யன்றோ விநாசத்தைத் தேடிக் கொண்டேன்'' என்கின்றார். "என்னை அறியகிலாதே"-அரச குமாரன் வேடன் கையில் அகப்பட்டுத் தன்னை வேடனாக நினைக்குமாறுபோன்று நானும் சம்சார சாகரத்தில் அகப்பட்டு 'அவனும் அவனுடைமையும்' என்றிருப்பதைத் தவிர்ந்து, 'நானும் என்னுடைமையும்' என்று வகுத்துக் கொண்டு போந்தேன். இப்போது (அநுதாபம் பிறந்த பிறகு) 'யானே நீயே யாவாய்; என் உடைமையும் நீயே யாவாய்' என்கின்றார். இவ்வாறு கூறுவது 'அத்வைதம் போலிருக்கின்றதே' என்று கருதலாகாது. ''நான் உனக்கு அடிமைப்பட்டவன்; எனக்கென்று தனியே ஒரு பொருள் இல்லை'' என்பது கருத்து. இதனால் 'சொத்து - சொத்துக்குரியவன்' என்ற சம்பந்தம் தெளிவாகின்றது.

இந்த உறவு 'விடுமின் முற்றவும்' (1.2) என்ற திருவாய்மொழியின்,

> நீர்நுமது என்றிவை
> வேர்முதல் மாய்த்து (3)

என்ற மூன்றாம் பாசுரத்திலும் அமைந்துள்ளது. விடவேண்டிய பொருள்கள் பலபல கிடப்பதால் அவற்றையெல்லாம் தனித்தனியே எடுத்துரைத்தல் பெரும் பாடாகுமாதலால் விடவேண்டியவற்றைச் சுருங்க அருளிச்செய்கின்றார் நீர் நுமது-கேட்டினை விளைவிக்கின்ற 'யான்' 'எனது' என்ற செருக்குகள். இப்பாசுரம் பிறர்க்கு உபதேசிக்கும் முன்னிலை இடமாதலின் 'யான்' 'எனது' என்னும் தன்மைப் பெயர்களை 'நீர், நுமது' என முன்னிலையாக அருளிச் செய்கின்றார். இனி, செருக்கினைப் புலப்படுத்தும் அச்சொற்களைத் 'தாம்

தம் திருவாயால் கூறுதற்கு அஞ்சி 'நீர், நுமது' என்கின்றார். இங்கு 'நீர், நுமது' என்பது சம்சாரத்துக்கு வித்து; 'வேர் முதல் மாய்த்து' என்பது மருந்து. இங்கே இன்சுவை மிக்க ஈட்டு சூக்தி காண்மின்; 'நான், எனது' என்று தம் வாக்காலே சொல்லமாட்டாரே, நாக்கு வேம் என்று'' என்பது.

இந்தக் கருத்தை வள்ளுவர் பெருமானும்,

யான்எனது என்னும்
செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம்
புகும் (குறள்-346)

என்று 'துறவு' அதிகாரத்தில் கூறியுள்ளதையும் அதற்குப் பரிமேலழகர், ''இஃது ஒருவித மயக்கம் என்றும், இதனைக் கெடுத்தலாவது தேசிகர்பாற் பெற்ற உறுதி மொழிகளாலும் யோகப் பயிற்சியாலும்,[1] அவையாதென்ற தன்மை தெளிந்து, அவற்றின்கண் பற்றினை விடுதல்'' என்ற உரையையும் நோக்கி உண்மை அறிதல் வேண்டும்.

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அருளிய திருவரங்கக் கலம்பகத்தில் இரண்டு பாடல்கள் இந்த உறவு முறையை விளக்குகின்றன.

ஆனந்தமாய் அரங்கற்கே உயிர்கள்
அடிமை என்னும்
ஞானந்தனால் ஐம்பொறிவாசல்! சாத்தி
நற்றாளைப் பற்றி
ஈனந்தரும் பற்றும் மற்றென்றும்
யான்எனது என்னும்அபி
மானம் தவிர்ந்திருப் பார்க்குஇது
போல்இல்லை மாதவமே.[1]

[ உயிர்கள்-ஆன்மாக்கள்; ஞானம்-தத்துவம்; சாத்தி அடைத்து; தாள்-திருவடி; ஈனம-இழிவு; பற்று-ஆசைகள்; அற்று-நீங்கப்பெற்று; என்றும்-எந்நாளும்; மாதவம்-பெரிய தவம். ]

(1) திருவர. கலம். 62

என்பது 62-ஆம் பாசுரம். "'ஆன்மா எம்பெருமானுக்கே அடிமை' என்று தனது ஆன்ம சொரூபத்தை உணர்ந்து ஐம்புலன்கள் வழிச் செல்லாமல் எம்பெருமானிடத்து மனம் வைத்து அகப்பற்று புறப்பற்றுகளை ஒழித்தலே மிகச் சிறந்த தவம்" என்கின்றார் அய்யங்கார்.

நெறிவாசல் தானேயாய் நின்றானை ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம்! சாத்தி—அறிவானாம்
ஆலமர நீழல் அறம்நால்வர்க்கு அன்றுரைத்த
ஆலம்அமர் கண்டத்து அரன்[2]

[நெறி-வழி; பொறி-ஐம்பொறி; நால்வர்-சனகாதி முனிவர்கள்; ஆலம்-நஞ்சு; கண்டம்-கழுத்து]

என்ற பொய்கையாழ்வார் பாசுரமும் ஈண்டு நினைவு கூரத் தக்கது.

மாத வங்கள் என்(று) ஓத வங்களின்
மருவு சீவன் என்று ஒருவ! நீபெரும்
பூதம் அல்லை; இந் திரியம் அல்லை; ஐம்
புலனும் அல்லை; நற் புந்தி அல்லைகாண்;
சீத ரன்பரந் தாமன் வாமனன்
திருவ் ரங்கனுக் (கு) அடிமை; நீயுனக்கு
ஏதும் இல்லை என்றறி; அறிந்தபின்
ஈதின் மாதவம் இல்லை எங்குமே[3]

[மா-பெரிய; ஓது - சொல்லப்பெறும்; அவிங்களர்-வீண் தொழில்கள்; மருவு-பொருந்துகின்ற; ஒருவ-ஒருவனே; புலன்-தந்மாத்திரை; புந்தி-அறிவு; அடிமை-அடியவன்; ஈதின்-இதுபோன்ற]

என்பது திருவரங்கக் கலம்பகத்தின் பாசுரம். இது தம்மனத்திற்கு அய்யங்கார் தாமே உபதேசிக்கும் முகத்தால் சீவான்மாவின் சொரூபம் இத்தன்மையது என விளக்குகின்றார். "பெரிய தவம் என நினைத்து வீண் தொழில்களில் பொருந்தியிருக்கும் ஒருவனே! (ஆன்மாவை விளித்தபடி) நீ ஐம்பெரும் பூதங்களும் அல்லை; ஐந்து, இந்திரியங்களும் அல்லை;

2. முதல். திருவந். 4 3. திருவரங். கலம். 63

அறிவும் அல்லை.' திருமகளைத் தன் மார்பில் தரித்தவனும், பரமபதத்தை உடையவனும், வாமன உருவமாய் வந்து மாவலியின் செருக்கை அடக்கியவனுமாகிய அரங்கநகர் அப்பனுக்கு அடியவன் நீ; உனக்கு யாதொரு சுதந்திரமும் இல்லை; இதனை நீ அறிவாயாக; இங்ஙனம் அறிந்தால் இது போன்ற பெரிய தவம், எந்த உலகிலும் இல்லை" என்கின்றார் அய்யங்கார். இதனால் ஆன்மா பரமான்மாவுக்குப் பரதந்திரியப்பட்டது—அஃதாவது பரமான்மாவுக்கு ஒரு சொத்து போல் உரியது என்பது தெளிவாகின்றது.

இந்த உறவு குலசேகரப் பெருமாள் திருமொழியில், (5) தெளிவாகப் புலனாகின்றது.

தொக்கிலங்கி யாறெல்லாம்
 பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க
 மாட்டாத மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்!
 விற்றுவக்கோட் டம்மாஉன்
புக்கிலங்கு சீரல்லால்
 புக்கிலன்காண் புண்ணியனே.

[தொக்கு இலங்கு-நீரோட்டம் திரண்டு விளங்குகின்ற; பரந்து ஓடி-பரவியோடி; தொடுகடல்-ஆழ்ந்த கடல்; புக்கு-புகுந்து; புறம்-மற்றோர் இடம்; புக்கு இலங்கு-(என் நெஞ்சினுள்) புகுந்து விளங்குகின்ற; முகில்-மேகம்; சீர்-கல்யாண குணங்கள்]

என்பது எட்டாம் பாசுரம். இங்கு கடலின் இடத்தில் எம்பெருமானையும், நதியின் இடத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், பரமான்மாவின் பெருமையும் சீவான்மாவின்

சிறுமையும், முடிவில் சீவான்மா பரமான்மாவை அடைதலும் புலனாகும். இதில் சொத்து-சொத்துக்குரியவன் உறவு தெளிவாக அறியக் கிடக்கின்றது.

'நின்னையே தான்வேண்டி' என்ற ஒன்பதாம் பாசுரத்திலும் சுவம்-சுவாமி சம்பந்தம் புலப்படுவதாகக் கூறுவர் பிரதிவாதி பயங்கரம்.[3] இதனையும் விளக்குவேன்.

நின்னையே தான்வேண்டி
நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும்
செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி
வித்துவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி
நிறபன் அடியேனே (9)

[ நின்னையே-உன்னையே; நீள்செல்வம்-மிக்கசம்பத்து; வேண்டாதான் - விரும்பாதவன்; தான்வேண்டும்-தானாகவே வந்து சேர விரும்புகிற; வேண்டி நிற்பன்-அடைய விரும்பி நிற்பேன்]

என்பது ஒன்பதாம் பாசுரம். செல்வத்துக்கு உரியவன் இடத்தில் எம்பெருமானையும், செல்வத்தின் இடத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால் 'சீவான்மா-பரமான்மா உடைமை' - உடையவன்-உடைமை உறவு-தெளிவாகின்றதல்லவா?

3 பெருமாள் திருமொழி-திவ்வியார்த்த தீபிகை- பக். 31

# 8. சரீர-சரீரி பாவனை

திருமந்திரத்தின் மூன்றாவது பதமாகிய 'நாராயணாய' என்பதிலுள்ள 'நார' என்ற பதத்தால் சரீர-சரீரி பாவனை என்ற உறவு உரைக்கப்பெறுகின்றது. சரீர-சரீரி பாவனை என்பது உடல்-உயிர் உறவு என்று வழங்கப்பெறும். சித்து (சேதநம்) என்ற தொகுதியிலுள்ள மூன்று வகை ஆன்மாக்களும்,[1] அசித்து (அசேதநம்) என்ற தொகுதியிலுள்ள மூன்று

---

1. பத்தர் - தளைப்பட்டிருப்பவர்; முத்தர், நித்தியர் என்பவர்கள். பத்தர் என்பவர்—'மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய' பரவானின் மாயையால் மறைக்கப் பெற்ற சொருபத்தையுடையவராய், அநாதி அஞ்ஞானத்தால் தேடிய புண்ணிய பாவமாகிய வினைகளால் சூழப்பெற்ற வராய், அவரவருடைய வினைக்குத் தக்கபடி மாறிமாறித் தேவ, மனித, விலங்கு, தாவர, வடிவங்களைப் பெற்று, துக்க பரம்பரைகளை அநுபவிக்கும் சம்சாரிகளாவர்; நம்போலி யர்). முத்தர் என்பவர், இவ்வுலகத்தளைகள் களையப் பெற்றுப் பரமபதத்தில் பகவதநுபவம் பெற்று, கைங்கரி யத்தை அநுபவித்துக் கொண்டிருப்பவர்கள். நித்தியர் என்போர், ஒருநாளும் சம்சார சம்பந்த உணர்வு இல்லாத அனந்தன், கருடன், சேனைமுதலியார் தொடக்கமானவர்கள்.

வகையும்[2] எம்பெருமான் திருமேனியில் அடங்கியிருக்கும். அதாவது, சித்தும் அசித்தும் எம்பெருமானுக்கு உடலாக இருக்கும். இதுதான் 'சரீர-சரீரி பாவனை' என்று வழங்கப் பெறுகின்றது. இந்தக் கருத்தை இவ்விடத்தில் விரிவாக விளக்குவோம்.

விளக்கம் : உயிர் உடலிலிருந்து அதனைத் தரிக்கச் செய்கின்றது. உயிரின்றேல் உடல் வீழ்ந்து விடுதல் கண் கூடு. மேலும், உயிர்தான் உடலை இயக்குகின்றது. உயிர் உடலுக்குத் தலைவனாக உள்ளது. அங்ஙனமே இறைவன் எல்லாப் பொருள்களில் இருந்து அவற்றைத் தன் விருப்பம் போல் நடத்தி அவற்றிற்குத் தலைவனாகவும் இருக்கின்றான். ஆயினும், உடலினுள் உயிர் இருப்பதற்கும் எல்லாப் பொருள் களிலும் இறைவன் இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. உயிர் அணுஅளவினதாய் உடம்பினுள் ஓரிடத்திலிருந்து கொண்டு தன் ஞானத்தால் (தர்மபூத ஞானத்தால்) உடல் முழுவதும் பரவி இவ்வுடம்பைப்பற்றிய நிகழ்ச்சிகளை உணர்த்துகின்றது. இறைவன் அங்ஙனமின்றி ஒவ்வொரு பொருளுள்ளும் முழுவதும் தன் சொரூபத்தோடு வியாபித்துள்ளான். அன்றியும், உடலினுள் உயிர் இருப்பதற்கும் உடல் உயிர் ஆகிய இரண்டினுள் இறைவன் இருப்பதற்கும் மற்றொரு வேறுபாடும் உண்டு. உயிர் உடலினுள் இருக்கும் போது அவ்வுடலுக்குறிய வளர்ச்சி தேய்வுகள் (விகாரங்கள்) உயிருக்கு உண்டாவதில்லை. ஆனால் உடலைப் பற்றிய இன்ப துன்ப உணர்ச்சிகள், அறிவின் சுருக்கம், பெருக்கம் ஆகியவை உயிருக்கு உண்டு, உடலின் மீது தண்ணிய காற்று

2. சுத்த சத்துவம், மிச்ர தத்துவம், சத்துவ சூனியம் என்பவை. சுத்த சத்துவம் — நித்திய விபூதியிலுள்ள விமானம், கோபுரம், மண்டபம், உப்பரிக்கை முதலிய வடிவுடன் தோற்றம் கொள்ளுபவை; மிச்ர தத்துவம் — மூலப் ப்ரகிருதி, இஃது அவித்யை, மாயை, திரிகுணம் என்ற பெயர் களாலும் வழங்கப்பெறும். எ.-டு. அண்டங்கள். சத்துவ சூனியம் — இது கால தத்துவம்.

வீசுங்கால் இன்புறுதலும், தீ சுடுங்கால் துன்புறுதலும் உடலினுள் இருக்கும் உயிருக்கு நேரிடுகின்றன. இனி, குழந்தைப் பருவத்தில் அதனுள் இருக்கும் உயிரின் அறிவு சுருங்கிய நிலையிலிருந்து பின்பு வளர்ச்சியுறுதலைக் காண்கின்றோம். மற்றும், மக்கள் உடம்பினுள் உள்ள உயிர் ஐம்பொறி அறிவும் உடையதாக உள்ளது. அவ்வுயிரே மரம் எறும்பு முதலிய உடல்களில் புகுந்தால் ஐம்பொறியறிவு மின்றிச் சில குறையவும் பெறுகின்றன. இனி, உயிர் பரு உடலைப் பெறாத நிலையில் அறிவு சுருங்கியிருத்தலும், அறிவு விரிந்திருத்தலும் உண்டு. இங்ஙனமாக உடலைப் பற்றி நிற்கும் உயிர் அவ்வுடலுக் கேற்ப இன்ப துன்ப உணர்ச்சிகளும் அறிவின் சுருக்கமும் பெருக்கமும் அடைதல் தெளிவாகும். ஆனால், உடல் உயிர் இரண்டினுள்ளும் கலந்து நிற்கும் இறைவனை இவ்வேறுபாடுகள் சிறிதும் அடைவதில்லை.

இதற்குக் காரணம் 'பிரவேச ஹேது விசேடம்' என்பர் மெய்விளக்க அறிஞர்கள். ஆன்மா உடலினுள் கர்மம் அடியாகப் பிரவேசிக்கின்றது. இறைவன் இவ்விரண்டினுள் (உடல், உயிர்) திருவருள் காரணமாகப் பிரவேசிக்கின்றான். சிறைக் கூடத்தில் சிறையனும் கிடந்தான்; அரச குமாரனும் இருந்தான். சிறையன் கர்மம் அடியாகப் பிரவேசிக்கையாலே துக்கத்திற்கு ஏதுவாயிற்று; அரசகுமாரன் இச்சையால் பிரவேசித்ததால் போகருபமாக இருந்தது. இந்த எடுத்துக் காட்டால் இக்கூறிய கருத்தைத் தெளியலாம்.[3]

ஆழ்வார் பாசுரங்கள்: சேதநமும் (சித்து) அசேதனமும் இறைவனின் திருமேனியாக அமைந்துள்ளன என்பதை, ஆழ்வார்கள் பாசுரங்கள் மூலம் எடுத்துக் காட்டி விளக்க முயல்வேன்.

---

3. ஈட்டின் தமிழாக்கம்-திருவாய் 3.4;10 காண்க.

ஈசுவரனுக்கு அடிமையாகவுள்ள (சேஷமாகவுள்ள) ஆன்மா ஆன்மாவை விட்டுப் பிரிந்திராத உடலைப்போல் ஆண்டானான (சேஷியான) ஈசுவரனை ஒழியவும் தான் வேறாகக் காணப் பெறுதல் இல்லை. இந்த முறையில் ஒவ்வொர் ஆன்மாவும் ஈசுவரனின் உடலாக இருக்கும். இங்ஙனமே, அசித்தின் மூன்று பகுதிகளும் ஈசுவரனுக்கு உடலாகத் திகழ்கின்றன. அதாவது சேதநா சேதநங்கள் எம்பெருமானின் சரீரமாக அமைத்துள்ளன. இது,

> திடவிசும்பு எரிவளி
> நீர்நிலம் இவைமிசைப்
> படர் பொருள் முழுவதும்
> ஆய்அவை அவைதொறும்
> உடல்மிசை உயிரெனக்
> கரந்தெங்கும் பரந்துளன்.[4]

[ விசும்பு-ஆகாயம்; எரி-நெருப்பு; வளி-வாயு; படர் பொருள்-படர்ந்த பொருள்; அவை அவைதொறும்-அப் பொருள்கள் எல்லாவற்றிலும்; கரந்து-மறைந்து ]

என்ற நம்மாழ்வார் பாசுரத்தில் விளக்கம் அடைகின்றது. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் உடலில் உயிர் உறையுமாப் போலே மறைந்திருந்து எல்லாவற்றிலும் தனித்தனியே குறைவற வியாபித்திருப்பான் இறைவன். நம்முடைய உடலுக்கு ஆன்மாதான் தாரகமாய், நியாமகனாய், சேஷியாய் இருப்பது போல, உடல் ஆன்மாக்களுக்கு எம்பெருமான் தான் தாரகமாய் நியாமகனாய், சேஷியாய் இருப்பான். 'கரந்து' என்பதனால் ஒருவருக்குத் தெரியாமல் மறைந்து அந்தர்யாமியாய் இருப்பான் என்பதும், 'எங்கும் பரந்து' என்பதனால் உள்ளும் புறமும் வியாபித்து இருப்பான் என்பதும் பெறப்படுகின்றன. இதே கருத்து,

4 திருவாய். 1.1:7

நீர்ஆய் நிலன்ஆய் தீஆய்
காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்கள் இரண்டு ஆய்
சிவனாய் அயன் ஆனாய்[5]

[ காலாய்-காற்றாய்; வானாய்-ஆகாயமாய்; சுடர்கள்-சூரியன், சந்திரன்; அயன்-நான்முகன் ]

என்று இன்னொரு திருவாய் மொழியிலும் வந்துள்ளது.

திருமங்கையாழ்வார்,

திடவிசும்பு எரிநீர் திங்களும் சுடரும்
செழுநிலத்து உயிர்களும் மற்றும்
படர்பொருள் களுமாய் நின்றவன்[6]

என்ற பாசுரத்தில் அசித்து, சித்து என்ற இரண்டு தத்துவங்களையும் சேர்த்துக் கூறுவதைக் காணலாம். சரீர-சரீரி சம்பந்தத்தைக் காட்டும் பாசுரங்கள் இந்த ஆழ்வாரின் அருளிச்செயல்களிம் ஏராளமாக உள்ளன.[7]

மேற்குறிப்பிட்ட பாசுரங்களில் சித்து, அசித்து என்ற இரண்டையும் எம்பெருமான் உடலாகக் கொண்டுள்ளான் என்பது விளக்கப்பெற்றது. "அடியேன் உள்ளான் உடல் உள்ளான்" (திருவாய் 8.8:2) என்ற சொற்றொடரை ஈண்டு விளக்குவது பொருத்தமாகும். ஆழ்வார் அருளிச் செயல்களில் 'அடியேன்' என்ற சொல் எத்தனையோ இடங்களில் வருகின்றது. முதல் பிரபந்தமாகிய திருவிருத்தத்தின் முதல் பாசுரத்தில் 'அடியேன் செய்யும் விண்ணப்பம்' என்றுள்ளது.

5. திருவாய் 6.9:11

6. பெரி. திரு. 4.3 : 3

7 ஷை. 1.8 : 8; 4.1 : 3; 4.5 : 7; 4.9; 5: 10.9: 9 என்பவை அவற்றுள் சில.

இத்திருவாய்மொழியின் (8.8) முதற் பாசுரத்தின் முடிவில் 'ஒருவன் அடியேன் உள்ளானே' என்று உள்ளது. இப்படி பல விடங்களிலுமுள்ள 'அடியேன்' என்ற சொல்லுக்கும் இப்பாசுரத்திலுள்ள (8.8 :2) சொல்லுக்கும் உள்ள வேறுபாட்டினைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

'அடியேன்' என்ற சொல் பல விடங்களில் வந்தாலும் அவ்விடங்களிலெல்லாம் உடலோடு கூடினவனான (தேக விசிஷ்டனான) ஆன்மாவே அடியேன் என்ற சொல்லுக்குப் பொருளாகும். 'அடியேன் செய்யும் விண்ணப்பம்' (திருவிருத்.1) என்ற தொடரை எடுத்துக் கொள்வோம். உடலின்றி ஆன்மா மட்டிலும் விண்ணப்பம் செய்ய முடியாதல்லவா? உடலுடன் கூடிய ஆன்மாவே விண்ணப்பம் செய்ய முடியுமாதலால் இங்குத் தனியாக ஆன்மாவைப் பொருளாகக் கொள்ள முடியாது. எல்லா இடங்களிலும் இப்படியே கொள்ளவேண்டும். 'அடியேன் சிறிய ஞானத்தன்' (1.5;7) என்ற தொடரில் 'ஞானத்தன்' என்று ஞானமுடைமை சொல்லியிருப்பதனால் அஃது உடலுக்கு சம்பந்தமில்லை என்றும், ஆன்மாவுக்கே சம்பந்தம் என்றும் கொண்டு 'அடியேன்' என்பது வெறும் ஆன்மாவையே சொல்லியாக வேண்டும் என்ற மயக்கம் தோன்றுவது இயல்பு. ஆனால் அஃது உண்மையன்று. அங்கும் உடலோடு கூடிய ஆன்மாவையே குறிக்கின்றது. ஏனெனில் பாசுரத்தின் இறுதியிலுள்ள 'காண்பான் அவற்றுவன்' என்னும் செயலில் அச்சொல் பொருந்த வேண்டியுள்ளது. வெறும் ஆன்மா அலற்ற முடியாதாகையால் அந்த இடத்திலும் உடலோடு கூடிய ஆன்மாவையே குறிக்கின்றது என்பது உறுதியாகின்றது.

'ஒருவன் அடியேன் உள்ளானே' (8.8: 1) என்று வரும் இடத்தையும் நோக்குவோம். இங்கு ஒருவன், ஒப்பற்றவன். தாமரைக் கண்ணனாய், மழை முகில் போன்ற நிறத்தை யுடையவனாய், நான்கு தோளனாய், திருவாழி, திருச்சங்கு முதலான திவ்விய ஆயுதங்களைத் தரித்தவனாகையாலே

ஒப்பற்றவனாகின்றான், இறைவன். அடியேன்-அவனுடைய இறைமைத் தன்மை ஒப்பற்றதாய் இருப்பது போன்று, இவரது அடிமைத் தன்மையும் ஒப்பற்றது. ஆன்மாவின் சொரூப ஞானத்தால் அன்றி எம்பெருமான் அழகுக்குத் தோற்று 'அடியேன்' என்கின்றார் என்றும் கொள்ளலாம். உள்ளே புறத்திலே திரியும் மனத்தினை உள்முகம் ஆக்கினவாறே அவனுடைய வடிவழகு வயிரப் பேழை திறந்தாற் போலே அவயவசோபையும் ஆயுதசோபையும், ஆபரணசோபையும் மிளிரா நின்றதாயிற்று. ஆகவே, இங்கும் உடலோடு கூடின ஆன்மாவையே சொல்லி நிற்பது உறுதியாகின்றது.

"'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்'' என்னும் இத் தொடரில் மட்டிலும் 'அடியேன்' என்ற சொல் வெறும் ஆன்மாவையே குறிக்கின்றது என்று கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆன்மா சிறப்பாகக் குடி கொண்டிருக்கும் உடம்பைக் குறிக்கும் 'உடல்' என்ற சொல் தனிப்பட இருப்பதால், 'அடியேன்' என்ற சொல்லில் உடலைச் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எம்பெருமான் சீவான்மாவையும் உடல் பொருளையும் அந்தர்யாமியாய் ஊடுருவி நிற்பவன் என்று சொல்லவேண்டுவது இங்கு அவசியமாகின்றது. 'உடல் உள்ளான்' என்பதனால் சடப் பொருளை ஊடுருவியுள்ளவன் என்று சொல்லி முடிந்தது. சீவான்மாவையும் ஊடுருவியுள்ளான் என்பதைச் சொல்ல விரும்பியே '' அடியேன் உள்ளான் '' என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. ஆன்மா 'நான்' என்ற பொருளையுடையதாகையால் 'என்னுள்ளான்' என்று சொல்லியிருக்கலாம். அப்போதும் 'ஆன்மாவில் உள்ளான்' என்னும் பொருள் தேறிவிடும். ஆனால், ஆழ்வார் அப்படி அருளிச் செய்யாமல் 'அடியேன் உள்ளான்' என்று அருளிச் செய்திருப்பதனால், 'ஆன்மா' என்பதும் 'அடியேன்' என்பதும் ஒரே பொருள்தான் என்பதாக அறுதியிடப் பெறுகின்றது. ஆக, 'அடியேன் உள்ளான்' என்றது ஆழ்வாரது ஆன்மாவில் வியாபித்துள்ளான் என்பதைக் குறிப்பிட்டவாறாகின்றது. 'உடல் உள்ளான்'

என்பது அவரது உடலிலும் வியாபித்துள்ளான் என்பதையும் குறிப்பிட்டாவாறாகின்றது. இந்த மருமம் குருகுல வாசப் பேறு இல்லாதார்க்கு அறிவது அரிது.

இந்த இரகசியம் திருக்கோட்டியூர் நம்பி ஆளவந்தார் திருவடி சம்பந்தத்தால் கேட்ட பெரும் பொருளாகும். இது கூரத்தாழ்வான் வழியாக எம்பெருமானார்க்கு நிதிபோல் கிடைத்த படியால் இப்பெரும் பொருள் அவர் திருவுள்ளத்தில் கிடந்து கீதைப் பேருரையில் (7:16) வெளியாகியுள்ளது. இது பற்றி ஈட்டில்[8] குறிப்பிடப்பெற்றுள்ள ஓர் இதிகாசமும் ஈண்டு அறியத்தக்கது.

ஒரு சமயம் எம்பெருமானார் கோஷ்டியில் உபய வேதாந்தம் பற்றிய காலட்சேபம் நடைபெற்றது. அப்போது, 'ஆன்மாவுக்கு ஞானம், ஆனந்தம், அடிமை இவை நிருபக மாகச் சொல்லப்பெறுகின்றனவே, இவற்றுள் அந்தரங்க நிருபகம் எது?' என்ற ஓர் ஆராய்ச்சி திருவோலக்கத்தில் உண்டாயிற்று. எம்பெருமானார் இப்பொருளைத் தெளிவாக அறிந்திருந்தாலும், இதை ஆசாரியர் மூலம் வெளியிட வேண்டும் என்று திருவுள்ளங் கொண்டார். கூரத் தாழ்வானை நோக்கி, 'வாரீர் ஆழ்வான்! திருக்கோட்டியூர் சென்று நம்பியைச் சேவித்து இதனை அறிந்து வாரும்' என்று நியமித்தார். ஆழ்வானும் நம்பி சந்நிதிக்கு எழுந்தருளி தண்டம் சமர்பித்துச் செய்தியை விண்ணப்பம் செய்து ஆறு மாதங்கள் சேவித்திருந்தும் ஆசாரியரின் திருவுள்ளம் இரங்கிற்றிலது[9] இதனால் ஆழ்வான் தம்மூர்க்குத் திரும்ப நினைத்து, புறப்படப்

8. ஈட்டின் தமிழாக்கம் பகுதி-8. திருவாய். 8.8:2-இன் உரை காண்க.

9. இப்படித்தானே இவ்வாசாரியர் திருமந்திரம் உபதேசம் பெறுவதற்காகச் சென்ற இராமாநுசரை 18 முறை திருவரங்கத்திற்கும் திருக்கோட்டியூருக்கும் பயணம் செய்யுமாறு இழுத்தடித்ததை நினைவு கூர்தற்பாலது.

புக, நம்பி அவரை அழைத்து மயர்வற மதி நலம் பெற்ற ஆழ்வார் 'அடியேன் உள்ளான்'-'உடல் உள்ளான்' என்று அருளிச்செய்தபடி கண்டாயே''என்று கூறினார். ஆழ்வானும் ''கிருதார்த்தன்[10] ஆனேன்'' என்று எம்பெருமானாரிடம் திரும்பி வந்து அவர் திருவடிகளில் அதனை விண்ணப்பம் செய்தார். சேம வைப்பான இப்பெரும் பொருளை எம்பெருமானார் திருவோலகத்தில் எடுத்து விளக்கினதாக வரலாறு.

இன்னொரு செய்தியும் ஈண்டு அறியத்தக்கதாக உள்ளது.

> 'அஹம்' அர்த்தத்துக்கு ஞாநாநந்தங்கள் தடஸ்தம் என்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்.[11]

என்ற ஸ்ரீவசனபூஷண சூத்திரத்திற்கு ''அடியேன் உள்ளான்' என்றாறிறே ஆழ்வார்! திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ஆழ்வான் ஆறுமாதம் சேவித்து நின்று மகா நிதியாகப் பெற்ற அர்த்தமிறே இது'' என்று மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வியாக்கியானத்தை ஈண்டுக் கருதுதல் தகும். 'அஹம் அர்த்தம்' என்றது, தன்னைத்தானே அறிந்து கொண்டிருக்கின்ற தன்மையாலே நான் என்று நினைப்பதற்கும் நான் என்று சொல்லிக் கொள்ளுவதற்கும் உரிய விஷயமாக இருக்கிற ஆன்மாவை. 'ஞானாநந்தங்கள்' என்றது அந்த ஆன்மாவிடத்துள்ள ஞானத்தன்மையினையும் ஆனந்தத் தன்மையினையும். 'தடஸ்தம் என்னும்படி' என்றது. புறத்தே நிருபகமாக இருப்பதனாலே 'புறவிதழ்' என்றார்.[12] இஃது இலக்கணை. 'தாஸ்யம்' என்றது, சேஷத்துவத்தை, இந்தத் தன்மையே ஆன்மாவின் 'அந்தரங்க நிருபகம்' ஆகும்.

---

10. கிருதார்த்தன்-பேறு பெற்றவன். 11. ஸ்ரீவச.பூஷ.74 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

12. ஆன்மாவை 'ஆன்மமலர்' என்று வழங்குகின்ற வழக்குப் பயிற்சி நோக்கி ஞானானந்தத் தன்மைகள் 'புறவிதழ்' என்று குறிக்கப்பெற்றன.

இதனை மேலும் விளக்க வேண்டுவது இன்றியமையாத தாகின்றது. முதலில் ஆன்மாவை சேஷத்துவத்தையிட்டு நிரூபித்துக் கொண்டே மற்றுமுள்ள தன்மைகளை நிரூபிக்க வேண்டும். நிரூபகம் என்பது, ஒரு பொருளை மற்றொரு பொருளினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது. தாஸ்யம், அஃதாவது அடிமைத் தன்மை இறைவனினின்றும் ஆன்மாவை வேறுபடுத்திக் காட்டும். ஞானத் தன்மையும் ஆனந்தத் தன்மையும் அசித்தினின்றும் வேறுபடுத்திக் காட்டும்.

இதனை மேலும் விளக்க வேண்டும். ஞானத்தன்மை, ஆனந்தத் தன்மைகளை மட்டிலும் ஆன்மாவிற்கு இலக்கணமாகச் சொன்னால், ஈசுவரனுக்கும் அந்தத் தன்மைகள் இருப்பதனால் அவ்விடத்தில் 'அதிவியாப்தி' என்ற குற்றம் வரும். அதனை நீக்குவதாகச் சேஷத்துவத்தையும் இலக்கணமாகச் சேர்க்க வேண்டும். சேஷத்துவத்தை மட்டிலும் இலக்கணமாகச் சொன்னால் அசித்திற்கும் இந்த சேஷத்துவம் இருப்பதனால் மீண்டும் 'அதிவியாப்தி' என்ற குற்றம் வரும். இதனை நீக்குவதற்காக ஞானத்தன்மை, ஆனந்தத் தன்மைகளையும் கூடச் சேர்க்க வேண்டும். எனவே, சேஷத்துவத்தோடு கூடின ஞானத்தன்மையும் ஆனந்தத் தன்மையுமே ஆன்மாவிற்கு இலக்கணமாகின்றது என்பது அறியப்படும்.

மாநிலம் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாக
விசும்பு மெய்யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளக்கிய திகிரி யோனே.[13]

13. நற்றிணை-1 (கடவுள் வாழ்த்து)

[ தூநீர் - தூயநீர்; வளை நரல் - சங்குகள் ஒலிக்கும்; பௌவம்-கடல்; உடுக்கை-ஆடை; விசும்பு-ஆகாயம்; மெய்-உடல்; பசுங்கதிர் மையம்-திங்கள்; சுடர்-ஞாயிறு தீதற-குற்றம் நீங்க; திகிரி-திருவாழி; திகிரியோன் திருமால் ]

என்பது பரிபாடல். இதில் 'இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய வேத முதல்வன் என்ப' என்பதே ஈண்டு வேண்டப் படுவது. 'உலகத்தில் தோன்றியுள்ள எல்லாப் பொருள் களினுள்ளும் (உயிர் உயிரல் பொருள்களாகிய எல்லாப் பொருள்களினுள்ளும்) அந்தர்யாமியாய் நின்று அவ்வெல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே அடக்கியுள்ள (வியாபகமாக வுள்ள) வேதத்தில் உணர்த்தப்பெறும் முதற் பொருள் என்று மெய்யுணர்ந்தோர் கூறுவர்' என்று நம் முன்னோர் கொண்ட கருத்தும், ஆழ்வார் பெருமக்கள் கண்ட கருத்தும் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வழங்கிய கருத்தேயாகும். திருமங்கை மன்னனும் திருநறையூர்[14] பற்றிய திருப்பதிகப் பாசுரம் ஒன்றில்,

பவ்வநீர் உடையாடை ஆகச் சுற்றி
பார்அகலம் திருவடியா பவனம் மெய்யா
செவ்விமா திரம்எட்டும் தோளா அண்டம்
திருமுடியா நின்றான்.[15]

[பௌவநீர்-கடல்நீர்; பார் அகலம்-பூமிப் பரப்பு; பவனம்-வாயு; மெய்-உடல்; மாதிரம்-திக்கு; அண்டம்-அண்டபித்தி ]

என்று அழகாக விளக்கியுள்ளதைக் கண்டு மகிழலாம்.

14 திருநறையூர்: இது நாச்சியார் திருக்கோயில் என்ற திருநாமத்தாலும் வழங்கப்பெறுகின்றது. கும்பகோண இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் 10. கி.மீ. தொலைவில் உள்ளது பேருந்து வசதிகள் உள்ளன. இறைவன்: நறையூர் நின்ற நம்பி, சீநிவாசன். தாயார்: வஞ்சுளவல்லி, நம்பிகை நாச்சியார் நின்ற திருக்கோலம்: கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்.

15. பெரி. திரு. 6.6: 3

உடல், உயிர் இவ்விரண்டினுள்ளும் கலந்து நிற்கும் இறைவனை எந்த வேறுபாடுகளும் அடைவதில்லை என்பதை மேலே குறிப்பிட்டோம். இக்கருத்தினையே ஆழ்வார்,

புலனொடு புலன் அலன் [16]

என்று சுருக்கமாக உரைத்துள்ளதைக் காணலாம். பிறிதோரிடத்தில் இதனையே,

யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயம் தோறும்
தோய்வு இலன்; புலன்ஐந் துக்கும்
சொலப்படான்; உணர்வின் மூர்த்தி;
ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதுமோர் பற்றுஇலாத
பாவனை அதனைக் கூடில்
அவனையும் கூட லாமே.[17]

[யாவையும்-அசேதநப் பொருளாய்; எவரும்-சேதநர்களாய்; சமயம்-நிலை; தோய்வு-கலப்பு; உணர்வின் மூர்த்தி-ஞானம் சொரூபமாக இருப்பவன்; ஆவிசேர் உயிர்-உடம்பினைப் பொருந்திய ஆன்மா; பற்று-சம்பந்தம்; பாவனை-எண்ணம்]

என்று விரிவாகவிளக்கியுள்ளார்அவர். உயர்திணை அஃறிணையாகிய எல்லாப் பொருளுள்ளும் இறைவன் கலந்து நின்று அவற்றின் அவத்தைகள் தன்னைத் தொடராதபடி இருக்கின்றான். உடலிலுள்ள உயிர் அவ்வுடலுக்குரிய வளர்ச்சி தேய்வு நரை திரை முதலிய விகாரங்களை அடைவதில்லை. என்பதை நாம் உணர்வோமாயின், அவ்வுடல் உயிர் இரண்டின் விகாரங்களும் இறைவனை அடைவதில்லை என்பதையும் உணரலாம் என்பது இராமாநுசர் அருளிய விளக்கம் ஆகும்.

16. திருவாய். 1·1: 3
17. திருவாய். 3.4: 10

# 9. ஆதார-ஆதேய சம்பந்தம்

இந்த சம்பந்தம் திருமந்திரத்தின் மூன்றாவது பதமாகிய 'நாராயண' என்பதிலுள்ள 'அயன' என்பதால் தெரிவிக்கப் பெறுகின்றது. ஆதாரமாவது - பரமான்மா தன்னை (சீவான்மா) விட்டு நீங்காமல், என்றும் தன்னையே ஆச்ரயித்து கொண்டிருக்கும் சித்து, அசித்து முதலிய அகிலம் (Universe) அனைத்திற்கும் இடங் கொடுத்து நிலைத்து நிற்கும்படி செய்வதாக அமைந்திருப்பது. ஆதலால் அந்தப் பரமான்மா ஆதாரம் என்று சொல்லப்பெறும். ஆதாரம்-தாங்குவது. ஆதேயமாவது - சீவான்மா தனக்கு ஆதாரமாயிருக்கும் பரமான்மாவைப் பற்றி நிற்பது. ஆதேயம்-தாங்கப் பெறுவது ஆகவே, இந்தச் சம்பந்தம் தாங்குவது-தாங்கப்பெறுவது என்ற உறவாகின்றது. இது திருமந்திரத்தால் பெறப்படும் எட்டாவது சம்பந்தமாகும். ஆழ்வார் பெருமக்களின் பாசுரங்களினால் இந்தச் சம்பந்தம் அறியப்பெறும்.

வளஏழ்உலகும் (1·5) என்ற திருவாய்மொழியில்,

நினைந்த எல்லாப் பொருள்கட்கும்
வித்தாய் முதலில் சிதையாமே
மனஞ்செய் ஞானத்து உன்பெருமை
மாசுணாதோ? மாயோனே. (2)

[ நினைந்த–நினைக்கப் பெற்ற; வித்து ஆய் - மூலமாய்; சிதையாமல் - சொரூப விகாரம் பிறவாதபடி; மாசு- அழுக்கு ]

எல்லாப் பொருள்கட்கும் வித்தாக இருப்பவன் எம்பெருமான் என்பது காட்டப்பெறுகின்றது. அதாவது முதற் காரணமாக (உபாதான காரணமாக) இருப்பவன். ஆடைக்குப் பஞ்சு முதற் காரணம். இங்குப் பஞ்சு சிதைந்து ஆடையாகின்றது. உலகப் படைப்புக்கு எம்பெருமான் முதற்காரணம். படைப் பிற்குப் பிறகு அவன் சிதையாமல் இருப்பது அவனது அற்புத ஆற்றல். ஆடைக்குப் பஞ்சு ஆதாரம். பஞ்சு ஆதாரப் பொருள். அதிலிருந்து தோன்றும் ஆடை ஆதேயப் பொருள்.

திருவாய்மொழியில் 'நெடுமாற்கு அடிமை' (8.10) என்ற திருப்பதிகத்தில்,

தனிமாப் புகழே எஞ்ஞான்றும்
நிற்கும் படியாத தான்தோன்றி
முனிமாப் பிரம முதல்வித்தாய்,
உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வம் (7)

[ தனிமா - ஒப்பில்லாத, சிறந்த; எஞ்ஞான்றும் - காலம் உள்ள அளவும்; நிற்கும்படி-வேதாந்தப் பிரசித்தமாய் நிற்கும் படி; தான் தோன்றி - படைப்புக் கடவுளாக ஆவிர்ப்பவித்து; முனி- (சிருட்டிக்காக) சங்கல்பிக்கும்; முதல் வித்துஆய்-பரம காரணமாய்; முளைப்பித்த- உண்டாக்கின; தனிமாத் தெய்வம் -ஒப்பற்ற பரதேவதை ]

என்பது ஏழாம் பாசுரம். இங்கு எம்பெருமான் சூக்கும சித்து அசித்துக்களுடன் கூடியவன் என்று சொல்லப்படுகின்றது. இத்தகைய எம்பெருமான் சமஷ்டி சிருஷ்டியையும் வியஷ்டி சிருஷ்டியையும் செய்விக்கின்றான். சம்ஷ்டி - தொகுதி. இருபத்து நான்கு தத்துவங்களையும் கலந்து ஈசுவரன் தானாகவும் நான்முகன் மூலமாகவும் இந்த ஒப்பற்ற அண்டத்தைப் படைக்கின்றான். அண்டத்தைப் படைத்து அதற்குள் நான்முகனைப் படைத்தல் சமஷ்டி சிருஷ்டி என்று வழங்கப்பெறும். நான்முகன் மூலமாக இந்த அண்டத்திற்குட் பட்ட பதினான்கு உலகங்களையும் தேவர், மனிதர், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலியவற்றைப் படைத்தல் வியஷ்டி சிருஷ்டி என வழங்கப்பெறும். வியஷ்டி- வேறு வேறு. இந்தப் பாசுரத்தில் 'முனிமாப்பிரம்ம முதல்வித்து' என்பது சங்கல்பிக்கின்ற பரப்பிரம்மம். இதுதான் ஆதாரமாக இருப்பது. இதனால் படைக்கப் பெற்ற அண்டம் முதலானவை ஆதேயமாக இருப்பன. ஆகவே, இப்பாசுரம் ஆதார-ஆதேய உறவை தெரிவிப்பதாக அமைகின்றது. முதலடியில் உள்ள 'தோன்ற' என்பதனால் சமஷ்டி சிருஷ்டியும், இரண்டாவது அடியிலுள்ள 'முளைப்பித்த' என்பதால் வியஷ்டி சிருஷ்டியும் தெரிவிக்கப்பெறுகின்றன.

திருவாய்மொழியில் 'தேவிமார் ஆவார்' (8.1) என்று தொடங்கும் திருவாய்மொழியில்,

> எங்குவந் துறுகோ, என்னையாள் வானே ?
> ஏழுல கங்களும் நீயே;
> அங்கவர்க் கமைத்த தெய்வமும் நீயே ;
> அவற்றவை கருமமும் நீயே ;
> பொங்கிய புறம்பால் பொருளுள வேலும்
> அவையுமோ நீ; இன்னே யானால்,
> மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே ;
> வான்புலன் இறந்ததும் நீயே (6)

[எங்கு வந்து உறுகோ-எங்கு வந்து கிட்டப் பெறுவேன்; அங்கு-அந்த உலகங்களில்; கருமமும்-ஆராதனையாகப் பண்ணும் கருமங்களும்; பொங்கிய-விஞ்சிப் புறப்பட்ட; மங்கிய அருவாம் நோப்பமும் - காரண நிலையில் சுருங்கிக் கிடக்கின்ற சித்து அசித்துகளும்; வான்புலன் இறந்ததும்-அவ்யக்தத்தையும்[1] வியாபிக்கக்கூடியதாய் இந்திரியங்கட்குப் புலப்படும் தன்மை யற்றதான சீவ சமஷ்டியும்]

என்பது ஆறாம் பாசுரம். "என்னை ஆள்கின்றவனே! ஏழு உலகங்களும் நீ இட்ட வழக்கு; அந்தந்த உலகங்களிலே அவ் அவர்கட்குச் சமைத்து வைத்த தெய்வங்களும் நீ இட்ட வழக்கு; அந்தந்த தெய்வங்கட்குச் செய்யப்படுகின்ற ஆராதன ரூபமான காரியங்களும் நீ இட்ட வழக்கு; ஒன்றற்கு ஒன்று விரிந்ததாய் அண்டத்திற்கும் புறம்பாய் அதற்குக் காரணமாய் உள்ள மகத்து முதலான தத்துவங்களும நீ இட்ட வழக்கு; காரணநிலையில் சுருங்கிக் கிடக்கின்ற சித்து அசித்துகளும் நீ இட்ட வழக்கு; பரமாகாசத்தில் இருக்கின்ற கண் முதலிய புலன்கட்கு எட்டாத முக்தர்களும் நீ இட்ட வழக்கு; இங்ஙனம் ஆனால், உன்னை நான் எங்ஙனம் வந்துகிட்டுவேன்?" என்பது இதன் கருத்து.

'மங்கிய அருவாம் நேர்ப்பம்' என்பதற்குப் பத்த ஆன்மாக்களின் தொகுதி என்றும், 'வான் புலன் இறந்தது' என்பதற்கு முக்தாத்மாக்களைச் சொல்லுகிறது என்றும் பிள்ளான் பணிப்பர். அப்போது இல்லாததற்குச் சமமாய் சூக்குமமான ஆன்மாக்களின் தொகுதி என்றும், பரமபதத்தில் கண்களுக்குப் புலப்படாத முக்தாத்ம சொரூபம் என்றும் பொருள்படும் இந்தப் பாசுரத்தால் ஆதாரம் எம்பெருமான் என்றும், ஆதேயம் ஆன்மாக்கள் என்றும் தெளிவாகின்றது.

1. அவ்யக்தம் — விளக்கம் இல்லாதது ; மூலப்பகுதி.

அடுத்த பாசுரம்:

இறந்ததும் நீயே; எதிர்ந்ததும் நீயே;
நிகழ்வதோ நீ இன்னே ஆனால்,
சிறந்தநின் தன்மை அதுஇதுஉது என்று
அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன் (7)

[அது இது உது-தொலைவு, அருகு, நடு நிலைகளிலுள்ள பொருள்களும்; சிறந்த நின்தன்மை-பரம்பரனான நின் தன்மை; அறிவு-சம்பந்த ஞானம்]

என்பது பாசுரம் (7). "சென்ற காலத்தில் இருந்தவர்களும், இனி வருங்காலத்தில் இப்பவர்களும், இப்பொழுது உள்ளவர்களும் ஆகிய எல்லாரும் நீ இட்ட வழக்கு. அப்படி இருந்தால் தொலைவிலுள்ள பொருள்களும், அண்மையில் உள்ள பொருள்களும் ஆகிய எல்லாம் பரம்பரனான உன்னுடைய தன்மைகளாகும். உடலுக்கு உண்டான துக்கம் ஆன்மாவுக்கு ஆனாற்போன்று, எல்லாருடைய துக்கங்களும் சரீரியான உன்னது என்னும் சம்பந்த ஞானம் ஒன்றையுமே அன்றோ நான் உய்வதற்குக் காரணமாக நினைத்திருப்பது? பாவியாகிய அடியேன் அந்தச் சம்பந்த ஞானம் ஒன்றிலும் ஐயம் கொள்ளாநின்றேன்?" இதிலும் ஆதார-ஆதேய உறவு தெளிவாகின்றது. "அனைத்தும் நீ அனைத்துப் பொருளும் நீ" என்ற பரிபாடல்[2] அடியும் இந்த உறவை வலியுறுத்தும்.

உலகப் பொருள்கள் போலன்றி இறைவன் தன் நிலையில் சிறிதும் சிதைவின்றி இருந்து கொண்டே எல்லாப் பொருள்கட்குப் வித்தாக உள்ளான் என்ற கருத்தையே பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்,

சின்னூல் பலபலவாயால் இழைத்துச்
சிலம்பி பின்னும்
அந்நூல் அருந்தி விடுவதுபோல்
அரங்கன் அண்டம்

2. பரிபா-3; அடி 68

பன்னூறு கோடி படைத்து அவை
யாவும் பழம்படியே
மன்னூழி தன்னில் விழுங்குவர்போத
மனம் மகிழ்ந்தே.[3]

என்ற மிக அழகான உவமை கலந்த பாடலால் விளக்குவர். ஒரு சிறு சிலந்திப்பூச்சி தன்னிடத்திலிருந்து நூலை உண்டாக்கிப் பின் அதனை விழுங்குகின்றது. நூல் உண்டாவதற்கு முதற்காரணமாகவுள்ள அப்பூச்சி தன் நிலையில் அழிவதில்லை. சிலந்திக்கு இச்செயல் கூடுமேல் தன் நிலையில் சிதைவின்றித் தான் உலகிற்கு முதற் காரணமாதல் எல்லாம் வல்ல இறைவனுக்கு அறிதாகுமா ?

ஒருசிலந்திக் குண்டான
ஸ்வபாவம் சர்வ சக்திக்குக்
கூடா தொழியாதிறே.[4]

என்ற தத்துவத்திரய வாக்கியமும் ஈண்டு நோக்கி உன்னற்பாலதாகும்.

திருமழிசைபிரான் நான்முகன் திருவந்தாதியில்,

— நன்றாக
நான்உன்னை யன்றியிலேன்
கண்டாய் நாரணனே!
நீஎன்னை அன்றி இலை. (7)

என்பது ஏழாம் பாசுரம். இதில் ''உன்னையொழிய எனக்குச் செல்லாது; என்னையொழிய எனக்குச் செல்லாது'' என்னும் படியான உறவை உணர்ந்து எல்லாக் காலமும் உன்னுடைய திருவருளுக்குப் பரிபூர்ண பாத்திரராய் இருக்கப் பெற்ற என்னுடைய ஏற்றம் அறியாயோ?'' என்கின்றார்.

3. திருவரங்க மாலை—18
4. தத்து-ஈசுவரப்-29

" 'தம்முடைய அருளை யாரிடத்துப் பயன்படுத்தலாம்!' என்று நீ தயை பெற உரியாரைத் தேடிக் கொண்டிருக்கின்றாய். 'தமக்கு எம்பெருமான் அருள்புரிவானோ?' என்று நான் உன் தயையைத் தேடிக் கொண்டிருக்கின்றேன்' என்கின்றார். ஆகவே, 'நின்னருள் என்பாலதே' யாகும். 'நீ எனக்கு ஆதாரம்; நான் உனக்கு ஆதேயம்' — இது தானே உண்மை?" என்கின்றார் ஆழ்வார்.

இந்த அடிகட்கு வேறு விதமாகவும் பொருள் கொள்ளலாம். நாராயணனே! உன்னை அறுதியிட வேண்டுமாயின் என்னை அறுதியிட வேண்டும்; என்னை அறுதியிட வேண்டுமாயின் உன்னைக் கொண்டு அறுதியிட வேண்டும்' என்கின்றார். அதாவது 'நாராயணன்' என்றால் நாரங்களுக்கு அயனம் என்றபடி; நாரபதார்த்தங்களில் தாம் சேர்ந்தவராகையாலே தம்மைக் கொண்டு நாராயணனை அறுதியிட வேண்டியதாகின்றது. நம்மை அறுதியிட வேண்டுமானால் இறைவனைச் சேர்ந்தவன் (ஆதேயம்) என்று அறுதியிட வேண்டியிருப்பதனால் நாராயணனைக் கொண்டு தம்மை அறுதியிட வேண்டியதாகின்றது. இவற்றால் ஆதார-ஆதேய உறவு தெளிவாகின்றது.

குலசேகரப்பெருமாளின் விற்றுவக் கோட்டம்மான் திருப்பதிகத்தில். (5)

வெங்கண்திண் களிறுஅடர்த்தாய்!
    விற்றுவக்கோட் டம்மானே!
எங்குப்போய் உய்கேன்,
    உன்இணையடியே அடையல்அல்லால்
எங்கும்போய்க் கரைகாணாது
    எறிகடல்வாய் மீண்டுஏயும்
வங்கத்தின் கூம்புஏறும்
    மாப்பறவை போன்றேனே. (5)

[ வெம்கண் - பயங்கரமான கண்களையுடைய; திண் களிறு - வலிய யானை; அடர்த்தாய் - கொன்றவனே; அடையல் - சரண் அடைதல்; அல்லால் - அல்லாமல்; உய்வேன் - பிழைப்பேன்; எறி - அலை எறிகின்ற; எங்கும் - நான்கு திக்கிலும்; மீண்டு - திரும்பி வந்து; வங்கம் - மரக்கலம்; கூம்பு - பாய்மரம்; மாபறவை - பெரிய பட்சி ]

மாக்கடலில் ஒரு கப்பல் புறப்படுகின்றது. அக்கப்பலின் பாய்மரத்தின்மீது ஒரு பறவை உள்ளது. கப்பல் நடுக் கடலுக்குச் சென்றவுடன் பறவை பறக்கத் தொடங்குகின்றது. நிலத்தினின்றும் கப்பல் மிகச் சேய்மையில்வந்து விட்டமையால் பறவையால் மீண்டும் நிலத்திற்குச் செல்ல முடியவில்லை. கடலிலோ பறவை சென்று தங்குவதற்கு ஏற்ற இடமும் இல்லை. ஆகவே, பறவை மீண்டும் கப்பலின் பாய்மரத்திற்கே வந்து சேர்கின்றது. வாழ்க்கையாகிய கடலில் உள்ள நாமும் இறைவனாகிய கப்பலின் பாய்மரத்தின்மீதுள்ள பறவையின் நிலையில்தானே உள்ளோம்? எப்படி எப்படிப் பறந்தாலும் இறுதியில் இறைவனைத் தானே வந்தடைதல் வேண்டும் மரக்கலத்தின் நிலையில் எம்பெருமானையும் (ஆதாரம் பறவையின் நிலையில் நம்மையும் (ஆதேயம்) கூறியதனால் சீவான்மாவுக்குப் பரமான்மாவேயின்றி வேறு புகல் அமையாது என்பதும், பரமான்மா சீவான்மாவுக்கு ஆதாரம் மாதலும், சீவான்மா பரமான்மாவுக்கு ஆதேயம் ஆதலும் தெளிவாகின்றன. ஆதார - ஆதேய உறவு இதனால் விளக்கப் பெற்றது.

# 10. போக்தா-போக்கிய சம்பந்தம்

திருமந்திரத்தால் பெறப்படும் ஒன்பதாவது சம்பந்தம் இது 'நாராயணாய' என்பதிலுள்ள 'ஆய' பதந்தால் 'போக்தா-போக்கிய' என்ற இந்த சம்பந்தம் அமைகின்றது. போக்கியப் பொருளை எவன் ஒருவன் தன் விருப்பப்படி அநுபவிக்கின்றானோ அவன் போக்தா. அநுபவிக்கும் பொருள் போக்கியம் ஆகின்றது. ஈண்டு ஈசுவரன் போகத்தை அநுபவிப்பவன்; ஆன்மா ஈசுவரனுக்கு போகப் பொருளாய் இருக்கிறது ஆகவே இது போக்தா-போக்கிய உறவாகினறது. ''ஈசுவர இலாபம் சேதநனுக்குக் குறிக்கோளா? சேதந இலாபம் ஈசுவரனுக்குக் குறிக்கோளா?'' என்ற ஆராய்ச்சி வைணவ பக்தர்களிடையே நடைபெறுவது உண்டு. சேதந இதாபந்தான் ஈசுவரனுக்குக் குறிக்கோள் என்பதுவே 'வைணவ சித்தாந்தம். எம்பெருமான் தன் படைப்பினாலும் அவதாரங் களினாலும் ஆன்மப் பயிர்த் தொழில் கிடைப்பதெல்லாம் ஓர் ஆருயிர் தனக்குக் கிடைக்கும் என்ற நப்பாசையினாலன்றோ? ''எல்லாம் வாசுதேவன்'' என்ற திருவுள்ளம் கொண்டுள்ள ஒரு மகாத்மா எனக்குக் கிடைக்கவில்லையே'' என்றன்றோ

சொல்லுகின்றான் கண்ணன்? பாடு பட்டுத் தேடிப் பார்த்தும் கிடைக்காததனால் வருத்தத்துடன் வெளிப்படுத்தும் கூற்று இது என்று நாம் அறிகின்றோம்.

'எம்மா வீடு' (2.9) என்ற திருவாய்மொழியில்,

தனக்கே யாக
 எனைக்கொள்ளும் ஈதே;
எனக்கே கண்ணனை
 யான்கொள் சிறப்பே (4)

[ ஆக-உரியதாக; ஈதே-இதுவே; யான்கொள்-யான் விரும்புகின்ற; சிறப்பு-சிறந்த பயன்]

என்பது நான்காம் பாசுரம். இது புருஷார்த்தம் நிர்ணயம் செய்யும் திருவாய்மொழியாகும். இத்திருவாய்மொழிக்கு உயிரான பாசுரம் இது. எல்லாப்படியாலும் அத்தலைக்கே (இறைவனுக்கே) உரித்தாயிருக்கின்ற அத்தியந்த பார தந்திரியத்தைப்[1] பயனாக அறுதியிடுகின்றார் ஆழ்வார். இவர் இதில் அறுதியிட்ட பிராப்யமாவது (அடையத்தக்கதாவது) மலர் மாலை சந்தனம் முதலியவைகளைப்போன்று 'தனக்கே யாக எனைக் கொள்ளும் ஈதே' என்பதேயன்றோ? மயர்வற மதிநலம் அருளைப் பெற்றவர்கள் 'தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே' என்று பிராத்திப்பானேன்? 'இறைவன்

1. அத்தியந்த பாரதந்திரியம் என்பது பிரபந்நருடைய பார தந்திரியம்; சரீரம் சீவன் என்னும் இருவகைப் பொருள்களுள் சரீரத்தின் குற்றங்களை (தோஷங்களை)ப் போக்கி அதற்கு நன்மைகளைத் தேடுகிறவன் சீவனே ஆகின்றான். அது போல பரமான்மா, அவன் சரீரமாகிய சீவான்மா ஆகிய இரு பொருள் களுள் சீவான்மாவின் குற்றங்களைப் போக்கி நன்மைகளைத் தேடுகிறவன் பரமான்மாவேயாவான். ஆதலின், சீவன் எல்லாப் பாரத்தையும் அவனிடமே வைத்து அவனுடைய அருளைப் பார்த்திருத்தலே இவனுடைய அத்தியந்த பார தந்திரியமாகும் இந்நிலை வானத்தையே நோக்கி நிற்கும் சாதகப் பறவையின் நிலையெனக் கொள்ளலாம்.

திருவுள்ளமாம்படி செய்கிறான் என்றிருப்பதல்லவா அழகியது?' என்று பிள்ளை திருநறையூர் அரையர் எம்பாரைக் கேட்க, அதற்கு அவர் அருளிச் செய்த மறுமொழி: "நீர் கேட்பது வாஸ்தவம்தான்; பிராப்பியருசி இங்ஙனே பிரார்த்திக்கப் பண்ணுகிறது?" என்று, எம்பெருமானுடைய திருமார்பிலே இடைவிடாது எழுந்தருளியிருக்கின்ற பிராட்டி வாளா இருக்கலாமே; அப்படியிராமல் 'அகலகில்லேன் இறையும், அகலகில்லேன் இறையும்' என்று வாய்க்கொரு முறை சொல்லிக் கொண்டிருக்கின்றாளே, அஃது ஏன்? அது விஷய ஸ்வாபவம் படுத்துகிற பாடு என்னில்; இது பிராப்பிய ருசி படுத்துகிறபாடு என்று கொள்வீர்" என்று அருளிச் செய்தார்.

எம்பெருமான் தன் உள்ளத்தில் வீற்றிருந்த பெருமையை,

சிறியே னுடைச் சிந்தை
யுள்மூ உலகும்தம்
நெறியா வயிற்றிற் கொண்டு
நின்றொழிந் தாரே.[3]

[சிறியேன் - தாழ்ந்தவன்; சிந்தை - நெஞ்சு; நின்று ஒழிந்தார்-நின்று விட்டார் ]

என்று இறைவன் பாரித்து முறைகெடப் பரிமாறின பரிமாற்றத்தை அநுபவித்தவரன்றோ ஆழ்வார்?

எம்பெருமான் தம்முடன் கலந்து பரிமாறின பரிமாற்றத்தை திருக்காட்கரைத்[4] திருவாய்மொழியில் வெளியிடுகின்றார். நீண்ட நாட்களாகவே இறைவனுக்கு

3. திருவாய். 8.7:3
4. திருக்காட்கரை: எர்ணா குளத்திலிருந்து வடகிழக்குத் திசையில் சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு. எந்த வசதிகளும் இல்லாத திருத்தலம். திருத்தலப் பயணிகள் தங்குவதற்கும் எர்ணாகுளத்தையே நம்பவேண்டும்.

'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும்''[5] என்பதையே திருவருள் செய்கையாகத் திருவுள்ளம்பற்றியிருந்தார். ஆழ்வார் அதனையே பற்றா சாகக் கொண்டு தன்னுடைய சீலம் முதலிய குணங்களால் ஆழ்வாரின் நெஞ்சத்தை வஞ்சித்துப் புகுந்து அவரை ஆட் கொள்ளுகின்றான் இறைவன். இதனை ஆழ்வார்,

நீர்மையால் நெஞ்சம்
வஞ்சித்துப் புகுந்து என்னை
ஈர்மைசெய்(து) என்னுயி
ராய்என் உயிர்உண்டான்.

[ நீர்மை - சீல குணம்; வஞ்சித்து - ஒன்றைச் சொல்லி மற்றொன்றைச் செய்து; ஈர்மை செய்து - இரு பிள வாக்கி; என் உயிராய்-எனக்குத் தாரகமாயிருப்பவன் ]

என்று கூறுவர். 'வஞ்சித்து நெஞ்சம் புகுந்து என்னை நீர்மை யால் ஈர்மை செய்து' என்று கொண்டு கூட்டி பொருள் கொண்டால் சுவை பயக்கும். 'தான் ஆண்டானும் நான் அடி மையுமான முறை தவறாது பரிமாறுவதாகவே சொல்லி என் நெஞ்சை இசையப் பண்ணி உள் புகுந்தான்' என்கின்றார் ஆழ்வார். 'தான் அடிமை நான் ஆண்டான்' என்று முறை கேடாகப் பரிமாறப் போவதாக முன்னமேயே தெரிவித்து விட்டால் ஒருக்கால் ஆழ்வார் இசையாது போயினும் போவார் என்று கருதியே இங்ஙனம் வஞ்சித்து உள் புகுந்தான் போலும்! இங்ஙனம் புகுந்தவனுடைய கள்வத்தைத் தன்னால் அறியக்கூட வில்லையே என்கின்றார் ஆழ்வார்.

இங்ஙனம் புகுந்த பிறகு தன் நீர்மையைக் காட்டத் தொடங்குகின்றான். தான்தாழ நின்று பரிமாறவும் தொடங்கு

5 திருவாய். 3.3:1
6.டி. 9.6:4

கின்றான். அதனால் ஆழ்வாரின் நெஞ்சை ஈடுபடுத்து கின்றான். இங்ஙனம் ஈடுபடுத்தியவன் அவரை அடிமை கொள்பவன் போலே அவருள் புகுந்து அவருடைய உடலையும் உயிரையும் ஒருசேரப் புசித்து விடுகின்றான்.

திருவருள் செய்பவன்
போலஎன் உள்புகுந்து
உருவமும் ஆருயிரும்
உடனே உண்டான்[7]

[ உள் புகுந்து - வழுவிலா அடிமை செய்யப் பாரித்த என் பக்கலிலே புகுந்து; உருவம்-உடல்; உடனே-ஒருசேர ]

துயர் அறு சுடர் அடி தொழுது எழுகைக்கு மயர்வற மதி நலம் அருளுவாரைப் போலப் புகுந்தான் என்பது குறிப்பு. ஆயினும், ஆழ்வார் திறத்தில் 'திருஅருளை' இறைவனே பெற்றவன் ஆயினன். முதலில் திருவிருத்தம் முதற் பாசுரத்தில் 'அழுக்குடம்பு' என்று தாம் வெறுத்ததை அவன் விரும்பிப் புகுந்தான். இங்கே இன் சுவைமிக்க நம்பிள்ளை ஈடு வியக்கத் தக்கது. "அவன் அங்கீகாரத்திற்கு முன்பு இவர் சரீரத்தையே விரும்பிப் போந்தார். அவன் இவரை அங்கீ கரித்த பின்பு இவர் தம் சரீரத்தை வெறுக்க அவன் இவருடைய சரீரத்தை விரும்பிப் புக்கான். இவருக்கு அவனுடைய சேர்க்கை சொரூப ஞானத்திற்கு உடல் ஆயிற்று; அவனுக்கு இவருடைய சேர்க்கை உடலை உயிராகவிரும்புவதற்கு உடல் ஆயிற்று[8]". இறைவனுடைய இத்திட்டத்தை,

7. திருவாய் 9.6:5

8. ஈட்டின் தமிழாக்கம் - பகுதி 9 திருவாய் 9.6:5 இன் உரை காண்க.

அறிகிலேன் தன்னுள்

..................................

சிறியஎன் ஆருயிர்
உண்ட திருவருளே.[9]

என்ற பாசுரத்தின் ஈட்டில் "பகைவர்களை அம்பாலேஅழிக்கும்! அடியார்களை குணத்தாலே அழிக்கும் ......... அம்புப்பட்ட புண்ணை மருந்திட்டு ஆற்றலாம். குணத்தால் வந்த புண்ணுக்கு மாற்று இல்லை '' என்ற உரைப்பகுதி சிந்தித்து அநுபவிக்கத் தக்கது.

இவ்விடத்தில் முமுட்சுப்படியின்,

" அதாவது போகதிசையில் ஈசுவரன் அழிக்கும்போது நோக்க வேணும் என்று அழியாதொழிகை''[10]

என்ற மகா வாக்கியத்தின் கருத்தும் சிந்திக்கற்பாலது. அஃதாவது, ஈசுவரன், சீவனாகிய தன்னோடு கலந்து பரிமாறும்போது அவன், தன் மாட்டுக் கொண்டுள்ள பிரேமப் பித்தினால் தாழ நின்று பரிமாறி, தன்னுடைய சேஷத் துவத்தை அழிக்குங்கால், " நம் சேஷத்துவத்தை நோக்கிக் கொள்ள வேண்டும் '' என நினைத்துச் சீவனாகிய தான் பின் வாங்கி அவன் போகத்தைக் கெடுக்காமலிருக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இதுதான் பகவானுக்கே ஆனந்தம் ஏற்படுமாறு வினியோகிக்கப்படுகை எனச்சொல்லப் படுவது.

ஈசுவரன் சேதநனை (உயிரை) வினியோகம் செய்து கொள்ளல் இரண்டு வகைப்படும். இவற்றுள் அவன் தலைவனாகவே இருந்து உயிரை அடிமையாக வைத்துப் பரிமாறுதல் ஒருவகை. சேதநன் இறைவனுக்கு செய்யும் கைங்கரியம் எல்லாம் இதன்பாற்படும். சில சமயம் அவன் உயிருடன் கலந்து போகம் துய்க்கக் கருதுவான். அவ்வமயம்

9. திருவாய் 9.6:4
10. முமுட்சு-92

ஈசுவரன் உயிரை அடிமை கொள்பவன் போன்று, உயிரை நெருங்கி, அதன்மாட்டுத் தனக்குள்ள வேட்கை மிகுதியால் உயிரைத் தலைமையாக வைத்துத் தான் அடிமையாக இருந்து, இழிதொழில் செய்து, அவ்விதத்தில் உயிரை வினியோகம் கொள்ளுதல் மற்றொரு வகை. ஈண்டுக் கூறிய இரண்டாவது வகை, அநுபவத்திற்குக் குசேலரின் வாழ்க்கை வரலாற்றின் நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக் கொள்ளலாம். குசேலர் தம் துணைவியின் தூண்டுதலால் கண்ணனிடம் செல்லுகின்றார். குசேலரின் வருகையைக் காவலரால் அறிந்த துவரைநாதன் தானே அரியணையினின்றும் இறங்கி வந்து,

> திலகமண் தோய ஐயன்
> திருவடி வணங்கிப் பின்னர்
> நிலவுமெய்ப் புளகம் போர்த்து
> நிறம்புறத் தழுவிக் கொண்டான்[11].

என்றவாறு குசேலரின் திருவடிகளில் வணங்குகின்றான். பின்பு அவரைத் தன்னுடன் அழைத்துச் சென்று அவருடைய திருவடிகளைத் தன் மடிமீது வைத்து, "இத்திருவடிகள் நீண்ட தொலைவு நடந்து நொந்தனவே!" என்று பகர்ந்து கொண்டே அவற்றை மெல்லெனப் பிடிக்கின்றான். குசேலர் கண்ணன் செய்யும் உபசாரங்களுக்குத் தன் பாரதந்திரியத்திற் கேற்ப (தலைவனது வசத்திற்கேற்ப) இசைந்திருக்கின்றார். இதனை,

> "வழிநடந் திளைத்த வேஇம்
> மலரடி இரண்டும்?" என்று
> கழிமகிழ் சிறப்ப மெல்ல
> வருடினான் கமலக் கண்ணன்;

11. குசேலோபாக்கியானம் — குசேலர் நகர்ப்புறம் அடைந்தது—104

பழியில்பல் உபசா ரங்கள்
பண்ணவும் தெரியா னாகி
ஒழிவுறு தவக்கு சேலன்
ஒன்றும்பே சாதி ருந்தான்.[12]

என்ற பாடலில் காணலாம். தம்மை அடிமை கொள்பவனைப் போன்று தம்மிடம் கிட்டித் தாழ நின்றுத் தம் ஆன்மாவை முற்றும் கவர்ந்து கொண்ட ஆச்சரியமான சேஷ்டிதங்களை (செயல்களை) யுடையவன் ஈசுவரன் என்பதை ஆழ்வாரும்,

ஆட்கொள்வான் ஒத்துஎன்
உயிர்உண்ட மாயன்.[13]

எனத் தெரிவிக்கின்றார். இதனால் ஈசுவரன் உயிரைத் தனக் கெனவே வினியோகம் கொண்டுள்ளான் என்பதை அறிகின்றோம்.

எம்பெருமானை அநுபவிக்கும் ஆழ்வாருக்கு "எப்பொழுது நாள் திங்கள் ஆண்டு ஊழிதோறும் அப்போதைக்கு அப் பொழுது என் ஆரா அமுதமே"[14] என்னும்படி நாள்தோறும் அரிதாகத் தோன்றுமாப் போலே, எம்பெருமானுக்கும் ஆழ்வா ருடைய அநுபவம் நாள்தோறும் அரிதாகவே தோன்று கின்றது. எனவே அவன்,

கோளுண்டான் அன்றிவந்து
என்னுயிர் தானுண்டான்
நாளும்நாள் வந்தென்னை
முற்றவும் தானுண்டான்.[15]

ஒருநாள் அநுபவித்து "இனி இது நாம் அநுபவித்தது அன்றோ?" என்று கைவாங்கியிராமல் நாள்தோறும் வந்து ஆழ்வாரை அப்பொழுதைக்கு அப்பொழுது ஆரா அமுதமாக அநுபவித்தான். இங்கே நம்பிள்ளை, "அணுப்பரிமாண மான

12-டை- 110
13. திருவாய். 9.6:7
14. டை. 2.5:4
15. டை. 9.6:8

இவ்வஸ்துவை விபுவான தான் விளாக்குலை கொண்டு[16] அநுபவித்தானென்கின்ற இது தனக்கு ஏற்றமாம்படி கௌரவி யாநின்றான்'' என்று அருளிச் செய்திருப்பது சிந்திக்கத் தக்கது. ஆழ்வாருடைய ஆன்மா அணுவளவாக இருப்பினும், அளவு கடந்த பாரிப்புக் கொண்ட எம்பெருமான் அநுபவிக்கு மிடத்து அந்த அணு அளவுப் பொருளையும் பெரிதாக்கிக் கொண்டு அநுபவிக்கின்றான் என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம் என்பது இதன் கருத்தாகும். இத்தனைக்கும் காரணம்,

காளநீர் மேகத்தென்
  காட்கரை என் அப்பற்கு
ஆளன்றே பட்டிதுஎன்
  ஆருயிர் பட்டது.[17]

[ ஆள்பட்டது-அடிமைப்பட்டது ]

என்பதேயாகும். இங்ஙனம் தன் உயிர் பட்டபாட்டை வேறு எவரும் பட்டிருக்க முடியாது என்பதை,

ஆருயிர் பட்டது
  எனதுயிர் பட்டது[18]

என்று குறிப்பிடுகின்றார் ஆழ்வார். பகவானுடைய குணங் களுக்கு நிலம் அல்லாததாக இருக்கும் லீலாவிபூதியில் (இந்த உலகில்) தான் பட்டபாட்டினை நித்திய விபூதியில் (பரம பதத்தில்) உள்ள நித்திய சூரிகளும் பட்டிருக்க முடியாது என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்.

இதுகாறும் இறைவன் தன்னை உண்டபடியைக் கூறினார் ஆழ்வார். உண்டவனுக்குத் தண்ணீரும் வேண்டுமன்றோ?

---

16. விளாக்குலை கொள்ளல் - குலை குலையாகப் பறித்து வாய்க்கொள்ளுதல் (ஒரே கவளமாக உண்ணுதல்என்றபடி)
17. திருவாய் 9.6:8    18. ஷை-9.6:9

ஆகையால் இறைவன் தண்ணீர் பருகின படியையும் அருளிச் செய்கின்றார் அவர்.

வாரிக் கொண்டு உன்னை
விழுங்குவன் காணில் என்று
ஆர்வுற்ற என்னை
யொழிய என் னில்முன்னம்
பாரித்து, தான் என்னை
முற்றப் பருகினான்;
கார்ஒக்கும் காட்கரை
அப்பன் கடியனே.[19]

[ ஆர்வு - ஆசை; பாரித்து - எண்ணி; கடியன் - பதற்ற முடையவன் ]

இறைவனைக் கண்டால் அப்படியே விழுங்கி விடுவதாக ஆசைப்பட்டிருந்தார் ஆழ்வார்; ஆனால் இப்படிச் செய்ய வேண்டுமென்று தமக்கு முன்பே இறைவன் எண்ணித் தன்னை அடியோடு பருகிவிட்டான்—குளிர்பானம் பருகுவதைப் போல். ஆழ்வாருக்கு இறைவன் ''உண்ணும் சோறு பருகும் நீர்''[20] என்னலாம்படி இருந்தான். அங்ஙனமே இறைவனுக்கு ஆழ்வார் ''உண்ணும் சோறு பருகும் நீர்'' என்று ஆகி விட்டார். திருவாய்மொழி ஆயிரத்திலும் இப்பாசுரம் உயிரானது என்பது வைணவர்களின் திருவுள்ளம். இங்கு இறைவன் போகத்தை அநுபவிப்பனாகவும் ஆழ்வார் போகப் பொருளாகவும் ஆகிவிடுவதைக் காண்கின்றோம்.

உயிரைத் தலைமையாக வைத்து தான் அடிமையாக இழிதொழில் செய்து உயிரை வினியோகம் கொள்வதற்குக் கிருட்டிணாவதார நிகழ்ச்சிகள் சான்றுகளாக அமையும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் அழகிய மண வாளப் பெருமாள் நாயனார்,

19. திருவாய். 9-6: 10
20-திருவாய். 6.7:1

மகா பாரதத்தால் தூதுபோனவன்
ஏற்றம் சொல்லுகிறது.[21]

என்று கூறுவார். தேவதேவனான தன்னுடைய பெருமையையும், தான் மேற்கொள்ளும் தாழ்வையும் பாராமல் கழுத்திலே ஓலை கட்டித் தூது போனதும், தேரோட்டியதும் போன்ற செயல்கள் எல்லாம் எம்பெருமான் அடியார்க்குப் பரதந்திரனாய் இருக்கும் தன்மையில் உள்ள "ருசிக்கு" வசப்பட்டிருந்தமையால்தான் என்று கூறுவர் ஆசாரியப் பெருமக்கள்.

எத்திறம் உரலினோடு இணைந்திருந்து
ஏங்கிய எளிவே[22]

என்று உரலினோடு இணைந்திருந்த கண்ணனின் நிலையை நினைந்து பார்த்த நம்மாழ்வார் மூவாறு மாதம் மோகித்துக் கிடந்ததுபோல் தூது சென்ற செயலை எண்ணினால் நம்மையும் அந்த நினைப்பு அவ்வாறு செய்துவிடும்.

பாரதியாரின் 'கண்ணன்—என்சேவகன்' என்ற பாடல் கண்ணனின் இந்த எளிமைக் குணத்தையும் அவன் செய்த 'இழிசெயல்களையும்' எடுத்து காட்டுவதாக அமைகின்றது. ஒரு சில பகுதிகளை எடுத்துக் காட்டுவேன். கண்ணன் தன்னைப்பற்றிச் சொல்லிக் கொள்வது :

மாடுகன்று மேய்த்திடுவேன்
மக்களைநான் காத்திடுவேன்
கண்ணை இமைஇரண்டும்
காப்பதுபோல், என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான்
வாய்முணுத்தல் கண்டறியேன் ;

21. ஸ்ரீவச.பூஷ.—6 (புருடோத்தம நாயுடு பதிப்பு)
22. திருவாய். 1.3:1

வீதி பெருக்குகின்றான் ;
    வீடுசுத்த மாக்குகின்றான் ;
தாதியர்செய் குற்றமெல்லாம்
    தட்டியடக்கு கின்றான் ;
மக்களுக்கு வாத்தி
    வளர்ப்புத்தாய், வைத்தியனாய்
ஒக்கநயங் காட்டுகின்றான் ;
    ஒன்றும் குறைவின்றிப்
பண்டமெலாம் சேர்த்து வைத்துப்
    பால்வாங்கி மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போல்
    பிரியமுற ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய்
    நல்லா சிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப்
    பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான்
    இடைச்சாதி என்று சொன்னான்

ஆச்சரியமான தொண்டுகள். இவை அடியார்க்கு அடியவனாக இவன் ஆற்றிய பணிகளை மேலும் கூறுவார்:

இங்கிவனை யான்பெறவே
    என்னதவம் செய்துவிட்டேன் ;
கண்ணன் எனதகத்தே
    கால்வைத்த நாள்முதலாய்
வீடு பெருக்கி
    விளக்கேற்றி வைத்திடுவேன் ;
சொன்னபடி கேட்பேன்
    துணிமணிகள் காத்திடுவேன்;
சின்னக் குழந்தைக்குச்
    சிங்காரப் பாட்டிசைத்தே

ஆட்டங்கள் காட்டி
அழாதபடி பார்த்திடுவேன் ;
காட்டுவழி யானாலும்
கள்ளர்பய மானாலும்
இரவிற் பகலிலே
எந்நேர மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை
தேவரீர் தம்முடனே
சுற்றுவேன் தங்களுக்கோர்
துன்பமுறாமற் காப்பேன்

இப்பகுதியால் கண்ணனின் எளிமைப் பண்பு தெளிவாவதுடன் எப்படித் தாழ நின்று சீவான்மாவுக்கு அடியவனாக அமைந்து அவனை அநுபவிக்கத் தயாராக உள்ளான் என்பதையும் தெளிவாக்குகின்றது.

கவிஞர் தமக்குக் கண்ணன் செய்த தொண்டினை இவ்வாறு உணர்ந்து கூறுவார்.

எண்ணம் விசாரம்
எதுவும் அவன்பொறுப்பாய்ச்
செல்வம் இளமாண்பு,
சீர், சிறப்பு, நற்கீர்த்தி
கல்வி, அறிவு,
கவிதை சிவலோகம்
தெளிவே வடிவாம்
சிவஞானம், என்றும்
ஒளிசேர் நலமனைத்தும்
ஓங்கிவரு கின்றனகாண்!
கண்ணனைநான் ஆட்சி கொண்டேன்
கண்கொண்டேன் கண்கொண்டேன்
கண்ணனை யாட்கொள்ளக்
காரணமும் உள்ளனவே!

என்று முழு மனநிறைவுடன் - எக்களிப்புடன்-பேசுகின்றார் இவ்விடத்தில்,

> கண்ணனை நான் ஆட்சி கொண்டேன்
> ... ... ... ... ... ... ... ...
> கண்ணனை யாட் கொள்ளக்
> காரணமும் உள்ளனவே

என்ற அடிகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. மேலே குறிப்பிட்ட முமுட்சுப்படியின் வாசகத்தை நினைவு கூர்கின்றோம்.

இந்த போக்தா-போக்கிய உறவைக் குலசேகரப் பெருமாள் ஒரு பாசுரத்தில் அருளிச் செய்கின்றார்.

> நின்னையே தான்வேண்டி,
> நீள்செல்வம் வேண்டாதான்
> தன்னையே தான்வேண்டும்
> செல்வம்போல் மாயத்தால்
> பின்னையே சேர்திகிரி
> விற்றுவக் கோட் டம்மானே!
> நின்னையே தான்வேண்டி
> நிற்பன் அடியேனே (5:9)

[ நீள்செல்வம்-மிக்க சம்பத்து; தான் வேண்டும்-தானாக வந்து சேர விரும்புகின்ற; செல்வம்-ஐசுவரியம்; மாயத்தால்-மாயையினால் வேண்டி நிற்பேன்-அடைய விரும்புவேன்]

என்பது ஒன்பதாம் பாசுரம். எவன் ஒருவன் எம்பெருமானிடத்தில் அன்பைச் செலுத்தி அதனால் ஐசுவரியத்தை வேண்டா என்று வெறுக்கின்றானோ, அவன் வெறுக்க வெறுக்க அவனது நல்வினைப் பயனால் அச்செல்வம் அவனை விடாது விரும்பி வலியத் தொடர்ந்து சேர்தல் இயல்பு. [விரும்புகின்றவனுக்குக் கிடையா தொழிதலும், விரும்பாதிருப்

பவனுக்கு வலுவிலே கிடைத்தலும் இறைவனது சங்கல்பம் என்பது ஈண்டு அறியத்தக்கது.] அதுபோலவே 'நீ உன் உடைமையாகிய என்னை விரும்பாதிருக்க விரும்பாதிருக்க, நான் உன்னையே விடாது நிற்பேன்' என்பது கருத்து. 'நின்னையே தான் வேண்டி' என்று இரு முறை வந்திருப்பது 'வாரிக் கொண்டு உன்னை விழுங்குவன் காணில்' (திருவாய். 9,6:10) என்ற விடத்து நம்மாழ்வார் போக்தாவாக ஆசைப் பட்டபடியே இவரும் அவ்வாறே ஆசைப்படுவதைக் காட்டு கின்றது. இதனால் சீவான்மா பரமான்மாவின் உடைமை யாதலால் அவன் தன் பொருளை எப்படி விரும்பினாலும் அநுபவிக்கலாம் என்பதை உணர்த்துகின்றது.

செல்வத்துக்கு உரிய இடத்தில் எம்பெருமானையும், செல்வத்தின் இடத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால், சீவான்மா பரமான்மாவின் உடைமை என்பது புலப்படும். உடையவன் உடைமை என்ற உறவும் புலப்படுவதாக உரைப்பர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள்,[23]

ஆக, இந்த நவவித சம்பந்த ஞானத்தால் எல்லாவித ஐயங்களும் அற்றநிலை ஏற்படுவதால் ஆன்மா ஆனந்த சுபாவ நிலையை அடையும். அடையவே, பரமான்மா சொரூப நிலையில் ஆழங்கால்பட்டு எம்பெருமான் திருவடி நீழலை அடைந்து உய்யும்.

23. பெரு. திரு. திவ்வியார்த்த தீபிகை-பக். 31

# பின்னிணைப்பு-1

## பயன்பட்ட நூல்கள்

### (அ) தமிழ் நூல்கள்


அண்ணங்கராசாரிய சுவாமிகள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - திவ்வியார்த்த தீபிகை (கிரந்தமாலா அலுவலகம், காஞ்சிபுரம்)

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் : ஆசாரிய ஹிருதயம் - மணவாள மாமுனிகள் வியாக்கியானம் - தமிழாக்கம் (சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை)

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (மர்ரே கம்பெனி, ராஜம் பதிப்பு)

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு- திருவேங்கடத்தான் திருமன்றம், 32, பெருமாள் முதலித் தெரு, சென்னை-14

கிருஷ்ணவேணி அம்மையார், எஸ். : செம்பொருள் (திருமலை திருப்பதி தேவஸ்தானம்)

கோபால கிருஷ்ணமாசாரியார், வை.மு : கம்பராமாயணம் - உரை (தெளிசிங்க பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5)

சீராம தேசிகாசாரியார் : தேசிகப்பிரபந்தம் (ஒப்பிலியப்பன் சந்நிதி, கும்பகோணம்)

பிள்ளை உலக ஆசிரியர் அஷ்டாதச இரகசியங்கள் (சுதர்சனம்) வெளியீடு, புத்தூர், அக்ரகாரம், திருச்சி

சுப்பு ரெட்டியார், ந.: மலைநாட்டுத்திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், பாண்டி நாட்டுத் திருப்பதிகள், சோழ நாட்டுத் திருப் பதிகள் (2 பகுதிகள்) வட நாட்டுத் திருப்பதிகள் பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108)

சுப்பு ரெட்டியார், ந.: முத்தி நெறி (பாரி நிலையம் சென்னை-108)

சுப்பு ரெட்டியார், ந.: கண்ணன் பாட்டுத்திறன் (சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை-625001.

பாரதியார்: பாரதியார் கவிதைகள் (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, 6, பிலிப்ஸ் தெரு, சென்னை-600 001)

பிள்ளை உலக ஆசிரியர்: அஷ்டா தச இரகசியம் (ஸ்ரீ வைணவ, சுதர்சனம், புத்தூர், அக்ரகாரம், திருச்சி-17)

## (ஆ) ஆங்கிலம்

**Srinivasachari, P. N.:** *Philosophy of Visistadvaita* (Adayar Library, Madras).

**Subbu Reddiar, N.:** Religion and Philosopy of Nalayira Divya Prabandam with reference to Nammalvar, (S. V. University, Tirupati-517502-1977.

**Subbu Reddiar, N.:** Collected Papers (Paari Nilayam, Madras-108).

# பின்னிணைப்பு - 2

## பொருட்குறிப்பு அடைவு


அ

அசம்ஹிதா காரம்—7
அண்ணங்கராசாரிய சுவாமிகள்—133
அத்தியந்த பாரதந்திரியம்—120
அநந்ய கதித்துவம்—30
அநந்யார்ஹ சேஷத்துவம்—59, 62, 67
அநந்யார்ஹ சேஷபூதன்—88
அரசகுமாரன்—4, 94, 101
அர்த்தபஞ்சகம்—2
அர்த்தபஞ்சகஞானம்—6
அவஸ்தா திரய விருத்தி—59
அவ்யக்தம்—114
அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்—10
அறத்தொடு நிலை—64
அறிபவன்-அறியப்படும் பொருள்—8
அஷ்டாதச ரகஸ்யம்—10

ஆ

ஆகிஞ்சன்யம்—30
ஆசமனம்—40
ஆசாரிய ஹிருதயம்—9
ஆண்டாள்—9
ஆண்டான்—48
ஆண்டான் அடிமை உறவு—51
ஆதாரம்—111
ஆதார-ஆதேய உறவு—115, 118
ஆதிதைவிகம்—1
ஆதிபௌதிகம்—1
ஆதியாத்மிகம்—1
ஆதேயம்—111
ஆரமுல்லா—89
ஆழ்வார் திருநகரி—69
ஆழ்வார் நாயகி—77

இ

இரட்சக-இரட்சய சம்பந்தம்—24
இரட்சிக்கப்படுபவன்-இரட்சிப்பவன்—7
இறையனார் களவியல்—83

ஈ

ஈசுவர பாரதந்திரியம்—69
ஈடு—47
ஈட்டின் தமிழாக்கம்—101, 123

உ

உடையவன்-உடைமை—5, 153
உண்ணும்சோறு—128
உருத்திரன்-வாரணன்—35

ஊ

ஊக்கம்—3

எ

எம்பார்—48
எம்பெருமானார்—106

ஔ

ஔபாதிக பந்துக்கள்—24

க

கடல்நிலை—82
கட்டுவிச்சி—60
கண்ணன்—120
கண்ணபிரான்-கம்சன்—35
கண்ணனின் எளிமை—132
கம்சன்-உக்கிரசேனன்—25, 35

கா

காலதத்துவம்—100
காவளம்பாடி—46

கி

கிங்கரன்—5

கு

குசேலர்—125
குசேலோபாக்கியானம்—125
குலசேகரப் பெருமாள்
—11, 20, 31, 97, 117, 132
குலசேகராழ்வார்—36
குறுந்தொகை—21, 22

கை

கைகேயி-பரதன்—25
கைங்கரியம்—5, 37, 59

கொ

கொயினா மாத்திரை—83

ச

சக்கரவர்த்தித் திருமகன்—42
சத்துவசூனியம்—100
சமஷ்டி சிருஷ்டி—113
சம்பந்த ஞானம்—1, 115
சம்ஹிதாகாரம்—7
சரீர-சரீரி பாவனை—8, 100

சா

சாந்தீபினி—34

சி

சித்தோபாயம்—74
சிலந்திப் பூச்சி—116
சிறையன்—101

சீ

சீகாழி—46
சீவான்மா-பரமான்மா உறவு—98

சு

சுத்தசத்துவம்—100
சுவாதந்திரியம்—57
சுவம்-சுவாமிசம்பந்தம்—98

சே

சேஷத்துவம்—7, 39, 59, 85

சொ

சொத்து-சொத்துக்குரியவன் 8, 98

ஞா

ஞாதா-ஞேயன் உறவு—84, 91
ஞாதா—88
ஞாத்ருத்துவம்—85
ஞானத்துவம்—35
ஞானம—85, 89
ஞானாவத்தைகள்—59

ஞே

ஞேயன்—88

த

தந்தை-தனயன் உறவு 12,15,17
தந்தை-தாய் சேர்ந்த உறவு—18
தந்தை-மகன் உறவு—19

தா

தாங்குகின்றவன்-தாங்கப்படும்
பொருள்—8
தாய்ப்பாசுரம்—58, 69
தாய்ப்பாசுரங்கள்—66
தாரகம்—40

தி

திருக்காட்கரை—121
திருக்குடந்தை—29
திருக்குறளப்பன்—14, 89
திருக்குறுங்குடி—
12, 74, 78, 79, 89
திருக்கோட்டியூர்—106

திருக்கோளூர் —69
திருச்செங்குன்றூர்—51
திருநறையூர்—109
திருநெடுந்தாண்டகம்—15
திருப்பாவை— 8, 44
திருப்புலியூர்—63, 66
திருமங்கைமன்னன்—109
திருமங்கையாழ்வார் — 10, 17, 26, 30
திருமந்திரம்4, 6, 10, 11, 18, 38
திருமழிசையாழ்வார் -20, 116
திருமாலை—44
திருவரங்கக் கலம்பகம்—95, 96
திருவரங்கம்—71
திருவருள் கமுகு—66
திருவாறன் விளை—90
திருவிண்ணகர்—13
திருவித்துவக் கோட்டம்மான்—21

து

துவரைநாதன்—125

தெ

தென்திருப்பேரை—75, 76

தொ

தொண்டரடிப் பொடியாழ்வார்—18
தொலைவிலிமங்கலம்—63

தோ

தோழிப்பாசுரம்—58
தோழிப்பாசுரங்கள்—59

ந

நதிநிலை—82
நம்மாழ்வார்—4, 9, 18, 89
நவவித சம்பந்தம்—1, 6, 23
நளன்-தமயந்தி—25
நற்றிணை—108

நா

நாயக-நாயகி சம்பந்தம்—8
நான்முகன்—25

நி

நிகமனப்படி—7
நித்தியர்—99

ப

பகவத் விஷய காமம்—56
பக்திசாரர்—18
பரகால நாயகி—56, 68
பரஞானம்—56
பரபக்தி—57
பரமபக்தி—57
பரம்பொருள்—89
பராங்குசர் – 56
பராங்குசநாயகி—56, 76
பரிபாடல்—109
பருகும்நீர்—128
பதுமாசனி நாச்சியார்—89
பத்தர்—99
பரமான்மா சம்பந்தம்—9

பா

பாடகம்—3
பாண்டவர்கள்-திரௌபதி—25
பாம்பணையப்பன்—15
பாரதந்திரியம்—7, 57, 59, 159
பாரதியார் —23, 82, 129

பி

பிட்சாடனம்—40
பிரதிவாதிபயங்கரம்-52, 98, 133
பிரவேச ஹேது விசேடம்—10
பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்—95
பிறநாட்டான்—56

பு

புருஷார்த்தம்—120
புரைதிர் கிளவி—64

பெ

பெரியபிராட்டியார்—13
பெரியாழ்வார்—35, 59

பொ

பொய்கையாழ்வார்—87

போ

போக்கியம்—70
போக்தரு-போக்கிய உறவு—8, 113, 119
போஷகம்—70

ம

மகள் பாசுரம்—58
மணவாள மாமுனிகள்-9, 10, 88

மா

மாய்ப்பிரான்—67
மாறுகோள்இல்லாமொழி—64

மு

முத்தர்—99
முமுட்சுப்படி—39, 124

மி

மிச்ரதத்துவம்—100

லு

லுப்த சதுர்த்தி—38

வ

வள்ளுவர் பெருமான்—95

வி

விட்டு சித்தன்—4
வித்துவக் கோட்டம்மான். 36, 82
வியஷ்டி சிருஷ்டி—113
விஷய காமம்—56

வீ

வீடணன்-இராவணன்—25

வெ

வெறியாட்டாளன்—61
வெறியாட்டு—61
வெறி விலக்கு—60

வே

வேப்பிலை—83
வேலன்—61

வை

வைதிகன் பிள்ளைகள்—31
வைணவ சித்தாந்தம்—119

ஹ

ஹயக்ரீவ மூர்த்தி—29

## பேராசிரியர்
## டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

ஆசிரியம் :

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

இலக்கியம் :

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியத்தில்—அறம், நீதி, முறைமை
18. புதுவை(மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஒரு கண்ணோட்டம்
19. பாவேந்தர் - பாரதிதாசன் ஒரு கண்ணோட்டம்
20. திருக்குறள் தெளிவு
21. வாய்மொழியும் வாசகமும்
22. பல்சுவை விருந்து

சமயம், தத்துவம் :

(அ) விளக்க நூல்கள் :

23. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
24. சிலநோக்கில் நாலாயிரம்
25. வைணவமும் தமிழும்
26. சைவ சமய விளக்கு
27. ஆன்மிகமும் அறிவியலும்
28. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
29. கலியன் குரல்
30. கீதைக் குறள் (பதிப்பு)
31. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
32. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
33. கீதைப் பொழிவுகள்
34. கண்ணன் துதி
35. இராமர் தோத்திரம்.
36. முருகன் துதியமுது
37. நவவித சம்பந்தம்
38. அர்த்த பஞ்சகம்
39. திருமழிசையாழ்வாரின் பாசுரங்கள்—ஓர் ஆய்வு (பதிப்பு)

(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :

40. மலைநாட்டுத் திருப்பதிகள்
41. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
42. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
43. வடநாட்டுத் திருப்பதிகள்
44. சோழநாட்டுத் திருப்பதிகள்—முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)
45. சோழநாட்டுத் திருப்பதிகள்—இரண்டாம் பகுதி (ஷை)
46. தம்பிரான் தோழர்
47. நாவுக்கரசர்
48. ஞானசம்பந்தர்
49. மாணிக்கவாசகர்

திறனாய்வு:

50. கவிதையநுபவம்
51. பாட்டுத் திறன்
52. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
53. அகத்திணைக் கொள்கைகள்
54. புதுக்கவிதை-போக்கும் நோக்கும்
55. கண்ணன் பாட்டுத் திறன்
56. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு
57. பாரதீயம் (த.அ.ப. பெற்றது)
58. குயில் பாட்டு-ஒரு மதிப்பீடு
59. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
60. ஆழ்வார்கள் ஆரா அமுது
61. விட்டு சித்தன் விரித்த தமிழ்
62. பரகாலன் பைந்தமிழ்
63. சடகோபன் செந்தமிழ்
64. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
65. பாவேந்தரின் பாட்டுத்திறன்
66. பாண்டியன் பரிசு-ஒரு மதிப்பீடு

வரலாறு, தன் வரலாறு:

67. நினைவுக் குமிழிகள்—முதற் பகுதி
68. நினைவுக் குமிழிகள்—இரண்டாம் பகுதி
69. நினைவுக் குமிழிகள்—மூன்றாம் பகுதி
70. நினைவுக் குமிழிகள்—நான்காம் பகுதி
71. நினைவுக் குமிழிகள்—ஐந்தாம் பகுதி
72. வேமனர்
73. குரஜாட
74. சி. ஆர். ரெட்டி
75. தாயுமான அடிகள்
76. பட்டினத்தடிகள்
77. வடலூர் வள்ளல்
78. பிரதிவாதி பயங்கரம்
79. மலரும் நினைவுகள்
80. நீங்காத நினைவுகள்

அறிவியல் :

81. விண் வெளிப்பயணம்
82. மானிட உடல்
83. அணுவின் ஆக்கம்
84. இளைஞர் வானொலி
85. இளைஞர் தொலைக்காட்சி
86. அதிசய மின்னணு
87. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
88. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
89. அம்புலிப் பயணம்
90. தொலை உலகச் செலவு
91. அணுக்கரு பௌதிகம் ( செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
92. இல்லற நெறி
93. வாழையடி வாழை
94. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு)
95. தமிழில் அறிவியல்—(அன்றும் இன்றும் பெற்றது)
96. வானமண்டலக் காட்சி


ஆராய்ச்சி :

97. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
98. வைணவச் செல்வம் ( தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு )
99. வடவேங்கடமும் திருவேங்கடமும்
100. Religion and Philosophy of Nalayiram with special reference to Nammalvar.
101. Studies in Arts and Sciences : (61st Birth Day Commemoration Volume)
102. Collected Papers.

# பிழை-திருத்தம்

குறிப்பு : தயவு செய்து பிழைகளைத் திருத்திக் கொண்டு படிக்கவும்.


| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 13 | 21 | இருளாய் | இகுளாய் |
| 14 | பக்கத் தலைப்பு | தந்தை தனயன் உறவு | நவவித சம்பந்தம் |
| 16 | பக்கத் தலைப்பு | தந்தை தனயன் உறவு | நவவித சம்பந்தம் |
| 20 | 12 | திருமிசையாழ் வாரின் | திருமழிசையாழ் வாரின் |
| 22 | 7 | கலைஞர் - நீக்கு வார் இலன்- பெற்றிலன் | முற்றிலும் நீக்குக |
| 23 | 13 | கலைஞர் | களைஞர் |
| | 6 | பிரான் பூதன் | பிராணபூதன் |
| 51 | 11 | பற்றி | பற்றிய |
| 54 | 8 | கேட்டளவில | கேட்டளவில் |
| 60 | 6 | 4.5 | 4.6 |
| 64 | 13 | அசல் | அகப் |
| 66 | 29 | அழகிளையும் | அழகினையும் |
| 67 | 19 | காரண்ம் | காரணம் |
| 70 | 13 | பரமான்மை | பரமான்னம் |
| 71 | 11 | உண்னைவிட்டு | உன்னைவிட்டு |
| 74 | 23 | பாசுரம் | பாசுரம். |
| 78 | 10 | இளம்பிழை | இளம்பிறை |



வேங்கடம் வெளியீடுகள்

AD-13 (PLOT. 3354)

அண்ணா நகர் - சென்னை-600 040




**VENKATAM PUBLICATIONS**

AD-13 (PLOT. 3354)

ANNA NAGAR - MADRAS 600 040

# இந்நூலாசிரியரைப் பற்றி...



பிறப்பு : 27 - 8 - 1916

78-அகவையை எட்டிய இந்த நூலாசிரியர் பி. எஸ்சி., எல்.டி., வித்வான், பி.ஏ.,எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். **ஒன்பதாண்டுகள்** துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் (1941 - 1950), **பத்து ஆண்டுகள்** காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியரா கவும் (1950 - 60), **பதினேழு ஆண்டுகள்** திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும்(1960-77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி **பதினைந்து மாதங்கள்** (1978 பிப்ரவரி - 1979 ஜூன்) கலைக்களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியபிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (18), சமயம் (27), திறனாய்வு (16), அறிவியல் (17), ஆராய்ச்சி (6), வாழ்க்கை வரலாறு (13)—என்று 102 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும் சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசும்-ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக் கோன்' என்ற விருதையும், பண்ணுருட்டி வைணவசபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதையும் இவர்தம் தமிழ்ப் பணியைப் பாராட்டித் தமிழக அரசு திரு. வி. க. விருதையும், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.